நாவலர்

டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்

தோற்றம் : 11.07.1920 ❖ மறைவு : 12.01.2000

நூற்றாண்டு நிறைவு விழா சிலைத் திறப்பு சிறப்பு மலர்

நாவலர்

டாக்டர் இரா. **நெடுஞ்செழியன்** அவர்கள்



இளமைப்பருவத்தில் நாவலர்

மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள்........25-12-2021...........

முன்னுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டபடி மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் அமைச்சர் **நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினையொட்டி சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையில் நிறுவப்பட்டுள்ள நாவலர் அவர்களின் சிலை திறப்பு விழாவில் செய்தி - மக்கள் தொடர்புத்துறை சார்பில் தயாரிக்கப்பட்ட **"நாவலர் நூற்றாண்டு நிறைவு விழா சிலைத் திறப்பு சிறப்பு மலர்"** வெளியிடுவது சிறப்பாகும்.

"திராவிட இயக்கத்தின் சொல்லோவியம் - நடமாடும் பல்கலைக்கழகம்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் அழைக்கப்பட்ட நாவலர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை அறிவு சார்ந்த தமிழ் உலகமும், திராவிட இயக்கத்தின் தொண்டர்களும் கொண்டாடி மகிழ்வோம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அந்த வகையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் மொழி அறிவும், அசாத்திய பேச்சாற்றலும், சமுதாய நலனும், விடாத சுயமரியாதையும், பகுத்தறிவும் கொண்டு, தான் கொண்டிருந்த கொள்கையில், இலட்சியத்தில் இறுதிவரையில் உறுதி காத்து, அயராது மக்கள் பணியாற்றியவர் ஆவார். **"தலைசிறந்த பகுத்தறிவுவாதிகளில் ஒருவர், எனக்கே பாடம் கற்றுத்தரும் அளவிற்குத் தகுதி வாய்ந்தவர் நாவலர்"** என தந்தை பெரியார் அவர்களாலும், **"தம்பி வா, தலைமை ஏற்க வா, நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நல்லவரே நாவலரே"** என பேரறிஞர் அண்ணா அவர்களாலும், **"நாடு போற்றும் நாவலரே நற்றமிழ்க் காவலரே நடைமிடுக்கும், நகைச்சுவை எடுப்பும், நற்றமிழ்ப் பேச்சால் நாட்டோரைக் கவர்ந்திழுக்கும் நாவண்மை மிக்க நல்லவரே"** என முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களாலும், **"கற்பதில் நாட்டமும் - கற்றதைத் தெளிவதில் ஆர்வமும் - உண்மையை ஓர்வதில் ஊக்கமும், ஓர்ந்ததை விரித்துரைப்பதில் உவகையும் கொண்ட பண்பாளர்"** என இனமான பேராசிரியர் அவர்களாலும் போற்றிப் புகழப்பட்ட நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை எடுத்துரைக்கும் வகையில் இந்நூல் வெளியிடப்படுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

அன்புடன்,

(மு.பெ.சாமிநாதன்)

பொருளடக்கம்

வ. எண்	விவரம்	பக்கம் எண்
1.	**திராவிட இயக்கச் சிந்தனையில் இறுதிவரை இயங்கிய இன்பத் தமிழ்க் கருவூலம் நம் நாவலர்** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்	7
2.	**அமைச்சரவையில் உள்ள முதல் பகுத்தறிவுவாதி** தந்தை பெரியார் அவர்கள்	12
3.	**ஒழுக்கத்தை மதிப்பவர்** பேரறிஞர் அண்ணா அவர்கள்	15
4.	**சொல்லுக்குப் பெருமை சேர்த்தவர்** முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்	17
5.	**அமைதியின் உருவம், அடக்கத்தின் சிகரம்** முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்	18
6.	**நடமாடும் பல்கலைக்கழகம்** டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்.	21
7.	**நாவலர் தமிழ் மக்களின் காவலர்** திரு. பி.டி. இராஜன் அவர்கள்	24
8.	**தமிழினத்தின் நம்பிக்கைக்குரிய தலைவர்** டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள்	25
9.	**சட்டமன்றத்தின் சிறப்பான மரபுகளைக் காக்க வேண்டும்** டாக்டர் நாவலர் அவர்கள்	27
10.	**நாவலரும், நானும்** பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்	33
11.	**அமர்ந்த உரையன் அரிமா நடையன்** செந்தமிழ்ச் செல்வர் ஞா.தேவநேயப் பாவாணர் அவர்கள்	36

12. **நாவலருக்கு கழகம் காட்டும் மரியாதை**
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
திரு. துரைமுருகன் அவர்கள் 38

13. **அறிவியக்கத்தின் அசையாத்தூண்**
திரு. கி. வீரமணி அவர்கள் 40

14. **நாவலர் எழுதும் வரலாறு**
தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 43

15. **நாவலர் நால்வர்**
முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் 45

16. **நாவலர் பேச்சின் நாயகச் சிறப்பு**
திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள் 49

17. **நானிலம் காக்கும் நாவலர் நாநலம்**
பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு அவர்கள் 52

18. **A MAN WITH A HEART OF GOLD**
Malcolm S. Adiseshiah 56

19. **செயல் திறம் படைத்த செம்மல்**
கவியரசு கண்ணதாசன் அவர்கள் 58

20. **பூக்கடைக்கு விளம்பரம் ஏன்**
கவிஞர் வாலி அவர்கள் 59

21. **நாவலர் நூற்றாண்டு நிறைவு விழா ஓர் அரிமா நோக்கு**
திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் 61

22. **காற்றுள்ள வரை உன்றன் புகழ் வாழும்**
கவிச்சுடர் கவிதைப்பித்தன் அவர்கள் 75

23. **இளந்தாடி நரைக்கவில்லை**
திரு. ப. திருமாவேலன் அவர்கள் 79

24. **நூறாண்டு நாவலரே நுமையென்றும் போற்றுதுமே**
பேராசிரியர் மா. செல்வராசன் அவர்கள் 85

25. **இளம் பெரியாராக வேண்டும்**
திரு. பொன்னடியான் அவர்கள் 88

26. **தமிழால் வாழ்த்துகிறேன் – நீ தமிழ்போல் வாழியவே!**
முரசொலி மணிமொழி அவர்கள் 90

27. **இலக்கியத்தில் இடம்பெறும் நாவலர்**
கவிஞர்கோ புத்தனேரி சுப்பிரமணியம் அவர்கள் 92

28. **சந்தம் தவறாத சங்கீதத் தேனருவி**
திருமதி சௌந்தராகைலாசம் அவர்கள் 94

29. **நெடிய தோள் நாவலர்**
கவிஞர் கா.வேழவேந்தன் அவர்கள் 96

30. **புகழுடன் வாழ்கவே**
திரு. மு.பொன்னையா அவர்கள் 98

31. **நற்றமிழின் பூக்காடு**
கவிஞர் மணமேடு குருநாதன் அவர்கள் 99

32. **சட்டமன்றத்தில் நாவலர்**
டாக்டர் நாவலர் அவர்கள் 101

33. **அதிரா நெடுஞ்செழியன்**
பேராசிரியர் இரா.மதிவாணன் அவர்கள் 116

34. **துறவறப் புத்தன்போல் தொண்டுகள் புரிந்தவர்**
கவிஞர் பண்ணுருட்டி பரமசிவன் அவர்கள் 117

35. **நற்றமிழ் போல் வாழ்க நயந்து**
திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் 119

36. **நீண்டு செழித்த நெடுந்தகை**
கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் 120

37. **நாடாண்ட நால்வரின் ஓர் உருவம் நாவலர்**
தமிழ்மொழிக்காவலர் திரு. கீ.இராமலிங்கனார் அவர்கள் 121

38. **நற்றொண்டு தொடர்க**
கவிஞர் ஆனந்தம் அவர்கள் 122

39. **நாவலருக்கு முத்தமிழே பொன்முடி**
கவிஞர் கோ கோவை இளஞ்சேரன் அவர்கள் 124

40. **நாவலர் ஒரு புத்தகம்**
புலவர் கல்லை ஆ.துரை அவர்கள் 125

41. **நாவலர்**
பேராசிரியர் மு.நாகநாதன் அவர்கள் 127

42. **அந்தநாள் இந்தநாள்**
டாக்டர் நாவலர் அவர்கள் 131

43. **தமிழுக்கு சிறப்பு அளிக்கின்ற நிதிநிலை அறிக்கை**
டாக்டர் நாவலர் அவர்கள் 133

44. **நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள்**
படைத்த நூல்கள் 152

சிறப்பு வெளியீடு எண். 50

இலவச வெளியீடு

டிசம்பர் 2021

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி, சென்னை – 600 113.

திராவிட இயக்கச் சிந்தனையில் இறுதிவரை இயங்கிய இன்பத்தமிழ்க் கருவூலம் நம் நாவலர்

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

வரலாற்றில் இழந்த உரிமைகளை, வாழ்நாள் போராட்டங்களின் வழியாக மீட்டெடுத்து புதிய வரலாறு படைத்த திராவிட இயக்கத்தில் தனி முத்திரை பதித்தவர், நடமாடும் பல்கலைக்கழகம் எனப் போற்றப்பட்ட நாவலர் அவர்கள், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நம் தி.மு.கழகத்தை நிறுவிய பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு வழங்கிய அரிய படைக்கலன்களில் ஒருவராக நாவலர் திகழ்ந்தார். இனமானப் பேராசிரியர் அவர்களும், கே.ஏ.மதியழகன் அவர்களும் அதே பல்கலைக்கழகம் வழங்கிய படைக்கலன்கள்.

தமிழகத்தில் அன்றிருந்த பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் மாணவர்களைப் பேதம் பிரித்துப் பார்க்கும் வருணா சிரமப் போக்கு மிகுந்திருந்த காலம். அதன் பிரதிபலிப்பாக, குடந்தை அரசுக் கல்லூரியில் உயர்சாதி மாணவர்களுக்கு தனியாக தண்ணீர்ப் பானையும், மற்ற சமுதாயத்து மாணவர்களுக்கு தனிப்பானையும்

வைக்கப்பட்டிருந்தது; தாகம் கொண்டு மாணவர் ஒருவர், பேதம் அறியாமல் உயர் சாதி மாணவர்களுக்கான பானையில் இருந்த தண்ணீரைக் குடித்துவிட்டார் என்பதால் அது ‘பெரும் குற்றமாகக்’ கருதப்பட்டு அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த வருணாசிரம வன்கொடுமையினை எதிர்த்து, அந்தக் கல்லூரியில் பயின்ற தவமணி ராசன், கருணானந்தம் உள்ளிட்ட மாணவர்கள் போராடினர். சிதம்பரத்தில் திராவிட இயக்கப் பிரச்சார நாடகம் நடத்திய பேரறிஞர் அண்ணாவைச் சந்தித்தனர். அதன் விளைவாக, 01.12.1943 அன்று கும்பகோணத்தில் திராவிட மாணவர் கழகத்தைத் தொடங்கி வைத்தார் அண்ணா.

திராவிடர் கழகம் தொடங்கப்படுவதற்கு முன்பே திராவிட மாணவர் கழகம் தொடங்கப்பட்டது. தமிழகத்தின் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் அது கிளை பரப்பியது. 1944ஆம் ஆண்டு அதன் மாநில மாநாடு கும்பகோணத்தில் நடந்தபோது, அதில் பங்கேற்று எழுச்சியும் உணர்ச்சியும் மிகு உரையாற்றியவர் நாவலர் அவர்கள். அவருடன் இனமானப் பேராசிரியர், கே.ஏ.மதியழகன், இரா.செழியன், மா. நன்னன் உள்ளிட்ட பலரும் பங்கேற்று உரையாற்றினர்.

அதே காலகட்டத்தில்தான், பள்ளி மாணவராகக் கையில் தமிழ்க்கொடி ஏந்தி இந்திக்கு எதிராக முழங்கி வந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூரில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தைத் தொடங்கி நடத்தி வந்தார். அதன் ஆண்டு விழாவில், கலைஞரின் அன்பான அழைப்பின்பேரில் பங்கேற்று உரையாற்றிச் சிறப்பித்தவர் நாவலர்.

மாணவப் பருவத்திலிருந்தே இருவரும் திராவிடக் கொள்கைகளால் வடிவமைக்கப்பட்டனர். அதன்பின், திராவிட இயக்கத்தின் அரசியல் களத்தை அவர்களும் அவர்களைப் போன்றோரும் பேரறிஞர் அண்ணாவின் தலைமையின் கீழ் வடிவமைத்தனர். 1949இல் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் வலிமை மிகுந்த தூண்களில் ஒருவராக விளங்கியவர் நாவலர்.

1955இல் அண்ணாவின் அன்புக் கட்டளைக்கேற்ப, சொல்லின் செல்வர் ஈ.வெ.கி.சம்பத் அவர்கள் முன்மொழிய, தலைவர் கலைஞர் உள்ளிட்டோர் வழிமொழிய, கழகத்தின் பொதுச்செயலாளராக ஒருமனதாக நாவலர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1956இல் திருச்சியில் நடந்த கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டிற்குத் தலைமை வகித்த நாவலரை, “தம்பி வா.. தலைமை யேற்க வா.. உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம்” என்று அண்ணா அவர்கள் அழைத்தது, கழக வரலாற்றிலும் நாவலர் அவர்களின் வாழ்க்கையிலும் புதிய பொன்னான அத்தியாயமானது.

மும்முனைப் போராட்டம் தொடங்கி கழகம் நடத்திய போராட்டங்களில் பேரறிஞர் அண்ணாவுக்குப் பக்கபலமாக இருந்த நாவலர் அவர்கள், 1962இல் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார். எதிர்க்கட்சித் துணைத் தலைவராக கலைஞர் செயலாற்றினார். 1967 தேர்தலில் தி.மு.கழகம் மகத்தான வெற்றிபெற்று, முதன்முதலாக ஆட்சி அமைத்தபோது, பேரறிஞர் அண்ணா தலைமையிலான அமைச்சரவையில் நாவலர் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றார். தலைவர் கலைஞர் பொதுப்பணித்துறை மற்றும் போக்குவரத்துத்துறைகளுக்கு அமைச்சரானார்.

காலம் கருணையின்றி பேரறிஞர் அண்ணா அவர்களை 1969இல் நம்மிடமிருந்து பறித்துக் கொண்டபோது, கழகத்தின் எதிர்காலம் குறித்த அச்சம் நிலவியது. கட்சிக்கும் ஆட்சிக்கும் தனிச்சிறப்பான தலைமை தேவைப்பட்டது. கழக நிருவாகிகளும், தொண்டர்களும் கலைஞரை முன்னிறுத்தினர். இடைக்கால முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த நாவலர் அவர்கள் மனவருத்தம் கொண்டிருந்த அந்தச் சூழலில், கழகத்தைக் கட்டிக்காக்க வேண்டும் என்ற உணர்வுடன் தலைவர் கலைஞர் அவர்களும் மற்றவர்களும் மேற்கொண்ட முயற்சிகள், நாவலரின் எண்ண அலைகள் அனைத்தும் நெஞ்சுக்கு நீதியில் தலைவர் கலைஞர் அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீண்ட விவாதங்களுக்குப் பிறகு, கழகத்தின் தலைவராகக் கலைஞர், பொதுச்செயலாளராக நாவலர், பொருளாளராக மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகியோர் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டு, கழகம் எனும் பேரியக்கம் தொடர்ந்து பெரும் வளர்ச்சி காண்பதற்கு வழிவகுக்கப்பட்டது. பின்னர், தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் பங்கேற்ற நாவலர் அவர்கள், இந்தியாவின் முன்னோடித் திட்டங்கள் பலவற்றைத் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி நிறைவேற்றியபோது, அதற்குத் துணை நின்றவர்.

நெருக்கடி நிலை காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் நிலைமைகளினால், நாவலர் அவர்கள் தனி இயக்கம் கண்டு, பின்னர் மாற்று முகாமில் இணைந்தபோதும்,

திராவிட இயக்கக் கொள்கைகளைக் கைவிடாமல் காப்பாற்றியவர். தந்தை பெரியாரின் பகுத்தறிவு கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணாவின் தமிழ் உணர்வையும் தன் மேடை பேச்சுகளில் உணர்ச்சிபூர்வமாக எடுத்துரைத்தவர்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்

எனும் குறளுக்கு ஏற்ப, கேட்பவர்களை ஈர்க்கும் வகையிலும், தன் பேச்சைக் கேட்காதவரும் எப்போது கேட்போம் என எதிர்பார்க்கும் வகையிலும், இளைஞராக இருந்தபோது ‘இளந்தாடி’ நாவலராக மேடைகள் தோறும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கவிதைகளை எடுத்துரைத்து, கொள்கை முழக்கம் செய்தவர், தன் முதுமை வரையிலும் தனக்கென உருவாக்கிக்கொண்ட தனி பாணியுடன் திராவிடக் கொள்கைகளை முழங்கியவர்.

மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு, வைக்கத்தில் நடைபெற்ற பெரியார் சிலை மற்றும் அருங்காட்சியகம் திறப்புவிழா, புத்தாயிரம் ஆண்டில் பெரியார் திடலில் நடைபெற்றக் கூட்டத்தில் ஆற்றிய இறுதிப் பேருரை என அனைத்திலும் பெரியாரின் மாணவராக—அண்ணாவின் தம்பியாக அவர் முழங்கியது எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

அம்மையார் ஜெயலலிதாவும் அவரது அமைச்சர்களும் பதவியேற்றபோது, திராவிட இயக்கக் கொள்கைகளுக்கு மாறாக மற்றவர்கள் உறுதிமொழி ஏற்ற நிலையில், பேரறிஞர் அண்ணா காட்டிய வழியில், தலைவர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து பின்பற்றிவந்த முறையில், ‘உளச் சான்றின்படி உறுதிகூறி’ பதவியேற்றுக்கொண்டவர் நாவலர். தடம் மாறாத இத்தகைய கொள்கைப் பற்றினால், எந்நாளும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் அளப்பரிய அன்புக்குரியவராக அவர் திகழ்ந்தார். மாற்றுக் கட்சியில் அவர் இருந்தபோதும் ‘நாவலர்’ என்றே அவரை அன்புடன் அழைப்பார் நம் தலைவர்.

2000ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் நாள் நாவலர் அவர்கள் இயற்கை எய்தியதை அறிந்து வேதனையுற்ற கழகத்தலைவரும் அன்றைய தமிழக முதல்வருமான கலைஞர் அவர்கள் நேரடியாகச் சென்று, தன் கொள்கைச் சகோதரருக்கு இறுதி வணக்கம் செலுத்தினார். தலைவர் கலைஞர் வளர்த்துக் காத்த அரசியல் நாகரிகமும், திராவிட இயக்க வரலாற்றில் தனக்கெனத் தகுதி மிக்கதோர் இடமும் கொண்ட நாவலர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை திராவிட முன்னேற்றக் கழகம் வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம் என்ற உறவிலும் உரிமையிலும், சிறப்புடன் கொண்டாடி மகிழ்கிறது!

நன்றி : ‘முரசொலி’ நாளேடு
11.07.2020

❖ ❖ ❖



நாவலருடன் விசாலாட்சி அம்மையார்

அமைச்சரவையில் உள்ள முதல் பகுத்தறிவுவாதி

- தந்தை **பெரியார்** அவர்கள்



நாவலர் தலைசிறந்த பகுத்தறிவுவாதிகளில் ஒருவர். இப்போதுதான் அவர் பகுத்தறிவுவாதி என்பதில்லை. மாணவப்பருவம் முதற்கொண்டே நாவலர் பகுத்தறிவாளராகச் சிறந்து விளங்கி வருகிறார்.

அந்தக் காலத்தில் கல்வி என்றால் எப்படி இருந்தது? கல்வி எதற்காகக் கற்கப்பட்டது? பரீட்சையிலே பாஸ் பண்ண வேண்டும். பாஸ் பண்ணியதும் ஏதாவது ஒரு வேலை தேட வேண்டுமென்பதுதான் பெரும்பான்மையான மாணவர்களுக்குக் கல்வியின் இலட்சியமாக இருந்தது. ஏதோ சில பிரபுக்களின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் மட்டும் வேண்டுமானால் இதற்கு விதிவிலக்காக இருந்தார்கள் எனலாம். அவர்கள் சும்மா பெருமைக்காகப் படித்தார்கள். மற்றவர்கள் அனைவரும் உத்தியோகத்திற்காகவே கல்வி கற்றார்கள்.

நமது நாவலர் மிகவும் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர். அவரது தந்தையார் பெரிய வருமானம் தரும் பதவி எதிலும் இருக்கவில்லையென்ற போதிலும் நாவலர் தமது கல்வியை முடித்துக்கொண்டதும் நேராக என்னிடம் வந்தார்.

நான் இன்றைக்கு இருப்பது போல அன்றைக்கு இருக்கவில்லை. இன்றைக்குப் பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள் எல்லாங்கூட என்னிடம் வந்து ‘‘அய்யா, எனக்கு உதவி செய்யுங்கள்’’ என்று கேட்கிறார்கள். ஆனால் அன்றைக்கு நான் அப்படிப்பட்ட நிலையில் இருக்கவில்லை. ‘‘நான் தங்களுடன் இருந்து தொண்டு செய்கிறேன்; எனக்குச் சோறு மட்டும் போட்டால் போதும்; வேறு சம்பளம் எதுவும் தர வேண்டாம்’’ என்று நாவலர் சொன்னார். எம்.ஏ. படித்தவர் இப்படிச் சொன்னார். இன்றைக்கு இருப்பது போல எம்.ஏ. படிப்பு அவ்வளவு சல்லிசானதாக அப்போது இருக்கவில்லை.

நாவலரும், நாவலர் போன்று என்னிடம் வேலைக்கு என்று சேர்ந்தவர்களும் என்னிடம் வேலை எதுவும் பழகவில்லை; எனக்கே கற்றுத்தரும் அளவுக்கு அவர்கள் இருந்தார்கள்; எனக்கே பாடம் கற்றுத்தரும் அளவுக்குத் தகுதி படைத்தவர்களாக இருந்தார்கள்.

அப்போதெல்லாம் பகுத்தறிவுப் பிரச்சாரம் என்பது நாத்திகப் பிரச்சாரம் என்று அழைக்கப்பட்டது. அதனை இப்போதுதான் அனைவருமே பகுத்தறிவுப் பிரச்சாரம் என்கிறார்கள். அப்போது நாத்திகப் பிரச்சாரம் செய்வது என்பது இலகுவான வேலையல்ல: மிகவும் ஆபத்தானப்பணி. அப்போதிருந்து இப்போது வரை நாவலர் நல்ல பகுத்தறிவாளராகவே இருந்து வருகிறார்.

நமது அமைச்சரவையில் உள்ள முதல் பகுத்தறிவுவாதி நாவலர் எனலாம். அவரது பேச்சிலோ, பிற எந்த இடத்திலோ ஒரு சந்துபொந்துகூட இல்லாதபடி பகுத்தறிவுவாதியாக நாவலர் திகழ்கிறார். எத்தனையோ பேருக்குப் பாராட்டுக் கூட்டங்களைப் பகுத்தறிவாளர் கழகம் நடத்தியிருக்கலாம். ஆனால், நாவலரைப் பாராட்டுவதற்காக அமைந்த இந்தக் கூட்டந்தான் நூற்றுக்கு நூறு பகுத்தறிவாளர் ஒருவரைப் பாராட்டும் கூட்டமாக உள்ளது.

என்னுடைய சிக்கனத்தை இங்கே எடுத்துக் கூறி, என்னைப் போல நாவலரும் சிக்கனமானவர் என்று குறிப்பிட்டார்கள். சிக்கனமாக இருப்பதில் என்ன தப்பு ? நான் ஏன் சிக்கனமாக இருக்கிறேன் ? நான் என்ன வகையில் அதிகமாக அனுபவிக்கிறேன் ? சாப்பாட்டில் மிகவும் சிக்கனமாக இருக்கிறேன். என் சொத்துக்கள் என் குடும்பத்துக்கா என்றால், அதுவும் இல்லை.

நிற்க, பகுத்தறிவாளர்களாகிய நாம் சும்மா பிரச்சாரம் மட்டும் செய்து கொண்டிருந்தால் போதாது. செயலில் இறங்கியாக வேண்டும். கிளர்ச்சிகள் ஏதாவது நாம் செய்ய வேண்டும். நாம் நமது இழிவுகளைப் போக்கிக்கொள்ள, நமது சமூகத்திற்கு

ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை நீக்கிக்கொள்ளக் கிளர்ச்சி செய்யத்தான் வேண்டும். சில சீர்திருத்தப் பணிகள் அரசினரால் செய்யப்பட்டுத்தான் வருகின்றன என்றாலும், சில நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாமல் சட்டம் அதன் குறுக்கே நிற்கிறது.

நாம் கிளர்ச்சி நடத்த வேண்டுமென்பது வெற்றியை மட்டுமே மனத்தில் கொண்டுதான் என்று இருக்கக் கூடாது. சமுதாய மாற்றம் செய்வதற்காக எந்தக் கஷ்டங்கள் வந்தாலும் அவற்றை மிகவும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம் என்பதைக் காட்டிக்கொள்ள நாம் கிளர்ச்சி நடத்தியாக வேண்டும்.

பெயரளவில் பகுத்தறிவாளராக இருந்தால் போதாது. நமது சமூகத்திற்கு எதிரான காரியங்களை ஒழிக்க முயற்சி செய்ய வேண்டும். நாம் இப்படிப்பட்ட கிளர்ச்சி செய்வதால் நமது ஆட்சிக்கு ஏதாவது ஆபத்து நேரும்படி ஆகலாம். அப்படிப் பதவிக்கு ஆபத்து வருகிறது என்றால் அதை வரவேற்க நமது அமைச்சர்கள் தயாராக இருக்கிறார்கள். பதவியே பெரிது என்று அவர்கள் யாவரும் எண்ணிக்கொண்டிருக்கவில்லை; என்றாலும், அவர்கள் பதவியில் இருக்க வேண்டுமென்பதிலே நமக்குத்தான் அக்கறை அதிகம். எனவேதான், வேறு எந்த வழியில் சமூக சீர்திருத்தப்பணிகளை நிறைவேற்றலாம் என்று நாம் சிந்திக்கிறோம்.

நாவலருக்கு டாக்டர் பட்டம் வழங்கியிருப்பது மிகவும் பொருத்தமானது. இந்தப் பட்டம் மட்டுமல்ல. இன்னும் பல பெருமைகள் நாவலருக்குக் கிட்ட வேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோம்.

(நாவலர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றமைக்காகப் பகுத்தறிவாளர் கழகத்தால் 01.03.1972ஆம் நாளன்று சென்னை பெரியார் திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரை – நன்றி "விடுதலை")

நன்றி : நாடுபோற்றும் நாவலர் 56ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர் 11.07.1975.

❖ ❖ ❖

ஒழுக்கத்தை மதிப்பவர்

- பேரறிஞர் **அண்ணா** அவர்கள்

நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் நம் கழகத்திற்குப் பொதுச் செயலாளராகக் கிடைத்திருக்கிறார். அவர் இடுகின்ற ஆணைகளை எல்லாம் ஏற்று நடத்துவதில், நான் பெருமை கொள்கிறேன். நமது தோழர்களும் பெருமைகொள்ள வேண்டும்.

அப்படி ஏற்று, கடமைகளைச் செய்வதில் கட்சிக்கு ஊறு ஏற்படும் என்று யாருக்காவது கிலி இருந்தால் – பயமிருந்தால்– தாராளமாக அவரிடம் வந்து விவாதிக்கலாம், எடுத்துக்காட்டலாம். ஆனால், அந்த வீண் பயத்தைச் சாக்காகக்கொண்டு, "ஜனநாயகத்தை நாங்கள் நிலை நாட்டுகின்றோம்" என்று யாராவது விவாதங்களில் ஈடுபடுவார்களேயானால், அவர்களுக்கும் பொதுச் செயலாளருக்கும், கழக தோழர்களுக்கும் கூறுகிறேன். கடைசி அதிகாரத்தைப் பெற்றிருக்கிற மக்களிடத்தில் அந்த விவாதத்திற்குரிய விவகாரங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய ஜனநாயகக் கட்டம் ஏற்படும். அதற்கெல்லாம் வழிவைத்துக் கொள்ளாமல்,

அவருடைய பதவிக் காலத்தில், ஜனநாயகத்தை வளர்ப்பதற்கு அவரோடு கலந்து பேசி, நல்ல திட்டங்களை அவருக்கு எடுத்துச் சொல்லி, அவர் தருகின்ற திட்டங்களை ஏற்று, அவர் இடுகின்ற ஆணைகளைத் தலைமேற்கொண்டு கழகத்தை மேலும் வளர்த்து, பொதுத் தேர்தலிலேயும் நாம் மகத்தான வெற்றி பெறுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, நம்முடைய நல்லாற்றலைப் பயன்படுத்துவதற்கும் நாம் எல்லாம் இந்த மாநில மாநாட்டில் உறுதிபெற்றுக் கொள்வோமாக!

“நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நாவலரே! கழகத்தைக் கட்டிக்காக்கும் காவலரே! எனது தம்பிமார்களில் மூத்தவரே! கழகத்தைக் கட்டிக் காப்பதற்காகப் பொதுச் செயலாளராக ஆக்கப்பட்டிருப்பவரே! தலைவரே! உம்முடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க நான் என்றும் தயாராக இருக்கிறேன்” என்பதை எடுத்துச் சொல்வதன் மூலம், மற்ற அத்தனை பேரும் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க இருக்கின்றார்கள் என்பதையும் நான் கூறுகிறேன்.

*நன்றி : நாடு போற்றும் நாவலர் **56**ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர்*

11.05.1975

❖ ❖ ❖

சொல்லுக்குப் பெருமை சேர்த்தவர்

- முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்

“நாவலர்’’ என்றால் நாவன்மை படைத்தவர் என்று பொருள். சொல் வல்லார் அனைவரையும் குறிக்கும் பொதுச்சொல் அது. ஆனால், தமிழ்கூறும் நல்லுலகில் “நாவலர்’’ என்றால் அது நடமாடும் பல்கலைக்கழகமென அண்ணா போற்றிய நமது நாவலரை மட்டுமே குறித்து நிற்கும். அந்தச் சொல்லுக்குச் சொந்தக்காரர் அவர் ஒருவரே. அச்சொல்லுக்குப் பெருமை சேர்த்தவரும் அவரே.

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு’’ என்று அவர் முழங்கும் போது நாடே முழங்குவதுபோல அது எதிரொலிக்கும். நடைமிடுக்கும், நகைச்சுவை எடுப்பும், மோனை எதுகைகளில் மூழ்கித் தோய்ந்து மொத்தமாய்க் கலந்து மெத்தச் சுவைக்கும் அவரது பேச்சும் நாட்டோரைக் கவர்ந்தது; அவருக்கு நீடுபுகழ் சேர்த்தது.

அவரது தியாகமும் தொண்டும், நற்றமிழர் நெஞ்சங்களில் அவருக்கு நல்லதோர் இடத்தைப் பெற்றுத் தந்தன. 30 ஆண்டுகட்குமுன் அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவராயிருந்தபோது, எனது திருவாரூர் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற ஆண்டுவிழாவுக்கு அவரை அழைத்தேன். அன்று தொடங்கிய எங்கள் பிணைப்பு இன்றளவும் இளகாமல் இணைந்து நிற்கிறது.

நன்றி: நாடு போற்றும் நாவலர் 56ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர்
11.05.1975

அமைதியின் உருவம் அடக்கத்தின் சிகரம்

- முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்

பொறுமையின் கடலாய் – அமைதியின் உருவாய் – அடக்கத்தின் சிகரமாய் இருப்பவர் நாவலர். அண்ணாவின் வழியில் என்றும் நடப்பவர். நாவலர் பெரியாரின் பாசறையில் படித்து அண்ணாவின் நிழலில் வளர்ந்தவர். நம்முடைய அன்பிற்குரியவர் நடமாடும் பல்கலைக்கழகமாம் நாவலர் அவர்கள். நாவலர்பால் இந்தத் தமிழ்ச் சமுதாயம் எவ்வளவு மதிப்பை வைத்திருக்கிறது; பேரறிஞர் அண்ணா அவர்கள் நாவலரிடத்திலே எவ்வளவு பேரன்பு வைத்திருந்தார் என்பதையெல்லாம் நாடு மறந்திடவில்லை.

திருச்சியில் நடைபெற்ற தி.மு.கழக மாநில மாநாட்டில் – அப்போதுதான் கழகத்தின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த நாவலர் அவர்கள் அந்த மாநாட்டிற்கு முறைப்படி தலைமை வகிக்க வேண்டிய கட்டத்தில், நாவலரை வழிமொழிந்து பேசிய அண்ணா அவர்கள், நாவலரைப் பற்றி நீண்ட நேரம் எதுவும் பேசாமல் இரண்டொரு வாக்கியங்களிலே குறிப்பிட்டபோது, “தம்பி, வா, தலைமை ஏற்க வா, உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம், வா!”என்றார்கள்.

அண்ணா அவர்கள் எப்படி நாவலரைப் பார்த்து “தம்பி வா, தலைமையேற்க வா” என்று அழைத்தாரோ, அதே வழியைத்தான் நாவலரும் பின்பற்றி என்னைப் பார்த்து, தம்பி வா, தலைமை ஏற்க வா” என்று ஒத்துக் கொண்டார். அண்ணா வழியில் பயணம் நாவலர் நடத்துகிறார் என்பதற்கு இது சரியான அடையாளமாகும்.

நாவலருடைய வாழ்க்கையில் எவ்வளவு பெரும் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது என்பதும், இந்த இயக்கத்தை வளர்ப்பதற்கு தமிழகத்திலே உள்ள குக்கிராமங்கள், பட்டிதொட்டிகள், பட்டினக் கரைகள், சிற்றூர்கள் – சந்து பொந்துகள் – இங்கெல்லாம் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்ட மக்கள் 10 பேராக இருந்தாலும், நூறு பேராக இருந்தாலும், அவர்களிடையே மணிக்கணக்கில் தந்த நீண்ட விளக்கங்கள்தான் தி.மு.கழகத்தை சென்னைக் கோட்டையிலே ஆளும் கட்சியாக உட்கார வைத்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

பேராசிரியர் அவர்களும், நாவலரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றாக இருந்தார்கள். நாவலர் அவர்களும், நானும் கோவையில் சில காலம் ஒன்றாக வாழ்ந்தோம். அந்த நேரத்தில் நானும் அவரும் 7 கல் 8 கல் தொலைவு என்று நடந்தே பல கிராமங்களுக்குச் சென்று நடத்தி வைத்த திருமணங்கள், பேசிய பொதுக்கூட்டங்கள், பிறகு இரவு 1 மணி, 2 மணிக்குத் திரும்பி நடந்தே வந்த அந்த இலட்சியப் பயணங்களையெல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

நாவலருடைய தமிழும், அந்தத் தமிழை எடுத்தாளுகின்ற அவருடைய திறனும் – ஒருநாளைக்கு 20 அல்லது 30 நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிற உள்ள உறுதியும், உடல் வலிவும், கழகத்தைக் கட்டிக் காத்த காரணங்களில் ஒன்று என்பதை யாராவது மறந்து விடுவார்களானால் அவர்கள் நன்றி மறந்தவர்களாவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாவிலே இருக்கிற மற்ற அரசியல் கட்சிகளை விட கட்டுக்கோப்பு மிகுந்த கட்சியாக விளங்குகிறது. எனக்கும், நாவலருக்கும், பேராசிரியருக்கும் இடையில், இன்னும் கழகத்திலே உள்ள மூத்த தலைவர்களிடையே வேறுபாடுகளை உருவாக்க எவ்வளவோ பேர் முயன்றிருக்கிறார்கள். கழகத்தின் கட்டுப்பாடு குலையாதா? இவர்களுக்குள்ளே வேற்றுமை எழாதா? முரண்பாடுகள் முளைக்காதா? யாராலும் அசைக்க முடியாத இந்தக் கோட்டையை அசைத்து விடமாட்டோமா? என்றெல்லாம் பலரும் முயற்சி செய்து பார்த்தார்கள்.

பெரியார் அவர்களோடு, பேறறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கிற எனக்கோ, நாவலர் அவர்களுக்கோ, பேராசிரியருக்கோ அருமை நண்பர் என்.வி.என். அவர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ எவ்வளவு தொடர்பு, எவ்வளவு காலமாக என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திடீர் தலைவராக ஆனவர்கள் நானோ, நாவலரோ, பேராசிரியரோ அல்ல. இந்த இயக்கத்தோடு சேர்ந்து வளர்ந்தோம். பெரியாருடைய பாசறையிலே இருந்து வளர்ந்தோம். பெரியார் அவர்களுடைய பள்ளிக் கூடத்திலே படித்தோம். அண்ணா அவர்களுடைய நிழலில் வளர்ந்தோம். அறிஞர் அண்ணா அவர்களோடு அமர்ந்து அரசியல் பேசினோம். அரசியல் சிந்தனைகளை செய்தோம்.

அப்படி வளர்ந்தவர்கள் நாங்கள். அப்படி வளர்ந்தவர்களாகிய எங்களிடத்திலே பொறுமைக் கடலாக, அமைதியின் உருவமாக, அடக்கத்தின் சிகரமாக இருப்பவர்தான் நடமாடும் பல்கலைக்கழகமாக இருக்கும் நாவலர் அவர்களாவார்கள்.

நன்றி : ‘முரசொலி’ நாளேடு
11.07.2020

❖ ❖ ❖

நினைவில் நாவலர்

நடமாடும் பல்கலைக்கழகம்

- டாக்டர் **எம்.ஜி.ஆர்.** அவர்கள்

பேரறிஞர் அண்ணா அவர்களாலேயே 'நடமாடும் பல்கலைக்கழகம்' என்று அழைக்கப் பெற்றவர் நமது மதிப்பிற்குரிய நாவலர் அவர்கள்!

அவருடைய பிறந்தநாள் இன்பம் நிறைந்த நாளாக—துன்பம் துயரமெல்லாம் பறந்த நாளாக—அந்தத் தூய தொண்டுள்ளத்தில் அமைதி சிறந்த நாளாக அமைந்திட, வேண்டுமென்று முதலில் என் இதயநிறைவான நல்வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பகுத்தறிவுப் பகலவன்—சீர்திருத்தச் செம்மல் நமது அய்யா அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டிது. இந்த ஆண்டில் வருகின்ற நாவலர் அவர்களின் பிறந்தநாள் விழாவானது —அதனையொட்டி அமைகின்ற மணிவிழாவானது வேறு எந்த ஆண்டின் விழாவிலும் தனிசிறந்து அமைவதாகும்.

அறியாமை இருள் அகன்றிட, அறிவு ஒளி பரவிட, வளம் பெருகி வறுமை நீங்கிட, துன்பம் போக, இந்நாட்டு மண்ணில் இன்பம் மிக, வாட்டம் நீங்கி வாழ்வு மலர, அய்யா அவர்கள் சுயமரியாதைச் சுடர் கொளுத்திக் குரல் கொடுத்த நேரத்தில், அப்பெரியாரின் பாசறையிலே இளந்தாடி வேந்தராக –பாசமிகு, நல்தொண்டராக விளங்கியவர்தாம் நமது நாவலர் அவர்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் நாவலர்தம் அறிவுக்கு – ஆற்றலுக்கு– உழைப்புக்கு– நேர்மைக்கு– நாணயத்திற்கு– ஒழுக்கத்திற்கு – உயர்விற்கு– அன்புக்கு– அடக்கத்திற்கு என்றுமே பெரும் மதிப்பளித்து வந்தார்கள்.

அந்தக் காரணத்தினால்தான் 1956 மேத் திங்களில் நடைபெற்ற திருச்சி மாநில மாநாட்டிலே தாம் வகித்துவந்த பொதுச்செயலாளர் பொறுப்பினை நாவலர் அவர்களுக்கு அளித்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அகமகிழ்ந்து, “தம்பி வா, தலைமை ஏற்று நடத்த வா! உன் ஆணைக்கு நாங்கள் எல்லோரும் அடங்கி நடப்போம்!” என்று குறிப்பிட்டார்கள். மறுநாள் நிகழ்ச்சியின்போது அண்ணா அவர்கள் அதுபற்றிய விளக்கமும் தந்தார்கள்:

“நேற்று நான் நமது பொதுச்செயலாளரை தம்பி வா! தலைமை தாங்க வா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன் வா!” என்று கூறியது வெறும் அலங்காரத்திற்காக அல்ல, அந்த நிலை, நம்முடைய கழகத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது.அது மேலும் வளர வேண்டும் என்பதுதான் எல்லோருடைய உண்மையான நம்பிக்கை. அப்படி வளர்ந்தால்தான் நம்முடைய கழகம் நல்ல சனநாயகப் பண்போடு திகழ முடியும்!” என்று அண்ணா அவர்கள் விளக்கிச் சொன்னார்கள்.

1939ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழக இடைநிலை முதல் வகுப்பு மாணவராகப் பயின்ற பட்டுக்கோட்டை இரா.நாராயணசாமி அவர்கள், தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதைப் பிரச்சாரத்தாலே கவர்ந்திழுக்கப்பட்டு, அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்களின் வாதத்திறத்தை அடியொற்றி நடந்து, ‘நெடுஞ்செழியனாகி’, மண்டும் மதங்கள் அண்டா நெருப்பாய்–படரும் சாதிப் படைக்கு மருந்தாய்–செந்தமிழ்த் தேனீயாய்–பைந்தமிழ்த் தேர்ப்பாகனாய் வளர்ந்து–இன்று நம் இதயம் கவர்ந்தவராய்–நல்ல தமிழ் நாவலராய்க் காட்சியளிக்கிறார்கள்.

நுனிப்புல் மேய்ந்துவிட்டுத் தலைகால் புரியாமல் குதிக்கின்றவர்களைப் பார்க்கின்றோம். அப்படியல்ல நாவலர் அவர்கள், எதையும் ஆழ்ந்து சிந்திக்கும், ஆற்றலாளர், அழகுதமிழ்ப் பேச்சாளர்!

“கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்”

என்று வள்ளுவப் பெருந்தகை அவர்கள் சொன்னதற்கேற்ப, நாவவர் அவர்கள் சொல்லாற்றல் மிக்கவர். வாதத் திறமையில் அவரை வெல்ல அவராலேயே முடியும் என்கிற அளவிலே ஒப்பாரும் மிக்காரும் அற்றுத்திகழும் உயர்வாளர்.

தனக்கெனத் தனிப்பாணி வகுத்துக் கொண்டு பேச்சையும் எழுத்தையும் கையாளும் பெருந்தன்மையாளர்!

நாவலரின் எழுத்துக்களிலே இதமான தென்றலை மட்டுமல்ல; எரிமலையின் வேகத்தையும் உணரலாம். அவர்தம் பேச்சிலே புயலை மட்டுமல்ல;பைந்தமிழ் இலக்கியத்தின் பாங்கையும் உணரலாம்.

தேனியில் அவர் தலையில் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டுக் கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்ட பின்னாலேயும், ஏற்றுக் கொண்டிருந்த கொள்கைக்காக எதையும் தாங்கும் இதயத்தோடு தொண்டுப் பயணத்தைத் தொடர்ந்து நடத்திப் பெருமை கொண்ட நாவலர் அவர்கள் பதவிப்பற்று சிறிதும் அற்றவர்.

மக்கள் மன்றத்திலே என்றும் மங்காப் புகழோடு திகழும் நாவலர் அவர்களை–மக்களோடு ஒன்றிப்போன ஓர் உத்தமரை இன்னும் பல்லாண்டு நீடு வாழ நெஞ்சார வாழ்த்துகிறேன்.

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர்–1980

❖ ❖ ❖

நாவலர் தமிழ் மக்களின் காவலர்

- திரு. **பி.டி.இராஜன்** அவர்கள்

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்களின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையையும், நாவன்மையையும் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். தம் பள்ளிப் பருவத்திலிருந்தே, நாவலர் தம் வாழ்க்கையைப் பகுத்தறிவின் அடிப்படையில் அமைத்துக் கொண்டார். எந்தப் பிரச்சினையையும் அறிவியல் நோக்கோடு அவர் அணுகுவார்.

மக்கள் சேவையே மகேசுவர பூசை என்ற உயர்ந்த கருத்தைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர், நம் நாவலர்.

இன்றைய அறிவியல் உலகில் உள்ள முன்னேற்றமான கருத்துகளும், விஞ்ஞான ஆராய்ச்சியும், பொறியியல் நுட்பங்களும் நம் மக்களிடத்துப் பரவ வேண்டுமென்ற நோக்கத்தோடு, அமைச்சர் பதவியிலிருந்து தம் பொறுப்புகளை ஆற்றுபவர்.

தம் கருத்துக்களை நிறைவேற்றுவதற்குத் தகுந்த சாதனமாய் அமைந்துள்ள கல்வித்துறைக்கு, நம் நாவலர் அமைச்சராக அமர்ந்து இருப்பது, தமிழ் மக்களின் பேறு என்று நான் கருதுகிறேன்.

நாவலருடைய தன்னலமற்ற தூய பணி பல்லாண்டு, பல்லாண்டு நம் மக்களுக்குக் கிடைக்க வேண்டுமாய் நான் பிரார்த்திக்கிறேன்.

நன்றி : நாடு போற்றும் நாவலர் 56ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர்
11.05.1975

தமிழினத்தின் நம்பிக்கைக்குரிய தலைவர்

- டாக்டர் **ம.பொ.சிவஞானம்** அவர்கள்

நாவலர் அவர்களை முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். அவருடைய ஒழுக்க வாழ்வுதான் நான் அவரைப் பெரிதும் மதிப்பதற்குக் காரணமாகும். அதிகாரப் பதவியிலிருந்தாலும் "அதிகார போதை" அவருக்கு ஏற்படுவதில்லை.

சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் எதிர்க்கட்சியினருடைய கடுமையான தாக்குதல்களுக்குப் பதிலளித்து நாவலர் பேசி, நான் எத்தனையோ முறை கேட்டிருக்கிறேன். அவர் பொறுமை இழந்து விடுவதில்லை. கோபப்பட்டுக் கடுஞ்சொல் வழங்குவதில்லை; இன்சொல் வழங்கியே எதிர்க்கட்சியினரைத் திருப்திப்படுத்த முயலுகிறார். இந்தப் பணியிலிருந்து ஒரு சந்தர்ப்பத்தில்கூட அவர் வழுக்கி விழுந்ததில்லை. மேடைப் பேச்சில்கூட அவர் மாற்றாருடைய மனதைப் புண்படுத்தும் சுடுசொற்களைப் பயன்படுத்துவதில்லை.

நாவலர் அவர்கள் தமிழில் அழுத்தமான பற்றும், ஆழமான பயிற்சியும் உடையவர் என்பது நாடறிந்ததாகும். மணிக்கணக்கில் பேசினாலும், அவர் சோர்வடைவதில்லை. விஷயங்களை நுணுகி, நுணுகி ஆராய்ந்து கேட்போரை அறிவாளிகளாக்கும் நிலையில் அவர் பேசுகிறார். வளமான கருத்துகளும், சுவையான சொற்களும் அவருடைய நாவில் நர்த்தனமாடுகின்றன.

ராஜாஜி அவர்களும் நாவலரிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். நாவலரைப் பற்றி என்னிடம் தனித்துப் பேசியபோதெல்லாம் அவர்பால் தமக்குள்ள மரியாதையை ராஜாஜி வெளிப்படுத்தியதுண்டு. நம் காலத்தில் வாழ்கிற பெரியார்களுள் நாவலரும் ஒருவராவார். அவருடைய எதிர்காலம் இன்றிருப்பதிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பது என் விருப்பம். தமிழினத்தின் நம்பிக்கைக்குரிய ஒரு தலைவராக நாவலர் விளங்கி வருகிறார்.

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர்–1980

❖ ❖ ❖

சட்டமன்றத்தின் சிறப்பான மரபுகளைக் காக்க வேண்டும்

- டாக்டர் **நாவலர்** அவர்கள்

மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் அவைத் தலைவராகத் தாங்களும், துணை அவைத் தலைவராக மதிப்பிற்குரிய நண்பர் திரு. பார்த்தசாரதி அவர்களும் மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவராலும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பாங்கு கண்டுள்ளபடி நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த மன்றத்தின் அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தங்களுக்கும், துணை அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு. பார்த்தசாரதி அவர்களுக்கும் என் சார்பாகவும், நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சியின் சார்பாகவும் வாழ்த்துதல்களையும், பாராட்டுதல்களையும், போற்றுதல்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மன்றம் தங்களுடைய சீரிய தலைமையின்கீழ் சீர்பெறும்–சிறப்புப்பெறும். பொலிவு பெறும்–வலிவுபெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அந்த அளவுக்குத் தகுதியும்–திறமையும், அறிவும்–ஆற்றலும், அதற்கேற்ற உணர்வும்–உழைப்பும் தங்களிடத்தில் நிரம்பப் புதைந்து கிடக்கின்றன என்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சிறந்த வழக்கறிஞராக இருந்து அரும் பணியாற்றி இருக்கிறீர்கள்; அதைப்போன்று துணை அவைத் தலைவர் அவர்களும் சிறந்த வழக்கறிஞராக இருந்து அரும்பணியாற்றி இருக்கிறார்கள். நீங்கள் இருவரும் இந்தச் சட்டமன்றத்திலே இதற்கு முன்னாலும் அங்கம் பெற்றிருந்து, அரும்பணிகள் பல ஆற்றியிருக்கிறீர்கள் என்பதை நான் கேள்விப்பட்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். இந்த மன்றத்தின் அவைத் தலைவராகவும், துணை அவைத் தலைவராகவும் நீங்கள் இருவரும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது பூரிப்பும் பெருமையும் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

இந்த மன்றம் பன்னெடுங்காலமாகவே பேரோடும் புகழோடும் நிலைபெற்று வந்திருக்கிறது என்பதை வரலாறு நமக்கு நல்ல முறையில் எடுத்துக் காட்டுகிறது. இந்த மன்றத்தின் அவைத் தலைவராக, இருக்கையில் அமர்ந்திருந்தவர்கள் பலரும் சீர் பெற்றும், சிறப்புப் பெற்றும், இந்த மன்றம் ஓங்குபுகழ் எய்துகிற அளவுக்கு அரும்பணி பல ஆற்றி வந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிகிறோம். அவர்களுடைய வழியிலே வந்துள்ளவர்களாகிய தாங்களும் அந்த அளவுக்குச் சிறக்க இந்த மன்றத்தை நடத்திச் செல்வீர்கள் என்ற உறுதிப்பாடு எங்களுக்கு உண்டு. அதற்கானத் தகுதியும், உள்ள உறுதியும் – உரமும் தங்களிடம் அமைந்திருக்கின்றன. இப்படிப்பட்ட மன்றத்தில் தாங்கள், அதுவும் வழக்கறிஞராக இருந்து நல்ல அனுபவம் பெற்றவராகவும், இந்தச் சட்டமன்றத்தில் முன்பே அங்கம் பெற்று பணியாற்றியுள்ளவராகவும் இருக்கும் காரணத்தினால் சட்டங்களுடைய நுணுக்கங்களையும், சட்டங்களை இம்மன்றத்தில் நிறைவேற்றுகின்ற தன்மையினையும், அதற்காக வாதிடுகின்ற பான்மையினையும், அதை நிலைநாட்டுவதற்கு எடுத்துக்கொள்கின்ற முயற்சியினையும் நீங்கள் நன்றாக அறிந்தவராகவும் இருக்கிறீர்கள். எனவே, தங்களது சீரிய தலைமையின்கீழ் இந்த மன்றம் மிக நல்ல முறையில் வளர்ந்து ஓங்குபுகழ் எய்தும் என்ற உறுதிப்பாடு எங்களுக்கெல்லாம் ஏற்படுகிறது. இந்த மன்றம் அதுவும் ஒருமனதாகத் தங்களைத் தேர்ந்தெடுத்திருப்பதன் மூலம் நல்லதொரு மரபை மற்றவர்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் உருவாக்கியிருக்கிறது. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு பதவியாகக் கருதப்படுகிற ஒன்று அவைத் தலைவர் பதவியாகும். அதிலே வீற்றிருப்பவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் மன்றத்தில் உள்ள எல்லாக் கட்சிகளுக்கும், எல்லா

உறுப்பினர்களுக்கும் பொதுவாக நடந்துக்கொள்ளக்கூடிய நடுநிலைமையாளராக இருக்கவேண்டியவர்களாவார்கள். இந்த மன்றத்தில் இருக்கிற அனைவருக்கும் நீதி வழங்குகின்ற முறையில், ஒரு நீதிபதி போலவும், அனைவருடைய உரிமையையும் பாதுகாக்கிற வகையில் ஒரு காவலர் போலவும், அனைவருக்கும் ஐயப்பாட்டை நீக்குகின்ற முறையில் ஓர் ஆசிரியர் போலவும், அனைவரிடத்திலும் அன்பு காட்டுகின்ற தன்மையில் ஒரு தாய் போலவும், அனைவருக்கும் ஜனநாயக சட்டமன்ற அறிவைப் புகட்டுவதில் ஒரு தந்தை போலவும், வழிதெரியாது திக்கற்றுத் திகைக்கின்ற நிலைமையில் உள்ளவர்களுக்கு வழிகாட்டுவதில் ஒரு வழிகாட்டி போலவும் விளங்குகின்ற தன்மையில் வீற்றிருக்க வேண்டியவர்களாவீர்கள். இப்படிப்பட்டப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் ஒருமனதாக உறுப்பினர்கள் அனைவருடைய அன்பையும், ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெறுவது என்பது மிகமிக நல்லதொரு மரபைக் காட்டுகின்ற ஒன்றாகும்.

அந்த மரபு ஏற்படவேண்டுமென்று கருதித்தான் அவைத் தலைவர், துணை அவைத் தலைவர் தேர்தலில் போட்டி கூடாது என்று எண்ணி எதிர்க்கட்சியில் உள்ள நாங்கள் அதைத் தவிர்த்துக் கொண்டோம். கூடியவரையில் இந்த மன்றத்தில் அவைத் தலைவர், துணை அவைத் தலைவர் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியினரையும் கலந்து, அவர்களுக்கும் ஓரளவு மதிப்பு அளித்து ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒருமுறையை அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவோமானால் இந்த மரபு நிலைக்கும்; நிலைத்து நீடித்து நெடுநாளைக்கு நிலவும் என்பதோடு மட்டுமின்றி பிற பல மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாகவும் அமையும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவேதான், ஒருமனதாக இந்த மன்றத்தின் அவைத்தலைவர் அவர்களும், துணை அவைத்தலைவர் அவர்களும் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று நாங்கள் விரும்பினோம். அதற்குக் காரணம் ஆளும்கட்சியைச் சேர்ந்த அவையின் முதல்வர் எடுத்துக்காட்டியதுபோல் இப்பதவியில் இருப்பவர்கள் கட்சி அரசியலுக்கும் அப்பாற்பட்ட தன்மை பெற்றவர்களாவார்கள். இதுவரையில் தங்களுக்கு ஒரு கட்சியின் தொடர்பும், அந்தக் கட்சியினுடைய கருத்துக்களுக்கு ஆதரவு தேடும் தன்மையில் பணியாற்றுகின்ற ஆவலும் உள்ளவர்களாக இருந்து வந்திருந்தாலும், இந்தப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு இந்தப் பொறுப்பிலிருந்து, கட்சி பாகுபாடின்றி நடுநிலையில் இருந்து பணியாற்ற வேண்டிய கடமையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒரு பால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

என்று வள்ளுவப் பெருந்தகை எடுத்துக்கூறியதற்கிணங்க இரு பகுதியையும் சரிசமமாக வைத்து ஒரு பக்கமும் அசையாமல் சரிவர நிறுத்தி நீதி வழங்க வேண்டிய கட்டுப்பாடு உடையவர்களாக இருக்கிறீர்கள். பொதுவாக இந்த மன்றத்திலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் பொதுவான ஒருவராக விளங்கவேண்டிய தன்மை உடையவராக இருக்கிறீர்கள். நாங்களும் இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் எங்களுக்கெல்லாம் பொதுவான ஒருவராக விளங்குகிறவர் அவைத் தலைவர் என்ற கண்ணோட்டத்தில் காணவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அளவுக்கு இந்த மன்றத்தை மிக நல்லமுறையில் நடத்திச் செல்வதற்கு உறுதுணையான ஒத்துழைப்பையும், நல்ல ஆதரவையும் தங்களுக்கு நாங்கள் நல்குவதோடு கூட தங்கள்பால் முழு அன்பையும் காட்டுவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் எதிர்க்கட்சி என்ற காரணத்திற்காக ஆளும்கட்சி கொண்டுவருகிற எல்லாவற்றையும் எதிர்ப்போம் என்று எண்ண வேண்டாம். ஆளும்கட்சி செய்கிற நல்லவைகளுக்கு எல்லாம் நாங்கள் ஆதரவாக இருப்போம், அவர்களுக்கு உறுதுணையாக நின்று ஒத்துழைப்பதற்கும் நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதி குலைந்து, நேர்மை குறைந்து குறைகள் மலியும்போது, குற்றங்கள் நிகழும்போது அவற்றைக் களையவும், சுட்டிக்காட்டவும், போக்கவும் – நீக்கவும் நல்ல சூழ்நிலைமையை ஏற்படுத்தவும் எதிர்க்கட்சியினர்கள் கடமைப்பட்டவர்கள்.

நாட்டின் நலம் கருதி, நாட்டின் அரசியலில் நல்லதொரு ஜனநாயகம் தழைக்கவும், பாராளுமன்ற ஆட்சிமுறை ஏற்றம் பெறவும், பொருளாதாரச் செழிப்பு ஏற்படவும், நாட்டில் உரிமைகள் பெருகவும், விடுதலை மணம் கமழவும், மக்களுடைய வறுமை நீங்கவும், வாட்டம் போக்கவும், மக்கள் நலம் பெருகவும், நலிவு நீங்கவும், இன்னல்கள் மாயவும், இடுக்கண்கள் போகவும், தொல்லைகள் துயரங்கள் அகலவும், நாடு ஏற்றம் பெறவும், எழில் பெறவும், புகழ் பெறவும், பெருமை பெறவும் நாட்டின் வளம் பெருகவும், நாட்டு பொது வருமானம் பெருகி இந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், மக்கள் வயிறார உண்ண உணவு கிடைக்கவும், மனமார உடுக்க உடை கிடைக்கவும், தேவையான தங்க இடம் கிடைக்கவும், நாட்டு மக்களுடைய தேவைக்கேற்ப உற்பத்தி பெருகவும், தொழில்கள் வளரவும், வாணிகம் கூடவும், வேலைவாய்ப்பு பெருகவும், பொருளாதார

நிலை உயரவும் வசதியாக ஆளும் கட்சியினர் எடுத்துக்கொள்கின்ற ஒவ்வொரு முயற்சிக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம் – நல்லாதரவு நல்குவோம் என்ற உறுதிப்பாட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தின் கண்ணியத்தைக் காப்பாற்றவும், மதிப்பை நிலைநாட்டவும், பெருமையை ஓங்கச் செய்யவும், புகழை நிலைநாட்டச் செய்யவும் இந்த மன்றத்தின் அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாங்கள் எடுக்கின்ற எல்லா முயற்சிகளுக்கும் எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் எங்களுடைய முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் அன்போடு அளிப்போம் என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தாங்களும், துணை அவைத் தலைவர் அவர்களும் நடுநிலைமை கொண்டு, நீதி கொண்டு, நேர்மை கொண்டு இந்த மன்றத்தின் மரபுகளை நிலைநாட்டி, இந்த மன்றத்தின் புகழ் ஓங்கும்படி, பணிகளைப் புரிந்து, 'வாழ்க வாழ்க' என்று வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தின் பெருமையும், புகழும் மதிப்பும் ஓங்குகிற அளவுக்கு நீங்கள் எடுத்துக்கொள்கின்ற முயற்சிகள், ஆற்றுகின்ற தொண்டுகள் அனைத்தும் 'வெல்க வெல்க' என்று கூறி, அவைத் தலைவராகிய தங்களையும், துணை அவைத் தலைவராகிய எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. பார்த்தசாரதி அவர்களையும் நான் மீண்டும் மீண்டும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், வரவேற்கிறேன், வணக்கம்.

– சட்டமன்றப் பேரவையில் 31.03.1962 அன்று
நாவலர் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி

நினைவில் நாவலர்

நாவலரும் நானும்

- பேராசிரியர் **க.அன்பழகன்** அவர்கள்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டுகள் ஒன்றாகப் பயின்றவர்கள் நாங்கள். அதில் மூன்றாண்டுக் காலம் – பேராசிரியப் பெருமக்கள் பலரிடம் அருகருகே அமர்ந்து ஒன்றாகவே பாடங் கேட்டவர்கள் நாங்கள்.

தமிழ்ப்பற்று அடியாகப் பிறந்த ஒரே வகை சிந்தனையோடும், ஒன்றாக உருவான குறிக்கோளோடும் வளர்ந்தவர்கள் நாங்கள்.

தந்தை பெரியாரின் தன்மான–பகுத்தறிவு இயக்கத்திலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவார்ந்த கொள்கைகளிலும் ஈடுபாடு கொண்டு அதனைப் பரப்பும் ஆர்வத்தில் ஏறத்தாழ ஒன்றாகவே அடியெடுத்து வைத்தவர்கள் நாங்கள்.

பல்கலைக்கழகப் பட்டிமன்றத்திலும் – இலக்கிய மன்றத்திலும் ஒன்றாகப் பேசிவந்த நாங்கள் – திராவிட மாணவர் மாநாட்டிலும், திராவிடர் இயக்கக் கூட்டங்களிலும் ஒரே காலத்தில் பேசத் தலைப்பட்டோம். 1944 முதல் 1977 வரை – ஒரே கட்சியினராகவும் – ஓரணியில் செயல்படுபவராகவும் விளங்கினோம் என்பதும், கருத்து வேற்றுமைக்கும் கசப்புணர்வுக்கும் இடமற்றுச் செயல்பட்டோம் என்பதும் எண்ணுமிடத்துப் பெருமித உணர்வையே தரும்.

கடந்த நாற்பதாண்டுக்கால நட்பும் தொடர்பும் கொண்ட நண்பரான நாவலரைப் பாராட்டி வாழ்த்தும் கடமை எனக்குரியதேயாகும்.

பள்ளிப்பருவம் முதலாகவே தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளில் பற்று வைத்து, பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்திலேயே பட்டிமன்றம் ஏறிப் பாங்குற வாதிடும் திறன் வளர்த்து, பட்டம் பெற்றுப் பொதுவாழ்வில் ஈடுபட்ட நாள் முதலாகப் பட்டி தொட்டியெல்லாம் தமது இயக்கத்தின் கொள்கைகளை மக்களிடம் பரப்பும் பணியைத் தமது கடமையாகக் கொண்டவர் அவர்.

தந்தை பெரியாரின் கொள்கையில் அவர் கொண்ட பற்று அவரை ஒரு பேச்சாளராகவும் ‘இளந்தாடி நெடுஞ்செழியன்’, என்னும் அடைமொழியோடு பாராட்டி அழைக்கப்படும் நிலைக்கும் உரியவராக்கியது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அவர் கொண்ட நம்பிக்கை – பொதுத் தொண்டில் ஆர்வத்துடன் ஈடுபடச் செய்ததுடன் – நாடறிந்த நாவலராக ஆக்கியது.

படித்தறியாத பாமரமக்கள் தெளிவடையுமாறு, பட்டி தொட்டி நாடு நகரெங்கும் – தாம் கற்றறிந்ததனைக் கற்றறியாரும் உணருமாறு விரித்துரைக்கும் நாவலரின் தொண்டினைப் பாராட்ட விரும்பிய அண்ணா அவர்கள் நாவலரை ‘நடமாடும் பல்கலைக்கழகம்’ என்று சிறப்பித்தார். தாம் கற்றதுணர விரித்துரைக்கும் ஆற்றலாலும் – அதில் அவர் கொண்ட ஆர்வத்தாலும் மணம் பரப்பும் மலரானார்.

புறநானூற்றுப் பாக்களிலும், புரட்சிக் கவிஞரின் புத்துணர்வு தரும் கவிதைகளிலும் அவர் கொண்டிருந்த ஈடுபாடு –அவரது சொற்பொழிவுகளைப் பொதுமக்கள் அவையிலும், புலவர் மன்றத்திலும் ஒரு இலக்கிய விருந்தாக மட்டுமன்றி எழுச்சியூட்டும் உரையாகவும் உயர்த்தியது.

‘கிளம்பிற்றுகாண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை’
இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது!
சிறுத்தையே வெளியில் வா,
சிம்புட் பறவையே, சிறகை விரி, எழு!

என்பன போன்ற கவிதை வரிகளை அவர் முழங்கும்போது கேட்போர் வீர உணர்ச்சி பெறுவர். அவரது உரையில் இடையிடையே வரும் கவிதை வரிகள் அவருடைய கருத்துக்கு வலிவூட்டியதோடு அவருடைய உரைநடைக்குப் பொலிவூட்டிக் கேட்பவர்க்கும் எழுச்சியூட்டும்.

அவரது பேச்சில் புரட்சிக் கவிஞரின் கவிதை இடம்பெற்ற வகையினாலும் சிறப்பாலும் – புரட்சிக் கவிஞரையே நாடெங்கும் மக்கள் முன்னர் மேடை ஏற்றினார் என்று கருதலாகும்.

கற்பதில் நாட்டமும் – கற்றதைத் தெளிவதில் ஆர்வமும் – உண்மையை ஓர்வதில் ஊக்கமும் – ஓர்ந்ததை விரித்துரைப்பதில் உவகையும் அவருடைய இயல்பாகவே அமைந்திருந்தன.

பகுத்தறிவுக் கருத்துக்களை அவற்றிற்கான விளக்கங்களோடு புரிந்து தெளிந்து எடுத்துரைப்பதில் ஒரு தனி ஆர்வம் அவருக்கு.

ஒரு பாட்டு, அதன் பொருள், அதன் விரிவு, பின்னணி, தொடர்பு, உவமை அழகு இவற்றை எழிலுற இயம்புவதிலும் எழுதுவதிலும் அவர் வல்லவர். ஒரு பொருளை இயம்புமிடத்து, அதற்குரிய கருத்துக்களை எல்லாம் தொகுப்பதும், அதனை விளக்குவதற்குரிய சொற்களை எல்லாம் வரிசைப்படுத்தலும் – அழகுபட அடுக்கிக் காட்டலும் – கோவைபடத் தொடுத்தலும், ஒரு பொருள் தரும் பல சொற்களையும், பல பொருள் தரும் சிறப்புச் சொற்களையும் தமது சொற்பொழிவில் கையாளுதலும் அவருக்குக் கைவந்தக் கலை.

ஒரே பொருளைக் குறித்து – அவர் திரும்பத் திரும்பப் பேசும்போதும் – அவர் அதனை நயம்படச்சொல்லும் முறைக்காகவும், அவரது குரல் ஏற்ற இறக்கத்தினால் விளையும் சுவைக்காகவும் உணர்த்த விரும்புவதை நகைச்சுவையோடு உரைக்கும் திறத்திற்காகவும் மக்கள் ஆர்வத்துடன் கேட்பாராவர்.

நாவலர் உரை மணிக்கணக்கில் நிகழும். இசைச் சொற் பெருக்குப் போலப் பல பொருள் பற்றித் தொடரும். அடுத்தடுத்து மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய செய்திகளின் மாலையாக அமையும்.

அவரது பேச்சின் எளிமை எழுத்தில் இறுகி இலக்கிய நடையாகத் திகழும். எழுத்துத் துறையில் அவரது பணி ‘மன்றம்’ ஆகவும், பல்வேறு இலக்கிய ஏடுகளாகவும் வடிவம் பெற்றுள்ளன.

அரசியல் உலகில்–பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்றிருந்த நாவலர் தி.மு.கழகத்தின் பொதுச்செயலாளராக உயர்ந்தார்.

தி.மு.கழகத்தின் ஒன்பதாண்டுக் கால ஆட்சியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையிலும், கலைஞர் அவர்களின் அமைச்சரவையிலும் ‘கல்வி’ முதலான துறைகளின் அமைச்சராகத் திகழ்ந்தார். கழகத்தின் முன்னணித் தலைவராகவும் விளங்கினார்.

காலத்தால் உருவாகும் சூழ்நிலையால் கருத்து மாறுபாடுகள் ஏற்படுவதற்கு இடமுண்டு எனினும், அவைகட்கு அப்பாற்பட்டு. தமிழ்ச் சமுதாயத்தின் உரிமையைக் காக்கவும் – அவர்தம் மொழி, கலை, பண்பாடு, நாகரிகம், மரபு ஆகியவற்றைப் பேணி வளர்க்கவும் “தமிழன்” என்னும் உணர்வுடையோர்க்கெல்லாம் ஒரு கடமையுண்டு.

அத்தகைய கடமையுணர்வு, ஒருமித்த உணர்வாக ஓங்க நாவலரின் அறிவாற்றலும் தொண்டும் துணைநிற்கும் என்னும் நம்பிக்கை எனக்குண்டு!

வாழ்க அவரது தமிழ் உணர்வு என வாழ்த்துகின்றேன்.

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர்–1980

❖ ❖ ❖

அமர்ந்த உரையன் அரிமா நடையன்

- செந்தமிழ்ச் செல்வர் **ஞா.தேவநேயப் பாவாணர்** அவர்கள்



பெரும்பொரு ளீட்டப் பெரிதும் உதவும்
அரும்பல கல்வி அமைந்தும் – விரும்பிய
தன்னினமுன் னேற்றம் தகவே நெடுஞ்செழியன்
தென்மொழி கற்றது தேர்ந்து.

நாரா யணசாமி நற்றமி ழன்றுஎன்றே
நேராய் நெடுஞ்செழியன் நேர்ந்தான்பேர் – சீராய்
அரசியல் கட்சியருள் அன்பழகன் அல்லா
விரசுபல் லோரையும் வென்று.

வருமானம் விண்டு வளரும்தன் மானம்
பெருமானம் என்று பெரியார் – குருமானச்
சீர்திருத்த வாழ்வொடு செந்தமிழ் சேர்த்தான்தன்
பேர்பொருத்த மாகப் பிணைத்து.

பெரியாரைத் தாடியிலும் பின்பற்றி, முற்றும்
சரியாய்ப் பகுத்தறிவு சான்று – தெரியார்
மடமை யொழிக்கும் மறத்தொண்டு பூண்டான்
கடமை நெடுஞ்செழி யன்.

நாடு முழுதும் நகரொடு பட்டிதொட்டி
காடு கரையெல்லாம் கட்டுரைத்தான் – நீடு
முதுவேனில் நண்பகலும் மூளபனிநள் ளல்லும்
அதிரா நெடுஞ்செழி யன்,

அண்ணாத் துரையின் அருமைக் கழகத்தின்
கண்ணாம் நெடுஞ்செழியன் கட்சியொடு – பண்ணாரும்
பாரதி தாசனின் பாடலால் மாணவரைச்
சேரவே செய்தான் சிறந்து,

ஆரியத் தானைவென்று, அன்றோர் நெடுஞ்செழியன்
சீரியல் செந்தமிழ்மா னஞ்சேர்த்தான் – ஓரனதே
இந்தி வடமொழியோ(டு) இன்றமிழை வெல்லாமை
முந்தி நெடுஞ்செழியன் மூள்வு.

மாண்டமிழ்ப் பாண்டிநாட்டில் மற்றோர் நெடுஞ்செழியன்
ஈண்டியஓன் னாரைவென் றான்அவன்பேர் – பூண்டவனே
தென்பாண்டி நாட்டுத் திருநெல்வே லித்தேர்தல்
வென்பூண்டான் என்று விளம்பு.

செந்தமிழ்ச் சொற்பிறப்பின் சீரார் களஞ்சியக்கோள்
வந்துறுகால் கல்வி அமைச்சானான் – பிந்தியது
பல்வகை ஓங்கப் பணத்துறை மந்திரியாய்
ஒல்வகை யானதுநல் லூழ்,

சாட்டிய குற்றங்கள் சாடாது தன்னேர்மை
நாட்டி எதிர்த்துத்தன் நண்ணார்சொல் – வீட்டு
அமர்ந்த உரையன் அரிமா நடையன்
நிமிர்ந்த நெடுஞ்செழி யன்.

வாழி முதன்மொழியாம் வண்டமிழ்முப் பாலின்பம்
வாழி உலகநாட் டொன்றியமே – ஊழியெலாம்
வாழி மகிழன்பு வாகார் நெடுஞ்செழியன்
வாழி மழைபார் வளம்.

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர்–1980

❖ ❖ ❖

நாவலருக்கு கழகம் காட்டும் மரியாதை

- மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்** அவர்கள்

நாவலர் நெடுஞ்செழியன் திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடி நெடிய உருவம் உருவத்திற்கு ஏற்ற ஆஜானுபான உடற்கட்டு. நிமிர்ந்து அவர் நின்றால், ஆறு அடிக்குமேல் இருப்பார். பரந்த முகம், விரிந்த நெற்றி, வாரிவிடப்பட்ட சுருளில்லா நீண்டமுடி. வட்டகழுத்து ஜிப்பா. அதன் மீது போர்ந்தியபடி நீண்ட துண்டு. அடடா! இந்த கோலத்தில் அவர் மேடை மீது ஏறி நின்று "மைக்"கு முன்னால் முழங்கிய காட்சி என்றும் நம் நெஞ்சில் நிழலாக நிற்கிறது.

நாவலர் பேச ஆரம்பித்தால் அந்த அடைமொழிக்கேற்ப நற்றமிழ் அவர் நாவில் நடமாடி நிற்கும், கேட்டார் பிணிக்கும் சொல், அவர் சொல் – அது கேளாதவரையும் ஈர்க்குமாம். அவரது கண்ணியமிக்க உரை புள்ளிவிவரங்களை புட்டு புட்டு வைப்பதிலும், ஆதாரங்களை அடுக்கு, அடுக்காக எடுத்துக்காட்டுவதும், எதிரிகளின் குற்றச்சாட்டுகளை முனை மழுங்க வைப்பதும், வரலாற்று நிகழ்வுகள் இலக்கியச் சுவைகள் இவற்றோடு கண்ணியமான அரசியல் பேச்சு.

இத்தனையும் அவர் பேச்சில் ஒன்பான் சுவையாக உருவெடுத்து நிற்கும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதைகளுக்கு உணர்ச்சியும், உயிரோட்டமும் தந்தவர் நாவலர் என்றே சொல்லலாம் புரட்சிக் கவிஞர் கவிதைகளை நாவலர் மேடையில் முழங்கும் போது வானம் இடி இடிந்ததுப்போல் இருக்கும். கேட்டவர்கள் உணர்ச்சி பிழம்பாவார்கள். அடுத்தநாள் கூட்டத்திற்கு வந்தவர்கள் புரட்சிக் கவிஞர் கவிதைகளை தேடிக் கொண்டிருப்பார்கள். அரசியல் மேடைகள், இலக்கிய அரங்குகள், சமுதாய மன்றங்கள், சட்ட நிகழ்வுகள் என்று எங்கு பேசினாலும் நாவலர் பேச்சில் கண்ணியம் கட்டுப்பாடோடு இருக்கும்.

நாவலர் தி.மு. கழகத்தின் கொள்கைகளை பரப்ப நகரங்களில் மட்டுமல்லாது; கிராமங்களிலும் இடைவிடாது பிரச்சாரத்தில் ஈடுபட்டவர். அவர் பேசாத நகரங்களோ, கிராமங்களோ தமிழகத்தில் இல்லை என்று சொல்லும் அளவிற்கு சுற்றுப்பயணம் செய்தவர். நாவலர் மீது அண்ணாவிற்கு அதிக மரியாதை ! படித்த வர்க்கம் கழகத்தின்பால் வரிபிள்ளையார் சுழி போட்டவர்கள் பேராசிரியரும் – நாவலரும்தான். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் அண்ணா அவர்கள் “ஆற்றோரம்” என்ற தலைப்பில் ஓர் அற்புத உரையை தமிழிலும் – ஆங்கிலத்திலும் ஆற்றினார். அந்த காலக்கட்டத்தில் பேராசிரியரும்– நாவலரும் அங்கே மாணவர்கள்.

அண்ணாவின் பேச்சு பல்கலைக்கழகத்தையே அண்ணாவின் பக்கம் கொண்டுவந்துவிட்டது. அப்பொழுது அண்ணாவிற்கு கிடைத்த அற்புதங்கள்தான். பேராசிரியரும் – நாவலரும், திருச்சி மாநாட்டில் “தம்பி ! வா ! தலைமை தாங்க வா ! உன் ஆணைக்கு கட்டுப்படுகிறோம்” என்று அண்ணா அவர்கள் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட நாவலரை அழைத்தார்.

பிறகு–அரசியலில் ஆயிரம் மாற்றங்கள். நாவலர் நம்மை விட்டு நெடும் தூரம் சென்றுவிட்டார் என்றாலும், என்றும் அவர் மீது உள்ள மரியாதை மட்டும் நம்மை விட்டு நீங்கவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் நாவலரை–நாவலர் என்றுதான் கூறியிருக்கிறாரே தவிர மறந்துக்கூட நெடுஞ்செழியன் என்று அவர் கூறியதை நாங்கள் கேட்டதே இல்லை, நாவலர் அவர்களும் நானும் அவர் இறக்கின்றவரை ஒன்றாக அடையாறு ஆலமரம் இருக்கும் பகுதியில் காலையில் நடைப்பயண பயிற்சி போகும்போது, அவர் என்னை சந்தித்ததும் கலைஞர் எப்படியிருக்கிறார் என்றுதான் கேட்பார்.

சான்றோர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபட்டாலும் பண்பாடு சிதைந்து விடாது என்பதற்கு இது ஓர் உதாரணம். அந்த வாழையடி வாழையென வரும் திராவிட வரலாற்றில் இன்று அந்த பேரியக்கத்தின் தலைவராக விளங்கும் தளபதியார் அவர்கள் நாவலர் பிறந்த நாளில் அவர் படத்துக்கு மாலையிட்டு மரியாதை செய்கிறார்.

தளபதி தி.மு.கழகத்தின் தலைவர் மட்டுமல்ல, அவர் கலைஞரின் மகன். அந்தப் பண்பாட்டின் அறிகுறிதான் இன்று நாவலருக்கு மரியாதை.

நன்றி : ‘முரசொலி’ நாளேடு
11.07.2020

❖ ❖ ❖

அறிவியக்கத்தின் அசையாத்தூண்

- திரு. **கி.வீரமணி** அவர்கள்

பெருமதிப்பிற்குரிய நமது கல்வி அமைச்சர் நாவலர் அவர்களுக்கு 55 வயது நிறைகிறது!

நாவலர் அவர்கள் இளவயது முதற்கொண்டே தந்தை பெரியார் அவர்களது பகுத்தறிவு இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு சீரிய பகுத்தறிவுவாதியாக, சுயமரியாதைச் சுடரொளியாகத் திகழ்ந்து வருபவர் ஆவார்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்த நாள் முதல் அவர் மாணவப் பருவத்திலேயே தந்தை பெரியார் அவர்களது இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, பிரச்சாரத் தொண்டில் ஈடுபட்ட மாமணியாகத் திகழ்ந்தவர் ஆவார்!

இளந்தாடியாக அவர் இருந்து, ஒரு இளம் பாதிரிபோல் மேடையில் தோன்றி, அதிதீவிரமாக சுயமரியாதைப் பிரச்சாரம் செய்யும் பாங்கு தந்தை பெரியார் அவர்களை மிகவும் கவர்ந்த காரணத்தால், தமிழ் எம்.ஏ. படித்து முடித்த அந்த நிலையில், இயக்கத்தின் முழு நேரப் பேச்சாளராக அவரை அய்யா அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

புள்ளிவிவரங்களும், அறிவார்ந்த வாதங்களும், பகுத்தறிவுக் கணைகளும் நாவலர் அவர்களது பேச்சில் குற்றாலத்து அருவியென வந்து விழுந்துகொண்டே இருக்கும்!

பேச்சிலும், எழுத்திலும், கொள்கை பரப்பு வதிலும் மிகவும் சிறப்பான ஆற்றல் வாய்ந்த நாவலர் அவர்கள், தந்தை பெரியார் அவர்களைப் போலவே இயல்பான சிக்கனக்காரர் ஆவார்! இதைச் சென்னையில் ஒரு பாராட்டு விழாவின் போது நாவலர் அவர்களே மிகவும் பெருமையுடன் குறிப்பிட்டார்கள்!

“மாதம் அய்ந்து ரூபாய்ச் செலவில் நானும் எனது தம்பி செழியனும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவப் பருவத்தை நடத்தியுள்ளோம்” என்று அவர் கூறியது அவர் காட்சிக்கும் எளியவர்: வாழ்விலும் எளியவர் என்பதற்கு நல்ல சான்று !

தந்தை பெரியார் அவர்கள் எதிர்ப்பு என்றால் தணலில் இட்ட தங்கமாக, பொங்கி எழும் சிங்கமாகக் கிளம்புவது போலவே, நாவலரும் மேடையில் எதிர்ப்பு, சலசலப்பு என்றால் உடனே ஓங்கிய குரலில் முழங்கி, சூடான வாதங்களைச் சுவையான வகையில் எடுத்து வைக்கத் தவறவே மாட்டார்கள்!

அந்தக் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டாற்றுப்பாதையில் நடந்துதான் இன்று “மாண்புமிகு அமைச்சராக” அவர் இருக்கிறாரே தவிர, திடீரென்று ஒரு நாள் அவர் அமைச்சராகிவிடவில்லை: இயக்கத்தையும், கொள்கைகளையும் இதயமாகக் கொண்டு அவர் போன்றவர்கள் ஆற்றிய ஆற்றல்மிகு உழைப்பால், பேச்சால், செயலால், பகுத்தறிவு இயக்கம் ஒரு புதிய காலகட்டத்தையும் சந்திப்பதோடு முதல்வர் கலைஞர் அவர்களது தலைமையில் தன்னிகரற்று ஏறுநடை போடும் தி.மு.க. ஆட்சிக்கு அவர் போன்றவர்களது கட்டுப்பாடு மிக்க உழைப்பு நல்ல பாதுகாப்பு அம்சமுமாகும். நாடு போற்றும் நாவலராக அவர் என்றும் காட்சி அளிப்பார். சீரிய பகுத்தறிவாளரான அவர், தமது வாழ்நாள் முழுவதும் அரசியல் தொண்டைவிட பகுத்தறிவுத் தொண்டுக்கே முன்னுரிமை தர வேண்டுமென்பது எனது சிறு விருப்பமாகும் !

வாழ்க நாவலர் !

நன்றி: நாடு போற்றும் நாவலர்–1975

❖ ❖ ❖

நினைவில் நாவலர்

நாவலர் எழுதும் வரலாறு

- தவத்திரு **குன்றக்குடி அடிகளார்** அவர்கள்

வாழ்க்கை ஆள்வினைக்குரியது; இன்பத்திற்குரியது. ஆனால், இன்பத்தின் வாயில் துன்பமே என்பது வள்ளுவத்தின் கருத்து. துன்பத்தைச் சுவைத்தறிபவர் அறிவறிந்த ஆள்வினையாளர் ஆவர். துன்பத்தில் துவள்பவர்கள் தோல்விகளையே தழுவுவர். துன்பத்தால் தாக்கப்பெற்றாலும் தாக்குண்டு அழியாமல் துன்பத்தைத் திருப்பித் தாக்குபவர்கள் வாழ்வாங்கு வாழக் கற்றவர்கள். இதனை வள்ளுவம்,

"இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்"

என்று கூறுகிறது. இத்திருக்குறள் வாழ்க்கைக்கு இலக்கணம். இத்திருக்குறளுக்கு உரையாசிரியர்கள் பலர் எழுத்துக்களால் உரை எழுதி உள்ளனர். ஆனாலும் வாழ்க்கையால் உரை எழுதுபவர் அரியர். இருபதாம் நூற்றாண்டு இடும்பைக்கு இடும்பை தரும் தமைகனைக் கண்டது. அத்தலை மகன் புரவலன் போலும் தோற்றம் அளிப்பார், ஆனாலும் எளிமையானவர். நாட்டுமக்களுக்கு நயம், தீது எடுத்து நயந்தினிது கூறும்

அறிஞர். மனிதகுலச் சாதி இழிவுகளைச் சாடி எதிர்த்துப் போராடி இடர்பல ஏற்றவர். அன்னைத் தமிழின் நலம் காக்கச் சிறைச்சாலையில் தமிழ்த்தவம் செய்தவர். பரம்பரைத் தொழிலைப் பாட்டாளிகளுக்கு உரிமையாக்க முயன்ற குலக்கல்வித் திட்டத்தைச் சந்தித்துப் போராடி வாகை சூடியவர் விழுப்புண் பட்டவர். அறிஞர் அண்ணாவால் ‘தலைவர்’ என்று அழைத்துப் பெருமைப்படுத்தப் பெற்றவர். தன்மானத்தை விட இனமானம் பெரிதென்று கருதி இழப்புகளையும் ஏற்றுக் கொண்ட ஏந்தல். இனநலம் கருதி இழிசொற்களையும் பழிச்சொற்களையும் ஏற்று நோற்றவர். இனநலத்தைவிட உரிமைச் சுற்றம் பெரிதெனக் கருதியவர்கள் அள்ளி வீசிய பொழுதும் வாளா இருந்து இனநலத்திற்காக நோன்பு இயற்றியவர். இடர்கள் பலவற்றைக் கடந்து துன்பம் சுடச்சுட நோற்று இன்று வாகைசூடி வலம் வருகிறார் அவர் யார் ? அவர்தான் நமது நாவலர்.

நாவலர் ‘மன்ற’த்தில் எழுதும் எழுத்துக்கள் தமிழினத்தின் வரலாற்றுக்குப் புத்துயிரூட்டுவன. சென்ற காலத்துப் புகழ் பூத்த வாழ்வைத் தமிழகத்திற்குத் தரும் திறனுடையன, நாவலர் ‘மன்ற’த்தில் அறிவிக்கும் ஆணைகள் நலிவுற்றோரை வாழச் செய்யும் தகுதியுடையன. நாவலர், மக்கள் மன்றத்தில் இன்பத்தமிழில் யாழிசை கூட்டிப், பெருமித உணர்வுடன் வழங்கும் உரைகள் தமிழக வரலாற்றுக்கு விசையூட்டுவன. நாவலர் நாவசைவில் தமிழ்த்தாய் களிநடம்புரிகிறாள். வள்ளுவத்தின் அறநெறியும் சிலம்பின் சீர்த்தியும் கலித்தொகையின் மாட்சியும், சங்கத் தமிழின் சந்தமும் இழைந்து மிளிர்வதைக் கண்டு கேட்டு மகிழாதார் யார் ?

இத்தகு, பீடுசால் பெருமை நாவலரிடம் அமைந்ததற்கு அடிப்படைக் காரணம் அவர் சங்க இலக்கியத்தில் தோய்ந்தவர்; திருக்குறளில் தெளிந்தவர். சங்ககாலத்தில் புகழ்பழுத்த வாழ்வை மீண்டும் தமிழகத்திற்குத் தர வேண்டும் என்ற ஆர்வலர், இந்த இலட்சியத்திற்காக எதையும் ஏற்றுக்கொள்ளும் இதயத்தைப் பெற்றவர். அவரை இடும்பைகள் சுற்றி வளைத்துத் தாக்கின. ஆனால், அவருடைய தறுகண்மிக்க நெஞ்சும், திண் தோள்களும் அந்த இடுக்கண்களைத் தாக்கி வெற்றி கொண்டுவிட்டன.

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர் 1980

❖ ❖ ❖

நாவலர் நால்வர்

- முத்தமிழ்க் காவலர்
கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள்

தமிழ் மக்களின் முதல் நாவலர் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் அவர்கள். இரண்டாவது நாவலர் பேராசிரியர் டாக்டர் பசுமலை சோமசுந்தர பாரதியார் அவர்கள். மூன்றாவது நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரையா அவர்கள். நான்காவது நாவலர் நமது டாக்டர் இரா.நெடுஞ்செழியன் எம்.ஏ. அவர்கள்.

டாக்டர் ஆறுமுக நாவலருக்குப் பட்டம் கொடுத்தவர்கள் சைவ சமயிகள். சோம சுந்தர பாரதியாருக்குப் பட்டம் கொடுத்தவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினர். நாட்டாரையாவுக்குப் பட்டம் கொடுத்தவர்கள் புலவர் பெருமக்கள். நாவலர் நெடுஞ்செழியனுக்குப் பட்டம் கொடுத்தவர்கள் தமிழ்ப்பெருமக்கள்.

தமிழர்களின் எண்ணிக்கை நான்கு கோடிக்கு மேல். தமிழகத்தில் நாவலர் பட்டம் பெற்றவர்களும் நான்கு பேர். இதிலிருந்து கோடிக்கு ஒருவரே நாவலராகத் தோன்றுவர் எனத் தெரிகிறது. இப்பெரும் பேற்றைப் பெற்றவர் நமது நாவலர் இரா.நெடுஞ்செழியன்.

நீதிக்கட்சிக்கும், சுயமரியாதை இயக்கத்திற்கும் திருச்சி மாவட்டத்தைப்போலவே தஞ்சை மாவட்டமும் ஒரு கோட்டை. அதற்குள்ளும் மன்னார்குடியும் பட்டுக்கோட்டையும்

அரண்மனைகள். அதிலும் காசாங்குளம் வடகரை எங்களின் போர் முரசு கொட்டும் இடம். பெரும்பாலும் மாதம் ஒருமுறையாவது பொதுக்கூட்டம் அங்கு நடைபெறும்.

1936இல் என எண்ணுகிறேன். பெரியாரும் நானும் அங்குச் சென்றபோது 14, 15 வயதுள்ள ஒரு பையன் மிகுந்த உணர்ச்சியுடன் கூட்டத்திற்குரிய துண்டுத்தாள்களை வெளியிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு வியந்து, "தம்பீ! நீ யார் ?" என்று கேட்டேன். "நாராயணசாமி" என விடை வந்தது. அவர்தான் இந்த நெடுஞ்செழியன். உயர்நிலைப் பள்ளியில் படிப்பதாக அறிந்ததும் "தம்பீ! நீ போய்ப் பள்ளியில் படி. அரசியலில் நுழைந்து உன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளாதே !" என்று அறிவுரை கூறி அனுப்பிவிட்டேன். இவ்வாறே 15ஆவது வயதில் தன்னையும் கி.ஆ.பெ. அரசியலில் சேர்க்க மறுத்துவிட்டார் என்று இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறார் அன்பர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள்.

அரசியலில் மாணவர்களைக் கலக்கவிடக் கூடாது என்பதே எங்களின் கொள்கை. கேட்குமா இந்தப் பிள்ளைகள்! எங்கள் குட்டையில் ஊறிய மட்டைகள் ஆயிற்றே! இம்மாதிரி கையில் நகம் முளைத்த நாட்களாய் இயக்கத்தில் தொண்டு செய்ய வந்த இளைஞர்களில் ஒருவர் அன்பர் நெடுஞ்செழியன்.

தமிழுக்குத் தொண்டு செய்ய பல பிள்ளைகளை உண்டுபண்ணி உதவிய பெருமை சென்னைப் பச்சையப்பன் கல்லூரிக்கு உண்டு. பகுத்தறிவு இயக்கத்திற்குத் தொண்டு புரிய பல பிள்ளைகளை உண்டு பண்ணி உதவிய பெருமை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு உண்டு. அவர்களில் ஒருவரே நண்பர் நெடுஞ்செழியன்.

தமிழக வரலாற்றில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்திய ஆண்டு 1938. இது தமிழகத்தின் இரண்டாவது இந்தி எதிர்ப்புப் போர். திரு. இராஜாஜி அவர்களின் ஆட்சியின்போது கட்டாய இந்தியை எதிர்த்து 22 மாதங்கள் தொடர்ந்து தமிழ் மக்கள் உள்ளம் கொதித்து எழுந்து நடந்த போர். பெரியார் பல்லாரி சிறையில் அடைக்கப்பட்டுவிட்டதால் போராட்டம் முழுவதையும் நடத்தும் பொறுப்பினை நான் ஏற்கவேண்டிவந்தது. தாய்மார்கள் உட்பட 1,001 பேர்கள் சிறை சென்றனர். தாளமுத்து நடராசன் உயிரைக் குடித்தகாலம். அப்பொழுது இரா.நெடுஞ்செழியனுக்கு வயது 18 இருக்கலாம். அந்த வயதிலும் அவர் போராட்டத்தில் பங்குபெற்று எங்களோடு உழைத்த நல்ல தொண்டர்.

1965 சனவரி 26ஆம் நாள் தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். தமிழ்நாடே நடுநடுங்கிய காலம். இது மூன்றாவது இந்தி எதிர்ப்புப் போர்.

சென்னைத் தலைமைச் செயலகத்திற்குப் படையெடுத்துச் சென்ற தமிழ்மக்கள் கூட்டத்தைப் போலீசார் அடித்து விரட்டியபோது கூவம் நதியில் விழுந்து மாண்டவர்கள் சிலர். போலீசாரின் குண்டாந்தடிபட்டு மண்டை உடைந்து மாண்டவர் சிலர். துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானவர்கள் சிலர். தீக்குளித்து மாண்டவர்கள் சிலர். இப்படியாகத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் போராட்டம் தீப்பற்றி எரிந்த காலம். இப்படிப்பட்ட கிளர்ச்சிக்கும் தமிழுணர்ச்சிக்கும் வித்திட்டதுதான் அம்மாதத்திலேயே 9 நாட்களுக்கு முன்பு திருச்சி தேவர் மன்றத்தில் நடந்த தமிழக இந்தி எதிர்ப்பு மாநாடு.

மாநாட்டினைத் தொடங்கிவைத்தவர் சுதந்திராக்கட்சித் தலைவர் இராஜாஜி அவர்கள். தலைமை வகித்தவர் நீதிக்கட்சித் தலைவர் சர்.பி.டி.இராசன் அவர்கள். தமிழ்க் கொடி ஏற்றியவர் கலைத்தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார். பங்கு பெற்றோர், முஸ்லீம் லீக் தலைவர் காயிதேமில்லத் முகம்மது இஸ்மாயில் அவர்கள். நாம் தமிழர் இயக்கத் தலைவர் சி.பா.ஆதித்தனார், பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு.மூக்கையாத்தேவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. நெடுஞ்செழியன். இவர்கள் அனைவரையும் வரவேற்கும் வரவேற்புக் கழகத்தலைவர் கோவை தொழிலதிபர் ஜி.டி.நாயுடு அவர்கள்.

அம்மாநாட்டில் திரு.ஜி.டி.நாயுடு அவர்கள் திரு. நெடுஞ்செழியனைப் பற்றிக் கூறியது இது:–

“அடுத்தபடியாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும் தென்னாட்டு மக்களுக்குத் தொண்டு செய்வதுதான் தன்னுடைய கடமையெனக்கொண்டவரும், தமிழர்களின் நல்வாழ்வில் கருத்துடையவருமான திரு. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்கிறேன். கல்வியை முடித்தவுடன் என்னுடன் தொடர்புகொண்டு யான் நடத்திய U.M.S. மாணவர் உணவுவிடுதி வார்டனாக இருந்தார். அப்பொழுதுதான் இவரது ஆற்றலைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்புக் கிட்டியது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறந்த தலைவர்களுள் ஒருவராக விளங்குகின்றார். சென்னை அரசாங்க சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து இவராற்றிவரும் தொண்டு பாராட்டுதற்குரியது. இவர் சிறந்த சொல்வன்மை மிக்கவர். இவரைத் தமிழுலகு நாவலரென்ற சிறப்புப் பெயரால் அழைத்துப் பெருமைப்படுகின்றது. இவருடைய புள்ளி விபரங்களோடு கூடிய சட்டமன்ற உரை ஆளும் கட்சியினரை அலமரச் செய்யும். இப்போதுள்ள அரசியலறிஞர்களில் இவர் இளையவர். இவருக்கு நல்ல எதிர்காலமுண்டு. இளமைத் துடிப்பும் அறிவும் சேர்ந்த இவருடைய உரையினைக்கேட்கவே நாம் இங்குக் கூடியுள்ளோம். நம் நாட்டு அரசாங்கத்தைக் கைப்பற்றி இவர் நல்வழி காட்டும் காலத்தை மிக விரைவில் எதிர்பார்க்கின்றோம். இத்தகையவரை உங்கள் சார்பில் மீண்டும் வரவேற்கிறேன்”.

அம்மாநாட்டில் அன்று நாவலர் திரு.நெடுஞ்செழியன் பேசிய பேச்சு தமிழ் இளைஞர்களின் உள்ளத்தை ஊடுருவிப் பாய்ந்தது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் தி.மு.க. ஆட்சி மலர இம்மாநாடே காரணம் எனக் கூறலாம். இம்மாநாட்டில்தான் இந்தியை முன்வைத்து கட்சித் தலைவர்களும் ஒன்றுபட்டு நின்று தேர்தல் பிரச்சாரம் செய்ய ஒரு வழி பிறந்தது. இதில் பெரும் உழைப்பு உழைத்தவர் நாவலர் நெடுஞ்செழியன்.

திரு.சி.என். அண்ணாதுரை முதலமைச்சராக இருந்து தமிழகத்தை ஆட்சி புரிந்த காலத்தில் ஆட்சியிலும் அமைச்சராக இருந்து இயக்கத்திலும் அவருக்கு வலது கையாக இருந்து பணி புரிந்தவர் திரு.நெடுஞ்செழியன். மதுரைப் பல்கலைக்கழகம் இவரது கல்வி அறிவையும் ஆற்றலையும் அருந்தொண்டையும் அறிந்து இவருக்கு “டாக்டர்” பட்டத்தினை வழங்கியது.

சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் திரு.சி.என்.ஏ. அவர்கள் தலைவராக இருந்து என்னையும், நாவலரையும், கலைஞரையும் துணைத் தலைவர்களாக ஏற்படுத்தி மாநாட்டுப் பணியை எங்களிடம் ஒப்படைத்திருந்தார். இப்படியிருந்தும் நாவலரும் கலைஞரும் நான் செய்யும் மாநாட்டுப் பணிகளில் சிறிதும் குறுக்கிட்டதில்லை. இம்மாநாடு தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலக நாடுகள் முழுவதிலும் தமிழ் எழுச்சியை உண்டுபண்ணிவிட்டது. ஏறத்தாழ ரூ.18 இலட்சம் மிஞ்சியது. இதற்கும் துணை புரிந்தவர் நாவலர் நெடுஞ்செழியன்.

பெரியாரிடத்தில் எனக்குப் பிறகு என்னைப்போலவே வலதுகையாக இருந்து என்னைப் போலவே பிரிந்து விட்டவர். பின், ஜி.டி.நாயுடு அவர்களுக்கு வலது கையாக இருந்து அவரது பொறியியற் கல்லூரியில் பணி பல புரிந்தவர். அடுத்து தி.மு.க. ஆட்சியின்போது திரு.சி.என்.ஏ.க்கு வலது கையாக இருந்து அவரது ஆட்சியிலும் இயக்கத்திலும் நற்பணி புரிந்தவர் திரு.சி.என்.ஏ.க்குப் பிறகு கலைஞருக்கும் வலது கையாக இருந்து ஆட்சியையும் கட்சியையும் நடத்தியவர்.

இவருடைய புகழுக்கும் பெருமைக்கும் கல்வியும், அறிவும், சொற்பொழிவு செய்யும் ஆற்றலும் மட்டுமன்றி இன்சொல்லும், புன்சிரிப்பும் இவரிடம் அமைந்திருப்பதும் ஒரு காரணமாகும். இவரது வெற்றிக்கு அருந்துணை புரிந்து வருபவர் “வாழ்த்தைத் துணை நலம்” என அமைந்த இவரது துணைவியார் டாக்டர் விசாலாட்சியம்மையார் அவர்கள்.

எனக்கு வயது 82, எல்லா விழாக்களையும் கண்டு களித்தவன். டாக்டர் நாவலர் அவர்கள் வெள்ளிவிழாவினைத் தாண்டி பொன்விழாவினை நடத்தி மணி விழாவினைக் கண்டு மகிழ்கிறார். இன்னும் இவர் முத்து விழாவையும் பவள விழாவையும் கண்டு ஆயிரம் பிறை கண்ட 80ஆம் ஆண்டு வைர விழாவினையும் காண வேண்டும் எனவும், அவ்விழாவில் நானும் பங்குபெற்று வாழ்த்த வேண்டும் எனவும் விரும்புகிறேன். அதோடு அன்பர் நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்கள் பன்னெடுங்காலம் நல்ல உடல்நலத்துடன் இருந்து இன்னும் பல பெரும் பதவிகளைப்பெற்று நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு செய்து சிறப்பெய்தி வாழ வேண்டுமென இன்றும் முழு மனத்தோடு வாழ்த்துகிறேன்.

வாழிய நாவலர் நெடுஞ்செழியன்!

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!!

வாழிய தமிழ்த் திருநாடு!!!

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர் – 1980

❖ ❖ ❖

நாவலர் பேச்சின் நாயகச் சிறப்பு

- திருக்குறளார் **வீ.முனிசாமி** அவர்கள்

தமிழ்க் கடலெனப்பரந்த புகழால் தமிழுலகில் நிலைபெற்ற புலவர்– பேராசிரியர்களாகத் திகழ்ந்து தமிழ் மக்களால் ‘நாவலர்’ என்று பாராட்டப்பெற்று வாழ்ந்த நாவலர் வேங்கடசாமி நாட்டார் ஐயா அவர்கள், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்– இவர்களுக்குப் பிறகு தமிழகத்தில் இன்று நடமாடும் பல்கலைக்கழகமாகத் தமிழ் மக்களின் மனம் குளிரத் தமிழர் ஆட்சியின் பெருமை உயர அமைச்சரவையில் ஆற்றலுடன் சிறப்புறப் பணியாற்றிவரும் என்னுடைய நீண்ட நாளைய நண்பர் பேரன்புக்குரிய மாண்புமிகு இரா. நெடுஞ்செழியனார் அவர்களுக்கு 60ஆம் ஆண்டு நிறைவு பெறுவதை அறிந்து பெருமகிழ்வு எய்துகின்றேன்.

‘தோன்றின் புகழொடு தோன்றுக’ ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’, ‘மெய்ப்பொருள் காண்பதறிவு’, ‘சொலல் வல்லன்’. ‘செயற்கு அரிய செய்வார்’, ‘உள்ளத்து அனையது உயர்வு’, ‘முயற்சி திருவினை ஆக்கும்’, ‘ஊழையும் உப்பக்கம் காண்பர்’, ‘இடுக்கண் வருங்கால் நகுக’, ‘தொகை அறிந்த தூய்மையவர்’, ‘சொல்லுக

சொல்லை', 'கற்றறிந்தார் கல்வி விளங்கும்', 'அவையகத்து அஞ்சாதவர்'– என்பன போன்ற வள்ளுவனாரின் பொன் போன்ற குறளுரைகளுக்கெல்லாம் நிறைவிடமாக விளங்கி நிற்கும் நமது நாவலரை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

மனிதன் பெறுகின்ற ஆற்றல்களுக்கெல்லாம் தலைசிறந்த ஆற்றல் சொல்வன்மைதான் என்பது மிகையாகிவிடாது. பேசுகிறவர் ஒருவர்தான்; ஆனால் கேட்டு மகிழ்கின்றவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஆவார்கள்! அது மட்டுமல்ல; இங்கே பேசினால், ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருப்பவர்களும் மகிழ்கின்றார்கள்! இதனைவிடச் சொல்வன்மையின் சிறப்பினை வேறு எவ்வாறு கூற முடியும் ? தமிழகத்தில் நான் அறிந்தவரை டாக்டர் நாவலர் அவர்களுக்கு நிகரான பேச்சாளர் யாருமே இல்லையென்று சொல்ல முடியும். இதற்கு ஒரு காரணம் மட்டும் சொல்லிக்கொள்வேன்.

நாவலரின் தனிச் சிறப்பு சிந்தனைக்குரியதாகும். நாவலர் பேசுகின்றபொழுது ஒரு துறையினைச் சொல்ல எடுத்துக் கொண்டால் அந்த வகையில் உள்ள எல்லாவற்றையும் 'அலசி அலசி' எடுத்துக் கூறுவார். உதாரணமாக, கொடுமையான சாதிகளைப் பற்றிப் பேச எடுத்துக் கொண்டால் பெரிய சாதிகள், சின்ன சாதிகள் அவைகளுக்கு உள்ளே உட்பிரிவுகள் இவைகளையெல்லாம் சொல்லுவார். அதுவேபோல தெய்வங்களையும் சொல்லுவார். இப்படிப் பேசுபவர் இப்போது யாரும் இல்லை. நாவலர் வாழ்க!

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர் – 1980

❖ ❖ ❖

நினைவில் நாவலர்

நானிலம் காக்கும் நாவலர் நாநலம்

- பேராசிரியர் **சை.வே.சிட்டிபாபு** அவர்கள்

பண்டை ரோமாபுரித் தத்துவ ஞானி செனெகாவை "நாவலர்" என்னும் சொல்லை வரையறுத்து விளக்கும்படி கேட்டபொழுது அவர் ஒரே வாக்கியத்தில் சொன்னதாவது: 'சொல் வன்மை வாய்ந்த ஒரு பண்பாளரைத்தான் நாவலர் எனக் குறிப்பிடத்தகும்'. டாக்டர் நாவலர் நெடுஞ்செழியனுக்கு இவ்விளக்கம் முழுக்க முழுக்கப் பொருத்தமானதென்பதை யாரே மறுக்கவல்லார்? நன்மையும் தீமையும் சொல்லினால் வருவதால் பேசுபவர்கள் பண்பற்றவர்களாக இருந்தால் அதனால் ஏற்படும் விளைவு என்னவாக இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நாவன்மையினால் கேட்போரின் உணர்ச்சிகளை மட்டும் கிளறி விட முடியும். அதே நாவன்மையினால் அவர்களது சிந்தனையைக் கிளர்ந்தெழச் செய்யவும் முடியும். அதனால்தான் வள்ளுவர் "திறனறிந்து சொல்லுக சொல்லை" என்று எச்சரிக்கிறார். பண்பட்ட உள்ளங்கொண்ட நாவலர் அவர்கள் தங்கள் சொல்லில் குற்றம் வந்துவிடாத வண்ணம் கவனத்தோடு சொல்லாட்சி புரியும் திறம்படைத்தவர். சொல்லப்போனால் அவரது நாநலம் நானிலத்தைக் காக்கும் வல்லமை படைத்தது. அழுத்தமும், ஆழமும், மென்மையும், இனிமையும், வேகமும், விவேகமும், கூறறிவும் நகைச்சுவையும் அவரது

பேச்சுக்களில் பரிமளிக்கின்றன. டேவிட்லாய்ட் ஜார்ஜைப் போல், கேட்டார்ப் பிணிக்கும் பேச்சாளராகவும் அதே வேளையில் தான் கூறும் கருத்துக்களுக்கு ஆதாரமாகத் தெளிவான உண்மைகளையும், செய்திகளையும், புள்ளி விவரங்களையும் கோவையாகத் தரும் திறனை வியக்காதார் யார் ?

நாவலரது நாவன்மைக்கு ஆக்க சக்தியாக இருப்பது அவரது படிப்பும், சூழ்நிலை ஆய்வும் ஆகும். ‘‘சூழ்ச்சியாளர்கள் படிப்பை ஏளனமாகக் கருதுகிறார்கள்; சூதுவாதற்றவர்கள் அதை வியந்து பாராட்டுகிறார்கள்; நல்லறிவாளர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள்’’ என்று ஃபிரான்ஸிஸ் பேகன் எடுத்துரைத்துள்ள அருமையான கருத்து நாவலர் அவர்களது சிந்தனையை வெகுவாக ஈர்த்திருக்க வேண்டுமென்றே நான் நினைக்கிறேன். ஏனெனில், அவர் தான் கற்ற கல்வியையும், தேடிச் சேர்த்த நூலறிவையும், சிந்தித்துக் கண்ட உண்மைகளையும் தனக்கே உற்ற சொத்தாகப் பதுக்கிவைத்துக் கொள்ளாமல் மக்களிடையே மக்களுக்காகக் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தி வரும் பாங்கு போற்றற்குரியதாகும். பேகனின் அழகு நடைபோடும் சொற்களிலே சொல்ல வேண்டுமென்றால், நாவலரிடம் அற்புதமாகக் காணப்பெறுவது: “a mind nimble and versatile enough to catch semblance of things and at the same time steady enough to fix and distinguish their subtle differences, a desire to seek, patience to doubt, fondness to mediate, slowness to assert, readiness to consider and carefulness to dispose and set in order”.

பகுத்தறிவின் பகலவனாகத் திகழ்ந்த தந்தை பெரியாரின் வாரிசுகளில் முன்னிடம் பெற்று ஒளிருபவர்களுள் டாக்டர் நாவலரும் ஒருவர் ஆவார். பகுத்தறிவுக் கொள்கைகளினின்றும் சற்றும் நழுவாமல், வழுவாமல் நேர்கொண்ட பார்வையுடன் இன்றும் கம்பீரமாக ஒப்பாரும் மிக்காரும் இன்றித் தன் கருத்துக்களை மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கி வருவது அவரது அச்சமற்ற தனித்தன்மையைத்தான் பறைசாற்றுகிறது. கிரேக்க சிந்தனையாளர் சாக்ரடீஸ் பொது வாழ்க்கையில் காணப்பெறும் நிகழ்ச்சிகளிலிருந்தே பல சான்றுகளைத் தெரிந்தெடுத்து அவற்றின் மூலம் மக்களின் அறியாமையை வெளிப்படுத்தி, பகுத்தறிவே மனிதனின் ஒளிவிளக்கு என்பதைத் தம் வாழ்விலேயே நிரூபித்துக் காட்டியவர். உண்மையும் அழகுமே மனித இனத்தின் இரண்டு கண்களாகும் என்பதை அவர் வலியுறுத்தியவர். இந்தக் கோட்பாட்டைத்தான் தந்தை பெரியார், மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோர் வகுத்த வழியில் தமிழினத்திற்கு நாவலர் அவர்கள் தன் பேச்சுக்களில் பொது மேடைகளிலும் கல்வி அரங்குகளிலும் வற்புறுத்தி வருகிறார். கோடி கோடியாகப் பணம் செலவிட்டும் இன்னும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அறிவியல் மனப்பான்மை, அறிவியல் நோக்கு, அறிவியல் அணுகுமுறை வளராமல், வளர்க்கப்படாமல் இருப்பது கண்டு அவர் மனம் வெதும்பிப் பேசும்போதும், முடை நாற்றம் வீசும் மூட நம்பிக்கைகளைச் சாடும் போதும், நம் உணர்வுகளும் எண்ணங்களும் எழுச்சியுறுகின்றன. மேலும், பாவேந்தர் பாரதிதாசனின் புரட்சிக்கனல் வீசும் பாக்களைத் தங்கள் சொற்பொழிவுகளின் இறுதியில் உத்வேகத்துடனும் உணர்ச்சியுடனும் முழங்கும்போது நம் நாடி நரம்புகள் எல்லாம் முறுக்கேறுகின்றன.

ஆப்ரகாம் லிங்கன் தாழ்ந்தோர், உயர்ந்தோர், அடிமை, ஆண்டான் என்ற பேதங்களற்ற சமுதாயம் உருவாகத் தன் இன்னுயிரையே பணயம் வைத்தவர். நேர்மையே வல்லமை என்னும் அடிப்படைத் தத்துவத்தில் அசையா நம்பிக்கை வைத்து இறுதிவரையில் துணிந்து கடமையை ஆற்ற வேண்டுமென அறைகூவல் விடுத்தவர். "With malice towards none and charity for all" என்னும் இறவாச் சொற்களை முரசறைந்தவர். டாக்டர் நாவலரின் ஈரமும் வீரமும் செறிந்த சொற்பெருக்குகளிலே லிங்கனின் மனிதாபிமான நோக்கு நிழலாடுவதை நாம் காண்கிறோம். சலியாத தெம்பு, கலங்காத தெளிவு, காழ்ப்புணர்வற்ற மாண்பு, நாகரிகமான அமைதி, மாற்றானிடமும் கனிவு, பழிப்போரிடமும் நன் மனப்பாங்கு – இவையே நாவலர் அவர்களை லிங்கனுக்கு ஒப்பிடச் செய்கின்றன.

டிஸ்ரேலி, வாழ்க்கையின் தத்துவத்தை ஒரே ஒரு வாக்கியத்தில் கணித்துக் கூறியதாவது: "Man is not the creature of circumstances; Circumstances are the creatures of men" இதை வலியுறுத்தும் பாணியில்தான் நாவலரின் காந்தமணிப் பேச்சுக்கள் பல உள்ளன. சூழ்நிலைமைகளுக்கு மனிதன் அடிமையாகாமல் அவற்றைத் தன் சிறப்பான தேவைகளுக்கும், வாழ்க்கை உயர்வுக்கும் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பதை இன்றைய இளைஞர்களுக்கு அவர் சுட்டிக்காட்டத் தவறியதில்லை. கல்விக் கூடங்களை விட்டு வாழ்க்கையில் ஈடுபடும்பொழுது அவர்கள் வேலைகளுக்கு அலைபவர்களாக இல்லாமல் வேலைகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று அவர் விடுத்துள்ள அறிவிப்பு அவரது செயலாக்க அணுகுமுறையைத் தெற்றென எடுத்துக் காட்டுகிறது.

"குறள் மணக்கும் பேச்சில் குற்றாலத் தேனருவி தோற்கும்; பேசி நடிக்கின்ற பாவனையில் பெண்மணிகளின் நளினம் தோற்கும்" என்றெல்லாம் கவிவாணர்கள் நாவலருக்குப் புகழாரம் சூட்டுகிறார்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் இலக்கியத்திற்குப் புத்தொளியையும், புதிய எழுச்சியையும் ஊட்டி அதைத் தமிழகம் எங்கும் பவனிவரச் செய்த ஈடு இணையற்ற பெருமைக்குரியவர். வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி என்று கூறுவது போன்று, நாவலர் அவர்களை அண்ணா அவர்களே பாராட்டியுள்ளதை மறக்கத்தான் முடியுமா? "ஆரியப் படை கடந்தானின் ஆற்றல், பல நாடு சென்று பரணி பாடிய அடலேறுகளின் அஞ்சா நெஞ்சம், பைந்தமிழ் வேந்தரின் புகழ்க் கொடி பட்டொளி வீசிப் பறந்திட்ட மாட்சி, இவைதமை அறிந்து கவிதை ஆர்த்திடும் அருந்தமிழ்ப் புலவோன்போல இலக்கியச் செறிவும் தெளிவும் மிளிர இனிமை துள்ளிட, ஏறுநடையில் பேசினால், தமிழகத்தின் தொன்மை அறிந்த கற்றோர் களிப்படைவர். நம் மாண்பறிவர் என்று எண்ணிடும் வேளையிலே– நாவலர் நெடுஞ்செழியன் நினைவிலே வந்து நின்று, அன்புகெழுமிய தோழர்களே! தோழியர்களே! என்றழைக்கும் பாங்கு தெரியாமலிருக்குமா?" இச்சொற்கள் அண்ணா அவர்களின் நெஞ்சத்திலிருந்து தீஞ்சுவை நீரூற்றென இயல்பாகப் பீறிட்டு எழுந்தவை என்றால் அது மிகையாகாது. தமிழ் இலக்கியச் சிறப்பினைச் சுருங்கச் சொல்லி விளங்க வையுங்கள் என்று கேட்டுக்கொண்டதற்கு நாவலர் சொன்னது, "தமிழ் இலக்கியங்கள்

தொன்மை வாய்ந்தவை; தூய்மையானவை; உள்ளங்கவருபவை; எழில் மிக்கவை; இனிமை பயப்பவை; எளிமை வாய்ந்தவை; இலக்கணக் கட்டுக்கோப்புடையவை; சொற்செறிவு மிக்கவை; பொருளாழங் கொண்டவை; பல்வேறு அணிகள் மிக்கவை'' இத்தகைத் தமிழ்ச் சொற்கள் செவிகளில் தேனாய்ப் பாயும்போது யாருக்குத்தான் தமிழ் இலக்கியத்தின்பால் மாளாக் காதல் ஏற்படாது ?

தன்னடக்கம் யாருக்கும் எளிதில் வரக்கூடியது அல்ல. ஆள் உயர மாலைகள் பளபளக்கும் பொன்னாடைகள்! ஊர்வலங்கள்! பலரது புகழாஞ்சலிகள்! இவற்றிற்காகப் பேரவாவுடன் தேடி அலைபவர் உண்டு; தேடாமலே இவற்றைப் பெறக் கூடியவர்கள் இவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பதை நினைக்கும்போதுதான் அவர்களது சீர்மையும் அடக்கமும் நம்மை ஈர்க்கிறது. இந்த அடக்கம்தான் பேரறிஞர் அண்ணாவிற்கு மக்கள் உள்ளங்களில் நீங்கா இடத்தைப் பெற்றுத்தந்தது. இதே அடக்கத்தை இன்று டாக்டர் நாவலரிடம் காணும்போது அவரிடம் நாம் வைத்துள்ள மரியாதை பன்மடங்கு பெருகுகிறது. மலர்மாலை போட்டாலும் போடாவிட்டாலும், என்றும் வாடாத நறுமணங்கமழும் மனோரஞ்சிதமாகத் தன் திறத்தாலும், பண்பாலும் நாவலர் நெடிது உயர்ந்து காட்சியளிக்கிறார்.

தமிழ் மக்களின் கோடாத அன்பினையும், குன்றாத ஆதரவையும் பெற்று அரசோச்சும் புரட்சித்தலைவர் அவர்களின் பாசத்தையும் நம்பிக்கையையும் பெற்று இன்று நிதி அமைச்சராக விளங்கும் நாவலர், "a pillar of cloud by day and a pillar of fire by night" என மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து, எளியோரையும் நலிந்தவரையும், பின்தங்கியவரையும், தாழ்த்தப்பட்டவரையும் வறுமைப்பிடியினின்றும், அறியாமை இருளினின்றும் விடுவித்து வாழ்க்கைப்பாதையில் முகமலர்ச்சியோடு, வினைத் திட்பத்தோடு பீடு நடைபோட பெருந்துணையாக இருக்கப்போவதில் யாருக்கும் ஐயமிருக்க முடியாது. இக்கட்டத்தில் கிரேக்கப் பேரறிஞர் பிளேடோவின் வாக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது, "அமைதியும், மனநிறைவும் கொண்ட ஒருவனுக்கு வயதின் அழுக்கம் உணரப் பெறுவதில்லை. ஆனால், அதற்கு மாறான இயல்புடையவனுக்கு வயது ஒரு சுமையெனத் துன்புறுத்தும்.'' இவ்வாக்கில் பொதிந்துள்ள உண்மை நாவலரைக் காணும்போதும், அவருடன் உரையாடும்போதும், அவர்தம் பேச்சுக்களைக் கேட்கும்போதும் பளிச்சிடுகிறது.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகி நம் இதயங்களிலே நிலைத்த இடத்தைப் பெற்றுள்ள நாவலர் அவர்கள் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து தமிழினத்திற்கும், தமிழகத்திற்கும் சுகவாழ்வளிக்க வேண்டுமென்பதே நம் நல்விழைவாகும். ஓங்குக நாவலர் புகழ்! வளர்கஅவர் நற்றொண்டு!

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர் – 1980

❖ ❖ ❖

A MAN WITH A HEART OF GOLD

- Malcolm **S. Adiseshiah**

From time to time the world and particularly our country and this beloved state of Tamizhagam is blessed with the appearance of a person who is the embodiment of courtesy, kindness, patience, friendship and humanism and deep sense of humanity. Navalar Nedunchezhian is one such man.

His sense of courtesy springs from his unshaken belief that all men are born equal in rights and dignity. This means there cannot be some persons who are superior and others inferior, whether it be by right or religion or wealth, or social system. This is the fountain of his unrelenting fight to raise the level of living and social and cultural status of all those who have been deprived, suppressed and oppressed through Tamil history.

In this fight for our backward fellow men, women and children, Navalar brings a sense of kindness to those whom he has to oppose and fight against. There is a view that all is fair in love and war, that any means employed is

justified by the end. To Navalar this is human heresy, and his kindness to every one-friend or foe-springs from this conviction that the means employed should always be of the same human dimension as the end.

Such a sense of kindness means that there can be no hurried and time-bound limits to the achievement of his goals. In one's life, there come moments, when the sense of courtesy based on a sense of kindness, may lead seemingly to losing the immediate battle for the attainment of one's goals. It takes an extraordinary sense of time, called popularly, patience, to be able to sit back and take a long view and wait for the right moment, to take up the battle again. In my knowledge of Navalar, this happened to him twice in his life, twice when his sense of patience made him lose the particular battle but win the whole war, in the end.

This capacity of patience can become a period of void, nothingness, depression and negativism or it can be a period of widening one's circle of friends and acquaintances, a period of creative reflection over what one has done wrong or what right, and a period of meeting more fully the claims of friendship-both in discharging the claims and in accepting the claims of friendship. Navalar has shown this sense of gracious friendship during the decade and a half that I have known him-a friendship that is steady, unwavering, and is as ready and gracious in giving as in receiving.

That is because Navalar's feelings of widening friendship as are his capacity for infinite patience, his sense of inexhaustible kindness, and his fount of deep and deepening courtesy are all founded on his infinite humanism and unbounded humanity. In fact his humanism which inspires his intellectual life of writing, thinking and lecturing and his humanity which makes him the expression of the ageless Tamil wisdom, யாதும் ஊரே யாவரும் கேளிர் sometimes made me wonder whether he is not a little lost in the rough and tumble of politics and political in-fighting and outthrusts to which he has had to turn his attention in the last two decades. Can a man with a heart of Gold really mix in with the demands which politics with its ruthlessness, its onesidedness and its continuous interaction with the baser metals, make of its adherents? Per contra, I think the Gold in Navalar can help to refine the alloy of our political life into those bonds of courtesy, kindness, patience, friendship, humanity and humaneness which our Tamizhagam, our India, and our world needs.

Courtesy : Dr. Navalar Manivizha Malar - 1980

❖ ❖ ❖

செயல் திறம் படைத்த செம்மல்

- கவியரசு **கண்ணதாசன்** அவர்கள்

செல்வழி நேர்மை யாகச்
செயல்திறம் சீர்மை யாக
வல்லை ராக வாழும்
நாவலர் வாழ்வ தாக!

கண்ணனுக் கடுத்த தாக
கடவுளர் எவரு மில்லை
அண்ணனுக் கன்ப ராக
அமைந்தவர் இவரே என்று
அண்ணனே சொன்ன துண்டு;
அந்தநாள் முதலாய்த் தொண்டு
கண்ணெனக் கருதி நின்றார்
காவலர் வாழ்வ தாக!

பட்டிகள் யாவும் சென்று
பலதுறை மக்கள் தம்மை
வட்டமிட் டவர்கள் வாழ்வின்
வறுமையை அறிந்துகொண்ட
பெட்பினா லின்று வந்த
பெரியதோர் பதவி தன்னைக்
கட்டியே காக்க லானார்
காலத்தால் உயர்ந்து வாழ்க!

நன்றி: நாடு போற்றும் நாவலர்
56ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர்
11.05.1975

❖ ❖ ❖

கற்றவை மனதில் நிற்கும்
களத்திலே மழையாய்ப் பெய்யும்
சொற்றிறம் சபையை வெல்லும்
சோர்விலா உடலின் வேந்தன்
நற்றிறம் கண்டே அன்றே
'நாவலர்' என்றார் அந்தக்
கொற்றவன் நீடு வாழ்ந்து
குவலயம் காப்ப தாக!

கல்வியிற் புதுமை கண்டார்
கடுமையாய் உழைத்து ழைத்து
நல்லதோர் விளைவும் கண்டார்.
நாட்டவர் மதிப்பும் கண்டார்

பூக்கடைக்கு விளம்பரம் ஏன்

- கவிஞர் **வாலி** அவர்கள்



கோலோச்சும் காரியத்தில் பாண்டிமன்னன் ! – கற்பைக்
கோயிலெனக் கொள்வதிலே சேரநாடன் !
நூலோரைப் போற்றுவதில் சோழவேந்தன் – நல்ல
நுண்கலையைப் பேணுவதில் பல்லவர்கோன் !
மேலோங்கும் புகழனைத்தும் மேவிநிற்கும் – அரிய
மேதையெனும் நெடுஞ்செழியர் மேன்மையெல்லாம்
பூலோகம் அறிந்திருக்கும் பழையசேதி ! – வாசப்
பூக்கடைக்கு என்பாட்டால் விளம்பரம் ஏன் ?

சொன்மாரி பெய்யவல்ல தமிழ்க்கொண்டல் ! – அறிவுச்
சுடர்கொளுத்தி ஒளியுமிழும் ஞானச்செம்மல் !
பொன்மாரி பெய்திடினும் போக்குமாறி – உலவும்
புலைநடையை ஏற்றிடாத கொள்கைத் தென்றல்!
கன்மாரி பெய்வார்க்கும் கலங்கிடாது – உற்ற
கருத்தென்றால் எடுத்தோதும் ஆண்மைச் சிங்கம்!
நன்பாண்டி முத்தேபோல் நகைதுலங்கும் – மிக்க
நல்லவராம் நெடுஞ்செழியர் நாளும் வாழ்க!

நன்றி: நாடு போற்றும் நாவலர்
56ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர்
11.05.1975

❖ ❖ ❖

நினைவில் நாவலர்



நாவலர் நூற்றாண்டு நிறைவு விழா
ஓர் அரிமா நோக்கு

- திரு. **க.திருநாவுக்கரசு** அவர்கள்



அறிஞர் அண்ணா அவர்கள் இரா.நெடுஞ்செழியனுக்கு 'நாவலர்' எனும் அடைமொழியை வழங்கி சிறப்பித்தார். கழகத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பட்டம் பெயருக்கு முன்னால் இருந்து வந்து இருக்கிறது. அது ஒரு சிறப்புக் கருதி வழங்கப்பட்டு வந்த அடைமொழி; முன்னொட்டு. அதைப் போல அண்ணா இரா.நெடுஞ்செழியனை 'நாவலர்' என்றே சிறப்பித்து அழைத்தார். நாவலர் இரா.நெடுஞ்செழியன் என்றே எழுதினார். நாவலர் என்றால் நாவன்மையுடையவர்; புலவர்; அமைச்சர் என்று பொருள். நாவலர் இரா.நெடுஞ்செழியனுக்கு இம்மூன்றும் பொருத்தமுடையனவாகவே இருந்தன.

நாவலர் இரா.நெடுஞ்செழியனின் தந்தையார் இராசகோபாலன் பெரியார் இயக்கத்தினர்; சுயமரியாதை வீரர். பெரியாரோடு தொடர்பு வைத்து இருந்தவர். நாவலரின் தமையனார் ரா.சௌரிராஜன் குடியரசில் எழுதியவர். நாவலருக்கு ஒரு தமக்கை, ஒரு தங்கை, இரு தம்பியர் உண்டு. மூத்த தம்பி நாம் எல்லோரும் அறிந்த இரா.செழியன்.

1929ஆம் ஆண்டு பட்டுக்கோட்டையில் முதலாவது மாகாண சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாடு நடைபெற்றது. அப்போது நாவலருக்கு 9 வயது. அம்மாநாட்டிற்கு நாவலரின் தந்தையார் இராசகோபாலன் அவரை அழைத்துச் சென்றார். அப்போதுதான் முதன் முதலாகப் பெரியாரை நாவலர் நேரில் பார்த்தார். நாவலரின் சகோதரர்களுக்கு ஒரு பழக்கம் இருந்து வந்து இருக்கிறது. உயர்நிலைப் பள்ளியில் படிக்கிறபோதே அவர்கள் வசித்த வட்டாரங்களில் சுயமரியாதை மாநாடோ, பொதுக் கூட்டங்களோ நடைபெற்றால் அந்நிகழ்வுக்குச் சென்று கேட்பது என்கிற பழக்கம்தான் அது!

இந்தப் பழக்கம் அவருக்கு ஒரு பயிற்சியாகி பகுத்தறிவுவாதியாக கடைசி வரை உறுதிமிக்க இறை மறுப்பாளராக இருப்பதற்கு அறிவார்ந்த வழியை அமைத்துக் கொடுத்தது. பகுத்தறிவுப் பற்றியும், நாத்திகம் பற்றியும் நாவலர் பேச்சு பழுத்த ஆத்திகரையும் நாத்திகராக்கி விடும். அந்த அளவுக்கு வலிமை மிக்க ஆதாரத்தோடு பேசுவார்.

நாவலர் இரா.நெடுஞ்செழியன் நெடிதுயர்ந்த தோற்றம்; சிரித்த முகம்; மேல்நோக்கிச் சீவிய சிகை; வீரஞ்செறிந்த அரும்பு மீசை; அருகே அமர்ந்து பேசும்போது செவிமடுத்துக் கேட்கும் இங்கிதம்; பகுத்தறிவு கலந்த சிந்தனை; கொள்கையும் – நடைமுறையும் ஒத்த வாழ்க்கை; அரசியல் கட்சி, பதவி இவற்றிற்கு அப்பால் ஓர் உயர்ந்த அடையாளம் – இவ்வளவு புறப்பொலிவு உள்ளவர் அவர்.

1939ஆம் ஆண்டு நாவலரின் தமையனார், தமக்கையார் திருமணங்கள் பெரியாரின் தலைமையில் நடைபெற்றன. இதன் பிறகு, நாவலருக்குப் பெரியாரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புகள் ஏற்பட்டன. 1944ஆம் ஆண்டு ஜனவரியில் நாவலர், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயின்று வந்தார். அப்போது அவர் தமிழ் இலக்கிய மன்றத்தின் செயலாளராகப் பணியாற்றி வந்தார். இத்தருணத்தில் பெரியார் அவர்களை மன்றத்தின் சிறப்புக் கூட்டத்திற்கு அழைத்துப் பேசவைத்தார்.

பெரியார், ‘பகுத்தறிவு இயக்கத்தின் பண்பட்டநெறி’ எனும் தலைப்பில் 2 மணி நேரம் உரையாற்றினார். இக்கூட்டத்திற்கு நாவலர் ஆற்றிய வரவேற்பு உரையை பெரியார் கேட்டு விட்டு மிகவும் பாராட்டினார். பல்கலைக்கழகத்தில் நாவலர் தங்கியிருந்த விடுதி அறைக்குப் பெரியார் அழைத்துச் செல்லப்பட்டார். அந்த அறையில் நாவலர் எழுத்துப் போட்டியிலும், பேச்சுப் போட்டியிலும் வாங்கிய கேடயங்கள், தங்கப்பதக்கங்கள், வெள்ளிக்கோப்பைகள், பரிசுநூல்கள் ஆகியவற்றைப் பெரியார் பார்த்தார்; பாராட்டினார். பலகலைக்கழகப் படிப்பு முடிந்தவுடன் நாவலரைப் பொதுத்தொண்டிற்கு வருமாறு அழைத்தார் – பெரியார்!

பெரியாரிடம் நாவலர் ஒரு சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டதைப் போலவே, அறிஞர் அண்ணாவை அவர் சந்திக்கிற வாய்ப்பைப் பெற்றார். 1941ஆம் ஆண்டு சிதம்பரம் பொதுக் கூட்டத்திற்காகப் பேசுவதற்கு அறிஞர் அண்ணா வந்து இருந்தார். அவரைச் சந்தித்துத் தம்மை அறிமுகம் செய்துகொண்டார். இதற்கு முன்பே நாவலர் அறிஞர் அண்ணாவைப் பார்த்து இருக்கிறார். அவர் பேச்சையும் கேட்டு இருக்கிறார்.

துறையூர் சுயமரியாதை மாநாட்டிற்குச் 'சென்னைத் தோழர் சி.என்.அண்ணாதுரை தலைமை தாங்குவார்' என விளம்பரப்படுத்தப்பட்டு இருந்தது. இந்த மாநாடு 1937ஆம் ஆண்டு நடைபெற்றது. உயர் நிலைப்பள்ளி மாணவர்களாக இருந்த நாவலரும், அவர் தம்பி இரா.செழியனும் இம்மாநாட்டிற்குச் சென்று இருந்தனர். அங்கேதான், அறிஞர் அண்ணாவை அவர்கள் இருவரும் பார்க்கவும், அவரது மேடைப் பேச்சைக் கேட்கவுமான வாய்ப்பைப் பெற்றனர். இதைப் பற்றி இரா.செழியன் 'அறிஞர் அண்ணாவோடு கால் நூற்றாண்டு' எனும் முடிவுறாத தொடரில் எழுதி இருக்கின்றார். இம்மாநாட்டிற்கு இரு சகோதரர்களும் பார்வையாளர்களாக மட்டுமே சென்று இருந்தனர்.

இதன்பிறகு, பேராசிரியர் க.அன்பழகன் அண்ணாமலை பல்கலைக்கழக மாணவராக இருந்தபோது – தமிழ் இலக்கிய மன்றத்தின் செயலாளராகவும் அவர் திகழ்ந்தார். பேராசிரியரின் ஏற்பாட்டில் அறிஞர் அண்ணா 'ஆற்றோரம்' எனும் தலைப்பில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பேசினார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தில் ஒரு திராவிட மாணவர் பட்டாளமே உருவாயிற்று. அதில் ஒருவராகவும் நாவலர் விளங்கினார்.

நாவலர் பெரும் பேச்சாளராகத் திகழ்ந்தவர். ஒரு பொருளையொட்டி அவர் பேசத் தொடங்கினால் அப்பேச்சைக் கேட்பவர் அப்பொருளைப் பற்றி நன்றாக விளங்கிக் கொள்பவராகத்தான் இறுதியில் செல்வார். அத்தகையப் பேச்சாற்றல் உடையவர் அவர்! அவர் முதன் முதலில் பொதுமேடையில் பேசியது 1943இல் தான்! அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு' வார இதழுக்கு நிதி வழங்கிய பட்டுக்கோட்டைப் பொதுக் கூட்டத்தில் அவர் மேடையேறினார். அந்நிகழ்ச்சியில் அ.பொன்னம்பலனாரும் கலந்துகொண்டார். நாவலர் பேச்சு மேடை ஏறுவதற்குப் பேராசிரியர் க.அன்பழகன் தான் காரணமாக இருந்தார்.

1956ஆம் ஆண்டு வெளிவந்த முரசொலி பொங்கல் மலரில் நாவலர், "அறிஞர் அண்ணா அவர்களின் திராவிட நாடு இதழும் அறிஞர் அண்ணாவோடு 1943இல் அண்ணாமலை நகரில் மாணவர்களாகிய நாங்கள் நடத்திய உரையாடலும் எங்களைத் திராவிட இயக்கத்தின்பால் முழுக்க முழுக்கக் கொண்டு வந்து சேர்த்தன. 1941–1942இல் நானும், அன்பழகனும் இருவராக இருந்தோம். 1942 – 1943இல் சிலராக ஆனோம். எங்களைத் தொடர்ந்து தோழர்கள் இளம்வழுதி, மதியழகன், வில்லாளன், அரங்கண்ணல் போன்றவர்கள் திராவிட மாணவர் இயக்கப் பரம்பரையைத் தொடர்ந்து அண்ணாமலை நகரில் வளர்ப்பவராயினர்" என்று குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் க.அன்பழகன் நாவலர் மேடை ஏறுவதற்குக் காரணமானாலும் மேடையில் ஏறி, நாவலர் பேச ஆர்வத்தைத் தூண்டிய பேச்சாளர்களாகத் திகழ்ந்தவர்கள் பட்டுக்கோட்டை கே.வி.அழகர்சாமி, பி.ஜீவானந்தம், அறிஞர் அண்ணா ஆகியோரே ஆவர். பழங்கால மேடைகளில் அவர் பெயர் சில ஏடுகளில் நாராயணசாமி பேசினார் என்று குறிப்பிடப்பட்டு அடைப்பில் நெடுஞ்செழியன் என்று வெளியிடப்பட்டு இருக்கிறது. 1943–1948 வரை பெரியார், அண்ணா, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரோடு பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பேசி இயக்கத்தை வளர்த்தவர் நாவலர். சில மேடைகளில் 3 மணி நேரத்திற்கும் அதிகமாகப் பேசியவர் அவர்.

நாவலரின் பேச்சில் இலக்கியம், இலக்கணம், வரலாறு, மொழியியல், தத்துவம், பகுத்தறிவு போன்றவை இடம் பெற்று இருக்கும். பகுத்தறிவுக் கருத்துகள், சங்க இலக்கியங்கள், திருக்குறள் ஆகியன பற்றி நாவலர் பேசினால் கேட்போரை ஈர்ப்பது மட்டுமன்று; சிந்தனையைக் கிளறச் செய்வனவாகும். தமிழகமெங்கும் மேடைகளில் நாவலர் பேசுகிறபோது புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பாடல்களைச் சொல்லாமல் இருக்க மாட்டார். சிலபோது கவிதைகளில் தோய்ந்து மூழ்கி விளக்கவுரையே ஆற்றத் தொடங்கி விடுவார். பாரதிதாசனை இனிக்க, மணக்க வைத்தவர் நாவலர். அவர் பேச்சு முடிகிற தருவாயில் புரட்சிக் கவிஞரின் ‘வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்’ எனத் தொடங்கும் கவிதையையும், ‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு’ எனும் பாடலையும் கூறாமல் பேச்சை அவர் முடிக்கவே மாட்டார்.

இக்கட்டுரையாளரான நாம் 1959ஆம் ஆண்டுதான் இவரது பேச்சை முதன்முதலாகக் கேட்டோம். சென்னையில் இராஜா அண்ணாமலைபுரம் உருவாகி முடிந்த நேரம் அது! அங்கே புதிதாக வீடு கட்டிக் குடி புகுந்த அறிஞர் அண்ணாவின் நண்பர் எஸ்.எஸ்.பி. லிங்கம் தனது பெண் பிள்ளைகள் இருவருக்கு எழுத்தறியும் விழாவினைக் கொண்டாடினார். அந்த நிகழ்ச்சியில்தான் நாவலர் 1¾ மணி நேரம் பேசினார். அவர் உரையாற்றும்போது பயன்படுத்திய தமிழ்ச் சொற்களும் அப்பேச்சின் ஆற்றொழுக்கும் எமது செவிகளில் ஏற்படுத்திய இனிமையை நாம் உயிரோடு இருக்கிறவரை மறக்கவே முடியாது.

நாவலரின் மேடைப் பேச்சில் அவராற்றிய நாம் கேட்ட ஆறு உரைகளை எம் நினைவிலிருந்து என்றும் அகற்ற முடியாது.

★ 1959–1960ஆம் ஆண்டுகளில் திராவிட நாடு பிரிவினை வாரக் கொண்டாட்டத்தைத் தி.மு.க. நடத்தி வந்த காலம். நாவலர் தி.மு.க.வின் பொதுச் செயலாளர். திராவிட நாடு பிரிவினை வாரக் கூட்டம் சென்னை மயிலாப்பூர் மந்தைவெளி நார்டன் சாலை சந்திப்பில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அந்தப் பகுதியில் அப்போதுதான் புதிய குடியிருப்புக் கட்டடங்கள் தோன்றியிருந்தன. அந்தப் பகுதியில் கலைமகள் மாத இதழின் ஆசிரியரும், டாக்டர் உ.வே.சாமிநாதய்யரின் சீடருமான கி.வா.ஜகந்நாதன் குடியேறி இருந்தார்.

அன்று மாலையிலிருந்தே பூந்தூறல் இருந்துகொண்டே இருந்தது. அப்போதும் கூட்டம் நடந்துகொண்டுதான் இருந்தது. நாவலர் பேசத் தொடங்கினார். தூறல் தொடர்ந்தது; ஆனால், கூட்டம் கலையவில்லை. இந்தக் கூட்டத்தில் நாவலர் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலிலிருந்து சான்று காட்டிப் பேசிக்கொண்டு இருந்தார். படித்தவர்களும், பாமரர்களும் விளங்கிக்கொள்ளும் விதத்தில் நாவலர் பேசினார். தேர்ந்த ஆசிரியர் ஒருவர் பாடம் நடத்துவதைப்போல நாவலர் உரை அமைந்து இருந்தது. பொதுக்கூட்டத்தில் இலக்கண வகுப்பு நடத்தினார் அவர்! கூட்டத்தின் கடைசி ஒலிபெருக்கிக்குச் சற்றுத் தள்ளி குடை பிடித்துக்கொண்டு கி.வா.ஜகந்நாதன், நாவலர் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்ததை நாம் பார்த்தோம்.

★ சேக்கிழார் ஆய்வு மய்யத்தில் நாவலர் பேசினார். பெரிய புராணத்தைத் தொடாமலேயே 'தொன்மங்கள்' எப்படிப் பகுத்தறிவுக்கு எதிராக இருக்கின்றன? வாழ்க்கைக்கு இலக்கியத்தின் தேவை என்பது ஒரு பாதுகாப்புக் கருவியாக இருக்க வேண்டுமே ஒழிய, அறிவை மழுங்கடிக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. அறிவுக்கும் – தொன்மத்திற்குமான இடைவெளியைக் குறைத்து, அறிவை மேம்படுத்துவது எப்படி என்பதாக இலக்கியம் மனிதனுக்கு பாடம் புகட்டுவதாக இருக்க வேண்டும், எனும் விதமாகச் சேக்கிழார் ஆய்வு மய்ய பேச்சு அமைந்தது. இந்த மய்யத்தை அப்போது நடத்தி வந்தவர் நாவலர், பேராசிரியர் ஆகியோரின் ஒரு சாலை மாணாக்கராகத் திகழ்ந்த பேராசிரியர் அ.சா.ஞான சம்பந்தம் அவர்களே ஆவார். இவர் திராவிட இயக்கத்தை கடுமையாக விமர்சித்து வந்தவர்.

★ 1971ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றது. கலைஞர் தலைமையில் அமைச்சரவை அமைக்கப்பட்டது. 14 பேர் கொண்ட அமைச்சரவையில் நாவலரும் இருந்தார். இந்த அமைச்சரவைக்குப் பெரியார் மாபெரும் பாராட்டையும், வரவேற்பையும் அளித்தார். அக்கூட்டத்தில் நாவலர் 'கடவுள்' குறித்துப் பேசினார். அவரது பேச்சு அனைவரையும் கவர்ந்தது. வாதத் திறமையுள்ள அப்பேச்சு அனைவராலும் வரவேற்கப்பட்டது.

★ அலைகள் வெளியீட்டகம் நடத்தும் பெ.சிவம் பகவான் எழுதிய ஆதிசங்கரர் பற்றிய நூலை ஆங்கிலத்தில் இருந்து தமிழில் வெளியிட்டு இருந்தார். அந்நூலை நாவலர் விமர்சனம் செய்தால் நன்றாக இருக்கும். நீங்கள் ஒரு தேதி வாங்கிக் கொடுக்க முடியுமா? என்று கேட்டார். சிவத்தை நாம் நாவலரிடம் அழைத்துப் போனோம். நாவலர் நூலை புரட்டிப் பார்த்தார். நிகழ்ச்சிக்கு ஒப்புக்கொண்டார். பாவாணர் அரங்கில் ஆதிசங்கரர் பற்றிய விரிவுரையும் பகவான் தனது நூலில் கூறியுள்ளவைகளையும் ஒப்பிட்டு கடைமடை திறந்தாற்போல் நாவலர் பேசினார்.

★ 'திருக்குறளும் திராவிட இயக்கமும்' எனும் எமது நூலை மயிலையில் வெளியிட்டு நாவலர் இரண்டேகால் மணி நேரம் பேசினார்.

நாவலரின் கம்பீரம் நிறைந்த பொருள் பொதிந்த பேச்சுகளின் தனித்தன்மைகள் அறிஞர் அண்ணாவை வெகுவாகக் கவர்ந்தன. அவர் சொல்கிறார்:

“ஆரியப் படை கடந்தானின் ஆற்றல், இமயம் முட்டிய பெரும்படை நடத்தியவனின் பெருமை, சாவகம், யவனம், சிங்களம் எனும் பல நாடுகள் சென்று பரணி பாடிய, அடலேறுகளின் அஞ்சாநெஞ்சம் பரணி பாடித் தரணியாண்ட பைந்தமிழ் வேந்தரின் புகழ்க்கொடி பட்டொளி வீசி பறந்திட்ட மாட்சி இவற்றை முகப்படாம் போர்த்த யானை மீதமர்ந்து முரசொலித்துச் செல்லும் ஆணையாளன் போலவும், இன்று இயற்றும் இன்கவிதை என்றும் நிலைத்து நின்று அறிவு புகட்டும் என்று அறிந்து கவிதை ஆர்த்திடும் அருந்தமிழ் புலவோன் போலவும், தமிழழகும் இலக்கியச் செறிவும் மிளிர, இனிமை துள்ளிட, ஏறுநடையில் பேசினால், தமிழகத்தின் தொன்மை அறிந்த கற்றோர் களிப்படைவர். கழகத்தின் மாண்பறிவர் என்று எண்ணிடும் வேளையிலே, நாவலர் நெடுஞ்செழியன் நினைவிலே வந்து நின்று அன்பு கெழுமிய தோழர்களே! என்றழைக்கும் பாங்கு தெரியாமல் இருக்குமா ?

“என்னிடம் இல்லாத – நான் விரும்பாததால் அல்ல, இல்லாததால் – ஓர் அருங்குணம் அவரிடம் (நெடுஞ்செழியனிடம்) உண்டு – கண்டிருப்பீர்கள். ஓயாது உழைப்பது! எப்போதும் எங்கேயும் எதையாவது எப்படியாவது செய்துகொண்டிருப்பது. என்னாலே இதைக் கண்டு இரசிக்க முடியும். ஆனால், என்னை அந்த நிலைக்கு மாற்றிக் கொள்ள இயலவில்லை. இந்த அருங்குணத்தை நாம் நன்றாகப் பயன்படுத்தி, கழகத்தை மேன்மையுறச் செய்துகொள்ள வேண்டும்.

தோழர் நெடுஞ்செழியனைப் பெரியார், தமது மேற்பார்வையில் வைத்திருந்துப் பார்த்தார்–அவரால் யார் மீதும் குற்றம் காண முடியும் – ஆனால், நெடுஞ்செழியனிடம், அவராலும் ஒரு குறைகூடக் கண்டறிந்து கூற இயலவில்லை. அத்தகையப் பணியாளர் நமக்குக் கிடைத்து இருக்கிறார்”.

மேலே நாம் அறிஞர் அண்ணாவின் இரண்டு நற்சான்றுகளை நாவலர் பற்றி எடுத்துக்காட்டி இருக்கின்றோம். அதிலிருந்து நாவலரின் அனைத்துத் திறமைகளையும், பண்புகளையும் நாம் அறிந்து கொள்ளலாம். தி.மு.கழகம் உருவானபோது, உடன் இருந்த தலைவர்கள் – உருவாக்கிய தலைவர்கள் எல்லாம் இன்று யாரும் நம்மிடையே இல்லை. கடைசியாக பேராசிரியரும் மரணம் அடைந்து விட்டார். தி.மு.கழகத்தின் முதல் பொதுக்குழு உறுப்பினர்களுள் ஒருவரும் நம் இயக்கத்தின் பழந்தலைவர்களையெல்லாம் நன்கு அறிந்தவருமான எழுத்தாளர் மா.செங்குட்டுவன் நம்மிடையே வாழ்ந்து வருகிறார். தி.மு.கழகத்தின் முன்னணித் தலைவர்களெல்லாம் எழுத்து, பேச்சு, மக்கள் தொடர்பு ஆகியவற்றில் சிறந்தவர்களாக தம்மைத் தாமே தயாரித்துக் கொண்டார்கள். ஒவ்வொருவரும் தின, வார, மாதமிருமுறை, மாத இதழ்களை நடத்தினார்கள். இதன் மூலம் நாட்டு மக்களிடையே கொள்கை விளக்கங்களை எடுத்துச் சொன்னார்கள்.

அவர்களும் வளர்ந்தார்கள்; கழகத்தை, இயக்கத்தையும் வளர்த்தெடுத்தார்கள். அந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர்தான் நாவலர் அவர்கள்!

அறிஞர் அண்ணா அவரை அறிந்து உணர்ந்தது முதல் அவரைப் பயன்படுத்திக் கொண்டே வந்தார். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்குப் பொற்கிழி வழங்கிய நிகழ்வில் நாவலரை அண்ணா பங்கேற்கச் செய்தார். அது 1946ஆம் ஆண்டு. தி.மு.கழகம் தொடங்கப்பட்ட நாளன்று அண்ணா, நாவலரை உடன் வைத்துக் கொண்டே செப்டம்பர் 17, 1949இல் எண்.7, பவழக் காரத் தெரு என்கிற முகவரியில் உள்ள கட்டடத்தில் அறிக்கையைப் படித்தார். தி.மு.கழகம் அங்கேதான் பிறந்தது.

நாவலரை அறிஞர் அண்ணா; தி.மு.கழகத்தின் (முதல்) கொள்கை பரப்புச் செயலாளராக – அதாவது, பிரச்சாரச் செயலாளராக நியமனம் செய்தார். நாவலரின் பொது வாழ்க்கையின் நடைமுறையை பொன்னி அறிமுகப்படுத்திய எழுத்தாளரான சந்தன தேவன் ‘தென்றல்’ இதழில் நாவலர் எழுதிய கட்டுரையில் கழகத் தோழர்களுக்கு, ஓர் அறிவுரையை வழங்குகிறார். அவர் எழுதுகிறார்:

“நம் கழகத்தின் வேலை கூட்டம் போடுவது, ஊர்வலம் நடத்துவது மட்டுமல்ல தோழர்களே! ஊராருடன் நெருங்கிப் பழக வேண்டும். அவர்கள் வாட நாம் வாழக் கூடாது. அவர்கள் வாழ்வு நம் வாழ்வு! அவர்கள் கண்களில் நீர் வழிந்தால் உங்கள் கண்களில் உதிரம் கொட்ட வேண்டும். இனியாவது இந்த வழியில் ஈடுபடுங்கள்.”

நாவலரின் இவ்வெழுத்து மொழி பொதுத் தொண்டிற்குத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் தோழர் எவ்வாறு பொதுமை நோக்குடன் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டினார்.

நாவலரின் மேடைப் பேச்சுக்கு நாமோ அறிஞர் அண்ணாவோ சான்றிதழ் வழங்குவது ஒரு மரபு என பிறர் கருதக் கூடும். 1961ஆம் ஆண்டு திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தி.மு.க. 3ஆவது மாநில மாநாட்டில் நாவலர், ‘மொழியும் விழியும்‘ எனும் தலைப்பில் பேசினார். இம் மாநாடு பற்றி ‘ஆனந்த விகடன்’ ஒரு சிறப்பிதழ் வெளியிட்டது. அதில் நாவலரின் பேச்சைப் பற்றி,

“திரு. நெடுஞ்செழியன் அவர்கள் மொழியும் – விழியும் என்ற தலைப்பில் நிகழ்த்திய உரை குறிப்பிடத்தக்கது. அவர் உரையில் நகைச்சுவையும், பொருட் சுவையும் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தன” என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இப்படி பேச்சு மேடைகளைக் கிடுகிடுக்க வைத்த நாவலர் சட்டமன்றத்தில் முதன்முதலாகப் பேசும்போது மயங்கி விழுந்தார். சிறிது நேரத்திற்குப் பின் அவர் பேச்சைத் தொடர்ந்தார். நாவலர் 1957ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தார். 1962ஆம் ஆண்டு அவர் சட்டமன்ற உறுப்பினராக ஆனதோடு எதிர்க்கட்சித்

தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தத் தேர்தலில் சட்டமன்றத்திற்கு அறிஞர் அண்ணா தேர்ந்தெடுக்கப்படவில்லை.

எதிர்க்கட்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாவலர் ஆளுநர் உரையின் மீது உரையாற்றுகிறபோது, நடுக்கம் ஏற்பட்டு மயக்கமும் வந்துவிட்டது. இவருக்கு அடுத்து இருக்கிற சட்டமன்ற உறுப்பினர் முதலுதவி செய்தார். சபாநாயகர் அந்தப் பதற்றத்திலிருந்து சபையின் கவனத்தைத் திருப்பினார். சிறிது நேரத்திற்குப் பின், நாவலர் பேசத் தொடங்கினார். அந்தப் பேச்சில் ஏன் மயக்கம் ஏற்பட்டது என்பதற்கான காரணத்தையும் அவர் விளக்கி இருப்பார். அவைக் குறிப்பில் உள்ளவாறு.....

அவைத் தலைவர் அவர்களே ! மயக்கத்தின் காரணமாக நான் பேச வேண்டிய பேச்சுகளைப் பேச முடியாமல் போயிற்று, அதற்காக என்னை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். புதியதாக இருக்கிற காரணத்தினாலும், பொறுப்பு உணர்ச்சி அதிகமாக இருக்கிற காரணத்தினாலும் அளவுக்கு மீறி நான் கண் விழித்துக் கருத்துக்களைத் திரட்டுகிற பொறுப்பு உணர்ச்சி அதிகமாக இருக்கிற காரணத்தினாலும் தேவைக்கு மேலே கருத்துக்களையெல்லாம் இரவெல்லாம் திரட்டிய காரணத்தினாலும் ஏற்பட்டதாக இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். எனவே, இந்தக் குறையைப் பொருத்தருளுமாறு அவைத்தலைவர் அவர்களையும், மற்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு வெளியிட்டுள்ள சட்டமன்றக் குறிப்புகளில் இருக்கிற இப்பதிவு எமக்குப் பெருவியப்பை ஏற்படுத்துகிறது. எவ்வளவு ஆற்றல் வாய்ந்த பேச்சாளர் சட்டமன்றத்தில் அவர் முதல் பேச்சின்போது, மயக்கமடைய வேண்டியதாயிற்று. அதற்குக் காரணத்தை நேரிய முறையில் அவர் விளக்கி இருக்கிறார். நாவலர் சிறந்த பேச்சாளர் மட்டுமன்று; சிறந்த எழுத்தாளருமாவார். 1948ஆம் ஆண்டு மன்றம் எனும் வார இதழினைத் தொடங்கினார். இவ்விதழ் தொடங்கும் முன் செய்தியறிந்து புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நாவலருக்குக் கீழ்க் காணும் வாழ்த்துப் பாடலை அனுப்பி வைத்தார்.

மன்றம் என்பதோர் மாத இதழை
இன்றெம் தோழர் எழில் நெடுஞ்செழியனார்
எழுதி வெளியிட இசைந்ததைப் போற்றுதும்,
எழுது புலமை எழுத்தாளர் ஆதலின்!
அன்னார் கருத்தை அமுதாகக் கொள்ளுதும்
பன்மொழிப் புலமைப் படைத்தாராதலின்! மன்றம் நன்கு வாழ்க!

என்றும் நெடுஞ்செழியனார் இனிதே வாழியவே!

– நாவலர் நடத்திய மன்றம் 1948 – 1986 இடைவெளிக்குள் நான்கு முறை நின்று நின்று வெளிவந்தது. இவரது எழுத்துக்களின் உள்ளடக்கம் கனமானது. தொடக்கக்

காலத்திலும் சரி, பின்னரும் சரி. அதில் வெளிவந்த கட்டுரைகள் ஆழமான கருத்துக்களை பெற்று வெளிவந்து கொண்டு இருந்தன. அதனால்தான் நாவலர், அதன் முதல் இதழிலேயே இவ்வேடு இயக்க முன்னணியினருக்காக நடத்தப்படுகிற ஏடு – இதன் கருத்தாக்கம் சற்றுக் கடினமானதே எனக் குறிப்பிட்டிருந்தார். இதை இன்னொரு வகையில் சொல்வதானால் இயக்கத்தின் அடிமட்ட உறுப்பினரையும், பொது மக்களையும் ஈர்க்கின்ற பணியைச் செய்கிற முன்னணியினரைத் தயாரிக்கிற வேலையைத்தான் 'மன்றம்' இதழ் செய்து வந்தது.

நாவலரின் 'மன்றம்' இதழில் வினா – விளக்கம் பகுதி மிகச் சிறப்புக்குரியதாக விளங்கியது. அறிஞர் அண்ணாவின் உவமை நயம் இதழ்தோறும் இடம் பெற்று வந்தது. குறுந்தொகை காட்சி. திருக்குறளின் உவமை நயம், நாவலரின் எழுத்துகளில் மன்றத்தில் மிளிர்ந்தன. இரா.செழியனின் அரசியல் கட்டுரைகளும், கதைகளும் அதில் இடம் பெற்றன.

நாவலரின் மன்றம் இதழ் 01.01.1948 முதல் மாத இதழாகத் தொடங்கப்பட்டு, குறுகிய காலத்திலேயே நிறுத்தப்பட்டு விட்டது. மீண்டும் 01.01953இல் மாதமிருமுறையாக வெளிவந்து அந்தக் காலகட்டத்திலேயே வார இதழாக மலர்ந்தது. இவ்விதழ் 1967 வரை தொடர்ந்து வெளிவந்து கொண்டு இருந்தது. அதன் பின்னர் 1969லும், 1986லும் வெளியிடப்பட்டது. இந்த இதழ்கள் எல்லாம் அண்ணா அறிவாலயத்தில் இருக்கின்றன. ஒருமுறை போய் புரட்டிப் பாருங்கள். அதில் நாவலரின் அறிவின் நிமிர்ச்சி மட்டுமில்லை; நம் இயக்கத்தின்– கழகத்தின் மாண்பும், பெருமிதமும் அவற்றில் பக்கந்தோறும் பேசப்படுவனவாக இருக்கும். நாவலரின் அறிவின் ஆழத்தையும், அவர் வெளிப்படுத்தும் நுட்பத்தையும் நாம் அறியலாம்.

நாவலர் முதன்முறையாக மன்றம் இதழை நிறுத்தியதற்குப் பிறகு 1949இல் அறிஞர் அண்ணாவின் திராவிட நாடு இதழுக்குப் பொறுப்பாசிரியராக இருந்தார். இவர் பொறுப்பாசிரியர் ஆனபின் 17.04.1949 தேதியிட்ட திராவிட நாடு இதழில் 11ஆம் பக்கத்தில் கீழ்க்காணும் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டது. "தோழர் இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்கு அஞ்சல் வரைவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு வரைவாளர்களாக!

இரா.நெடுஞ்செழியன்
மே / பா. திராவிட நாடு
95, திருக்கச்சி தம்பித் தெரு, காஞ்சிபுரம்"

திராவிட நாடு இதழில் நாவலர் நீண்ட காலம் பொறுப்பாசிரியராக இல்லை. துல்லியமாக எவ்வளவு காலம் இருந்தார் என்றும் நம்மால் சொல்ல முடியவில்லை.

நாவலர் தொடக்கக் காலத்தில் சிறுசிறு நூல்களாக எழுதினார். மனப்போக்கு மாற வேண்டும். கம்பரும், வம்பரும், சமத்துவம், புதிய பாதை, விடியுமா? (நாவல்),

கண்ணீரும் செந்நீரும் போன்றவற்றைச் சொல்லலாம். ‘அண்ணாவோடு இருந்த அந்த சிறைவாசம்’ எனும் நூலை எழுதி இருக்கிறார். அறிஞர் அண்ணாவோடு தனது சிறை அனுபவங்களையும் அந்நூலில் நாவலர் குறிப்பிட்டு இருக்கிறார்.

நாவலர் எழுதிய திருக்குறள் விளக்க உரை மிகச் சிறப்பானதாகும். அவ் விளக்கவுரைக்கு அவர் வரைந்துள்ள முன்னுரை திருக்குறளைக் கற்க விரும்புகிற ஒவ்வொருவரும் படித்துணர்ந்து நெஞ்சத்தில் இருத்திக்கொண்ட பின்தான் குறளைக் கற்கத் தொடங்க வேண்டும். நாவலரின் திருக்குறள் உரை திராவிட இயக்கத்தார் ஒவ்வொருவரும் அவர் இல்லத்தில் வைத்திருக்க வேண்டிய நூலாகும்.

நாவலர் திருக்குறள் தெளிவுரையையும் நூலையும் எழுதி இருக்கிறார். அவர் திராவிட இயக்க வரலாறு (முதல் பாகம்), நான் கண்டதும் கேட்டதும், பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு போன்ற நூல்களையும் எழுதி இருக்கிறார். நாவலர் பெரியாரின் பகுத்தறிவு கொள்கையில் ஊறித் திளைத்தவர். ஆனால், இவர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி அதன் மூலமாக கொள்கைகளை நிலைநாட்டிட விரும்பிய அறிஞர் அண்ணாவுக்கே உறுதுணையாக இருந்தார்.

ஆகவே. தி.மு.கழகத்தை உருவாக்கியபோது நாவலர் அறிஞர் அண்ணாவின் பக்கமே நின்றார். நின்றது மட்டுமின்றி, தி.மு.கழகத்தை உருவாக்கியதில் பெரும்பங்கு நாவலருக்கு இருக்கிறது. இது குறித்து நாவலர் குறிப்பிடும்போது,

1947 ஆகஸ்டு 15ஆம் நாள், துக்க நாள் ஆகாது; அது மகிழ்ச்சிக்குரிய நாளே ஆகும் என்பதை விளக்கும் நீண்டதொரு அறிக்கையை அந்த அறையில் அமர்ந்திருந்து எங்களையெல்லாம் கலந்து கொண்டுதான் எழுதினார்கள்.

1949ஆம் ஆண்டில், பெரியார் அவர்கள் திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாட்டினைச் செய்து முடித்தபோது கருத்து வேறுபாடு கொண்டு அவரை விட்டு பிரிந்து நின்ற நிலையில் ஒன்றரைத் திங்களுக்கு மேல் நான் அறிஞர் அண்ணா அவர்களோடு கூடவே இருந்து, ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ எனும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்க, அவருக்குப் பெருந்துணையாக இருந்து வந்தேன் என்று தாம் எழுதிய திராவிட இயக்க வரலாறு முதல் தொகுதியில் கூறுகிறார்.

நாம் பார்த்த – படித்த வகையில் தி.மு.கழகம் தோற்றம் குறித்ததில் அறிஞர் அண்ணாவோடு உடன் இருந்து பணியாற்றியவர்களில் இவரே முதல் தோழர் ஆவார். இதனை ‘புதுவாழ்வு’ வார ஏட்டில் (25.09.1949) பாவாணன் எழுதிய கட்டுரையின் மூலம் உறுதி செய்கிறார். தி.மு.கழகம் உருவான பிறகு 1949 செப்டம்பர் முதல் 1952 டிசம்பர் வரை நாவலர் பிரச்சாரக் குழுவின் செயலாளராக இருந்தார். 1952 டிசம்பர் முதல் 1955 ஏப்ரல் வரை அறிஞர் அண்ணா கழகத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார். அதுபோது கழகத்தின் துணைச்செயலாளர்களாக நாவலரும் கே.ஏ. மதியழகனும் செயலாற்றி வந்தனர்.

இக்கட்டத்தில்தான் மும்முனைப் போராட்டம் நடைபெற்றது. (1) டால்மியாபுரம் என்று இருப்பதைக் கல்லக்குடி என்று மாற்ற வேண்டும். (2) குலக் கல்வித் திட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும். (3) தமிழர்களின் போராட்டங்களை அப்போது பிரதமராக இருந்த நேரு, காட்டு மிராண்டிகளின் போராட்டம் என்றும், 'நான்சென்ஸ்' என்றும் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியதைக் கண்டனம் செய்தும் மூன்று முனைகளில் தி.மு.கழகம் நடத்தியப் போராட்டமே மும்முனைப் போராட்டமாகும்.

இப்போராட்டம் காரணமாக அறிஞர் அண்ணா, நாவலர், சம்பத், மதியழகன், என்.வி.நடராசன் ஆகியோரை போலீஸ் முன்கூட்டியே கைது செய்து சிறையில் அடைத்து வழக்குப் போட்டுத் தண்டித்தனர். இவர்கள் ஐந்து பேர் கைதானதை நாளேடுகள் ஐவர் கைது என்றும், ஐம்பெருந்தலைவர்கள் கைது என்றும் வெளியிட்டன. ஏன்? தி.மு.க.வின் அதிகாரப் பூர்வமான மாலை நாளேடாக வெளிவந்து கொண்டிருந்த நம் நாடு 'ஐம்பெருந்தலைவர்கள்' கைது என்றே செய்தியை வெளியிட்டது.

இப்போராட்டத்தை மய்யப்படுத்தி சிவகாசி அச்சகங்கள் 'தி.மு.க.வின் ஐம்பெருந்தலைவர்கள்' என்று அறிஞர் அண்ணா முதல் என்.வி.நடராசன் வரை உள்ள அவர்களின் உருவங்களை – படமாக்கி அச்சிட்டு விற்பனைக்கு வெளியிட்டன. இப்படங்கள் அந்நாள்களில் எல்லா ஊர் கழகக்கிளைகளிலும் அலுவலகங்களிலும் இடம் பெற்று இருந்தன. அது முதல் இன்று வரை மேற்சொன்ன கழகத் தலைவர்களை 'ஐம்பெருந்தலைவர்கள்' என்றே எழுதியும், பேசியும் வருகிறார்கள். ஆனால், உண்மையில் கழக நிருவாக அமைப்பில் 'ஐம்பெருந்தலைவர்கள்' என்று எந்த விதிமுறையும் இல்லை. அதாவது தி.மு.க.வின் சட்டத்திட்டப்படி அப்படி ஓர் ஏற்பாடு இல்லை என்பதே சரி என்று நாம் தொடர்ந்து பதிவு செய்து வருகின்றோம்.

1955 ஏப்ரல் முதல் 1960 செப்டம்பர் வரை தி.மு.கழகத்தின் பொதுச்செயலாளராக நாவலர் பணியாற்றினார். இக்கட்டத்தில் துணைச் செயலாளராக என்.வி.நடராசன் இருந்தார். திருச்சி மாநில மாநாட்டில் (1956) கழகம் தேர்தலுக்கு நிற்பது என்று முடிவு எடுத்தது. இதன்படி 1957ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் சேலத்தில் நாவலர் நின்றார். வெற்றி வாய்ப்பை இழந்தார். 'தோல்வி அடைந்தார்' என்பதை 'வெற்றி வாய்ப்பை இழந்தார்' என எழுதியும், பேசியும் அச்சொற்றொடரை அறிமுகப்படுத்திய பெருமையும் நாவலரையே சாரும். ஆய்வாளர்கள் அவர் நடத்திய மன்றம் இதழை ஆராய்ந்தால், அவரது கட்டுரைகளில் இருந்து இத்தகைய சொல்லாக்கங்களை நிரம்பக் கண்டு பிடிக்கலாம்.

நாவலரின் திருமணம் 26.03.1950 இல் சேலத்தில் மிக எளிமையாக நடைபெற்றது. திருமண நிகழ்வைப் பற்றி அவர் மனைவி டாக்டர் விசாலாட்சி அவர்கள் 08.07.1962 தேதியிட்ட ஆனந்த விகடன் வார ஏட்டில், 'என் கணவர்' எனும் தலைப்பின்கீழ் ஒரு பேட்டியை அளித்து இருந்தார். அதில் கூறியதை நாம் அப்படியே இங்கு தருகிறோம்:

நான் படித்துப் பட்டம் பெற்று பணியாற்றவும் முற்பட்டு விட்டேன். அப்போதுதான் எங்கள் தூரத்து உறவினர் திருநாவுக்கரசு அவர்கள் மூலம் எங்கள் வீட்டுக்குப் பெண் கேட்க வந்தார் திரு.நெடுஞ்செழியன் என் தந்தை முதலில் மறுத்துவிட்டார்.

இதற்குக் காரணம் அவர் ஒரு அரசியல்வாதி என்பதும், அதோடு அவர் நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் ஒரு பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றி வந்தார் என்பதும்தான். தன் மருமகப்பிள்ளைக்கு அந்த வருமானம் போதாது என்று எண்ணினார் என் தந்தை. இப்படி முதலில் தயங்கியவர் பின்னர் சம்மதம் தெரிவித்தார்.

திருமணப் பேச்சு தொடர்ந்தபோது 'தாலி கட்ட மாட்டேன். சடங்குகளில் எனக்கு நம்பிக்கை இல்லை' என்ற திரு. நெடுஞ்செழியனின் கருத்தை, நானும் ஆமோதித்தேன். எங்களுக்குப் பதிவுத் திருமணம் நடைபெற்றது.

ரிஜிஸ்ட்ரார் வீட்டுக்கு வந்தார். தி.மு.க. பிரமுகர்கள் பலர் வந்திருந்தார்கள். ஆனால், எந்தவிதமான சொற்பொழிவும் கிடையாது. திருமணத்துக்கு அடையாளமாக பொன் சங்கிலி ஒன்றை எனக்குப் போட்டார் அவர். அவ்வளவுதான்.

என் கணவருக்கு சொத்து எதுவும் கிடையாது. அவரது தூய உள்ளமும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவையும்தான் அவருடைய சொத்துக்கள்.

அரசியலை அவர் பொழுதுபோக்காக எடுத்துக் கொள்ளவில்லை. அதுதான் அவரது மூச்சு. 'சர்க்கார் ஊழியர் நீ. எக்காரணம் கொண்டும் சர்க்கார் உத்தரவுகளைப் புறக்கணிக்காதே! எந்தவித தப்பும் செய்துவிடக்கூடாது! ஒரு ஆபிஸர் கூப்பிட்டு ஒரு கேள்வி கேட்கும்படி வைத்துக் கொள்ளாதே!' என்பார் என்னிடம்.

அவருக்கு அரசியல்தான் வாழ்வு. இன்று தி.மு.க. இந்த அளவுக்கு வளர்ந்திருப்பதற்கு என் கணவரின் பணியும் ஒரு முக்கியக் காரணம் என்று நான் சொல்வேன். இது தற்பெருமையாகக் கூடத் தோன்றலாம். ஆனால் உண்மை. அதுதான் புறவாழ்வு எப்படி இருப்பினும், அகவாழ்வில் எங்கள் இருவர் நோக்கும் ஒன்றுதான்.''

இந்த இணையருக்கு ஓர் ஆண் மகன் பிறந்தார். அவர் பெயர் மதிவாணன் இன்றும் இருக்கிறார். குடும்பத்தோடு சிறப்பாக வாழ்ந்து வருகிறார். நாவலரின் இளவல் இரா. செழியன், நாவலரைப் போலவே நம்மோடு தொடர்பில் இருந்தவர். அவரைப்பற்றியும் நாம் முரசொலியில் இரண்டு நாள்கள் தொடர்ந்து கட்டுரையை எழுதி நினைவுகூர்ந்து இருக்கின்றோம்.

1957ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நாவலர் வெற்றி வாய்ப்பை இழந்த செய்தியை மேலே குறிப்பிட்டு இருக்கின்றோம். 1962ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நாவலர் வெற்றி பெற்றார். அப்போது கழகத்தின் சார்பாக 50 பேர் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தனர். 1957இல் தேர்ந்தெடுக்கப்பட்ட

15 பேரில், 1962 தேர்தலில் கலைஞர் மட்டுமே வெற்றி பெற்று இருந்தார். 1957–1962 தி.மு.க.வின் சட்டமன்றக் கட்சித் தலைவராக அறிஞர் அண்ணாவும், துணைத் தலைவராகப் பேராசிரியரும், கொறடாவாக கலைஞரும் பணியாற்றி வந்தனர்.

1962 தேர்தலில் அறிஞர் அண்ணா வெற்றி பெறவில்லை. பேராசிரியரும் தோல்வியைத் தழுவினார். கலைஞரோ 2ஆவது முறையாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தார். இங்கே நாம் இன்னொரு செய்தியையும் பதிவு செய்ய விரும்புகின்றோம்.

1962 நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 பேரில் இரா. செழியன் இருந்தார். அவர் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பொறுப்பை விரும்பினார். அறிஞர் அண்ணாவிடமும், அவரது கோரிக்கையை முன் வைத்தார். அப்போது, ‘சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பு நெடுஞ்செழியனுக்குத் தரப்படுவதாய் இருந்தால் உனக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்படமாட்டாது. உனக்குப் பொறுப்பு வழங்கப்படுவதாக இருந்தால் நெடுஞ்செழியனுக்குப் பொறுப்பு வழங்கப்பட மாட்டாது. எது வேண்டும் சொல்’ என்றார் அண்ணா. இரா.செழியன் தனக்கு பொறுப்பு வேண்டாம் என்று அண்ணாவிடம் சொன்னார். அறிஞர் அண்ணா நாவலரை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக்கினார். இந்த விவரத்தை எம்மிடம் தெரிவித்தவர் இரா. செழியன் அவர்களே ஆவார்.

1967ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. அண்ணாவின் அமைச்சரவையில் கல்வி அமைச்சராக – நாவலர் பொறுப்பேற்றார்.

அதைத் தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரின் அமைச்சரவைகளில் தொடர்ந்து நாவலர் 2ஆவது இடத்தில் அமைச்சராகப் பணியாற்றி வந்தார். தமிழகத்தில் கால் நூற்றாண்டு நிதியமைச்சராக இருந்தவர் நாவலர் ஒருவரே.

நாவலரின் 75ஆம் ஆண்டு பிறந்த நாளையொட்டி தினமணி கதிரில் நாம் ஒரு சிறப்புக் கட்டுரை வரைந்தோம். அதற்காக எம்மை வீட்டுக்கு அழைத்து காலை சிற்றுண்டியை எமக்கு அவரே பரிமாறினார். அவரோடு வீட்டில் அன்று இருந்த கல்வியாளர் சை.வே.சிட்டிபாபு அவர்களை எமக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர் எந்த நூல்களை எழுதினாலும் ‘அன்புக்கெழுமிய நண்பர் க.திருநாவுக்கரசுக்கு’ என்று எழுதி கையெழுத்திட்டுக் கொடுப்பார்.

நாவலரின் பங்களிப்பால் திராவிட இயக்கம் அறிவார்ந்த வகையில் வளர்ந்தது. அவர் பேச்சும், எழுத்தும் அத்தகையதாய் இருந்தது. பகுத்தறிவு பற்றிய நுகர்ச்சியை இயக்கத் தோழர்கள் அவரால் உள் வாங்கினர். அவர் பாணி மேடையில் அலாதியானது.

அரசியலால் அவருக்கு ஏற்பட்ட இழுக்கை இவையே துடைத்தெறிந்தன. அவரது கடைசிப் பேச்சையும் பெரியார் திடலில் நாம் கேட்டோம். (31.12.1999) பேச்சுக்குப் பிறகு நேரில் சென்று அளவளாவினோம். வீட்டிற்கு வரச் சொன்னார். போய் பார்க்க முடியவில்லை நாவலர் 12.01.2000இல் இயற்கை எய்தினார்.

நாவலர் பகுத்தறிவையும், நாத்திகத்தையும் இரு கண்களாகப் போற்றியவர். தமது திருமணத்தையும் எளிமையாக நடத்திக் கொண்டவர். இறுதிப் பயணத்தையும் எந்தவித சடங்குகள் இன்றி நடந்தேறக் காரணமாக இருந்தவர். ஆகவேதான், தினமலர் ஏடு (15.01.2000) 'எந்தவித இறுதிச் சடங்குமின்றி நெடுஞ்செழியனின் உடல் தகனம்' என்று எழுதியது.

"வைதீக சம்பிரதாய சடங்குகள் எதுவுமின்றி நெடுஞ்செழியன் பின்பற்றிய பகுத்தறிவுக் கொள்கைக்கு எவ்வித ஊறும் நேராத வகையில், அவரது இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. தகனம் நடைபெற்ற இடத்தில் வாய்க்கரிசி போடுவதைக் கூட அவரது உறவினர்கள் தவிர்த்தனர்" என்று தினமணி (15.01.2000) நாளேடு செய்தி வெளியிட்டிருந்தது. அதோடு, 'அபூர்வ அரசியல்வாதி' எனும் தலைப்பிட்டு 14.01.2000 தினமணி தலையங்கமும் தீட்டி இருந்தது.

நாவலர் அடிக்கடி மேடைகளில் பேசுகிற போது, 'கழகத்திற்கென்று, இயக்கத்திற்கென்று அவரவர் செய்த உழைப்பை – நல்கிய பாட்டை திரும்பவும் செய்தவரே கூட எடுத்துக் கொண்டு செல்ல முடியாது' என்பார். தி.மு.கழக வளர்ச்சிக்கென்று அவர் உழைத்த உழைப்பு நம்மோடு கடலில் உப்பு இருப்பது போல் இருக்கிறது. திராவிட இயக்கத்தின் இரண்டாம் தலைமுறை தலைவர்களுள் ஒருவரான நாவலர் 'இன்றில்லை எனும் பெருமை'யைப் பெற்றவராகத் திகழுகிறார்.

வாழ்க நாவலரின் புகழ்!

நன்றி : 'முரசொலி' நாளேடு
11.07.2020

❖ ❖ ❖

காற்றுள்ள வரை உன்றன் புகழ்வாழும்

- கவிச்சுடர் **கவிதைப்பித்தன்** அவர்கள்



நாடெங்கும் வலம்வந்து கூர்செய்தே இளைஞர்தம்
ஞானத்தைத் தீட்டி வைத்தாய்!
நான்கைந்து மணிநேரம் நகைச்சுவை குறையாமல்
நாவன்மை காட்டி வைத்தாய்!
ஏடுயர் ‘மன்றத்தின்’ எழுத்தெலாம் தமிழ்க்கனல்
எழத் தழல் மூட்டி வைத்தாய்!
எங்கேநீ சென்றாலும் “சங்கே முழங்கென்றே”
எழுச்சியைக் கூட்டி வைத்தாய்!
பாடங்கள் நடத்தியே பொதுக்கூட்ட மேடையில்
பகுத்தறி வூட்டி வைத்தாய்!

பாவேந்தன் எரிமலை வரிகளில் பூபாளப்
பண்ணிசை மீட்டி வைத்தாய்!
காடு கமழ் முல்லைபோல் நீடுபுகழ் மணக்கின்ற
கருணையின் நிதியம்! எங்கள்
கலைஞரின் நண்பரே! புலமைசேர் இலக்கியக்
கடலே! நின் பெருமை வாழ்க !

போராடும் களத்துக்கு வீரர்கள் பொங்கிவரப்
புறப்பாடல் ஆர்த்த வன்நீ!
'பொதுச்செய லாளராய்' மாபெரும் இயக்கத்தின்
பொறுப்பினை ஏற்ற வன்நீ!
ஏராளம் பேர்இந்த இயக்கத்தில் இருந்தாலும்
ஏறுபோல் வீறு கண்டும்

இளந்தாடிப் பொலிவோடு வளர்ந்தோங்கி நடைபோட்ட
எழில்கண்டுன் பீடு கண்டும்
தாராள மனம்கொண்டு "தம்பி! வா! மாநாட்டுத்
தலைமையை ஏற்க !" என்று
தங்கமகன் அண்ணாவும் வழங்கினார் வாய்ப்பை! உன்
தகுதியைப் போற்றி அன்று!
சீராண்ட செந்தமிழ்ப் பேராண்ட நின்வயது
நூறாண்டைக் கடந்த(து) இன்று!
திண்டோள்கள் பூரிக்கக் கொண்டாடும் கழகம் ! இது
'திராவிடர் கடமை' என்று!

கொஞ்சிடும் தளிர்ப்பிஞ்சு வயதிலே, இருவண்ணக்
கொடியேந்திக் குதித்து வந்தான்!
கோபால புரத்திலே 'அண்ணாவின் பிறந்தநாள்'
கொண்டாடிக் களித்து நின்றான்!
அஞ்சுகப் போர் ! நம் 'தளபதி' நடத்திய
அண்ணா விழாவும், அந்நாள்

அகம்நெகிழ்ந் துரையாற்றி மகிழ்ந்த பெயர் சொல்லவா ?
அடடா! "நா வலர்" அல்லவா!
நஞ்சுநிகர் வடசொல் 'நா ராயண சாமி' போய்
நாவலர் நெடுஞ் செழியனாய்'
நலம்பாடி நம்சங்க நூல்களின் வளம்பாடி
நயம்சொன்ன தமிழ் தந்தலே!
விஞ்சும்நின் 'நூற்றாண்டு விழாவினைக்' கழகமே
விழைந்து நிகழ்த்தும் அழகு!
வியத்தகு தளபதியின் நயத்தகு பண்பாட்டை
விரும்பிப்பா ராட்டும் உலகு!

ஊற்றெடுக் கின்றநீன் சொற்களின் வீச்சிலே
உயிர்க்குமே திருவள்ளுவம்!
ஒன்றே குலம்! நமக்(கு) ஒருவனே தலைவன்! என்(று)
ஓதுவாய் தமிழ் மந்திரம்!
ஏற்றுள்ள நிலைகளில் மாற்றமே வரினும், உன்
இலட்சியம் அதுதிராவிடம்!
'இரா. நெடுஞ் செழியனா ?' இல்லை! நீ இதயத்தில்
இருக்கின்றாய் ! இது நிச்சயம்!
ஆற்றலின் வடிவமே! ஈரோட்டுக் கொள்கையின்
அடர்த்தியே! அறிவின் விரிவே!
'அண்ணா மலை' தந்த பல்கலைக் கழகமே!
அண்ணாவைக் கவர்ந்த திருவே!
காற்றுள்ள வரைஉன்றன் புகழ்வாழ்க! நூற்றாண்டைக்
கடந்தும்நின் சரிதம் வாழ்க!
கழகம்தான் வரலாற்றுக் கருவூலம்! ஆம்! இது
காலத்தின் தீர்ப்பு ! வாழ்க!

நன்றி : 'முரசொலி' நாளேடு
11.07.2020

❖ ❖ ❖

நினைவில் நாவலர்

இளந்தாடி நரைக்கவில்லை

- திரு. **ப.திருமாவேலன்** அவர்கள்

“இரா.நெடுஞ்செழியனுக்கு பாராட்டு விழா” – என்று ஒட்டப்பட்டு இருந்த சுவரொட்டியைப் பார்த்தபடி பேரறிஞர் அண்ணாவும், பெருமைமிகு கலைஞரும் கடற்கரை மேடைக்கு வந்து கொண்டு இருக்கிறார்கள். “யாருக்கு பாராட்டு விழான்னு கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு சின்னதாய் இருக்கிறதே!” என்று கலைஞரிடம் சொல்கிறார் அண்ணா!

இரா. நெடுஞ்செழியனைப் பாராட்டுவதற்காக இறுதியாக ஒலிபெருக்கி முன் வந்த அண்ணா சொல்கிறார்: “நானும் தம்பி கருணாநிதியும் இங்கே வரும்போது இந்த நிகழ்ச்சிக்கான சுவரொட்டியைப் பார்த்தோம். யாருக்கு பாராட்டுவிழா என்று தெரியாத அளவுக்கு தம்பி நெடுஞ்செழியன் பெயர் இருந்தது. பேர் பெரிதாக இருப்பதால் அதை அச்சடிக்கும் போது எழுத்து சிறிதாக ஆகிவிடுகிறது. அண்ணா, கருணாநிதி என்று போடும் போது எழுத்து பெரிதாக தெரிகிறது. எனவே, நெடுஞ்செழியன், இன்று முதல் ‘நாவலர்’ என்று அழைக்கப்படுகிறார். இனி அவர் பெயரும் பெரிதாகத் தெரியும்” என்று

அந்த மேடையில் அறிவித்தார் அண்ணா. இந்தத் தாய் நாட்டுக்கே பெயர் சூட்டியவர், தம்பிமார்களுக்கு பெயர் வைக்கமாட்டாரா ?

வீட்டில் வைத்த பெயர்: நாராயணசாமி !

நாராயணசாமியே மாற்றி வைத்துக் கொண்ட பெயர் : நெடுஞ்செழியன் !

அண்ணா வைத்த பெயர்: நாவலர் !

நூறு ஆண்டுகள் கழித்தும் நினைவில் இருப்பது 'நாவலர்' தான் !

பேரறிஞர் அண்ணா தனது தம்பிமார்களை பேச, எழுத வைத்தவர் மட்டுமல்ல, நடிக்கவும் வைத்தார். மாநாட்டு மேடைகளில் ஆவேச பேச்சுக்கள் முடிந்ததும், அரிதாரம் பூசி அடையாளமே தெரியாமல் இவர்கள் அடுத்து நடக்கும் நாடகங்களில் நடித்துக் கொண்டு இருப்பார்கள். அப்படித்தான், 'கல்சுமந்த கசடர்' என்ற நாடகத்தில் நாவலரையும் நடிக்க வைத்தார் அண்ணா. சேரன் செங்குட்டுவனாக நடித்தார் நாவலர்.

அண்ணாவும், கலைஞரும் ஒரு ஊரில் 'சந்திரோதயம்' என்ற நாடகத்தில் நடித்தார்கள். நாடகத்தின் இடையில், வானொலியில் ஒருவர் பேசுவது போன்ற காட்சி இடம்பெற்றிருக்கும். அதில் யாருடைய பேச்சை வைப்பது என்று யோசித்தபோது அண்ணாவும் கலைஞரும் சேர்ந்து நாவலரை பேச வைக்கலாம் என்று முடிவெடுக்கிறார்கள். மேடையில் அண்ணாவும் கலைஞரும் நிற்க, வானொலியில் நாவலர் பேசுவது போல திரைக்கு பின்னால் இருந்து நாவலர் பேசுவார். கூட்டமே, ஏதோ வானொலியில் 'நம்ம நாவலர் பேசுறாருப்பா' என்றபடி பார்க்கும்.

பேச்சு முடிகிறது. கூட்டம் கைதட்டுகிறது.

அண்ணா: இது யாருடைய பேச்சு ? தமிழ் தவழ்ந்து விளையாடுகிறதே ?

கலைஞர்: நாவலர் பேச்சு இது ! திராவிட முன்னேற்றக் கழகத்தின் காவலர்களில் ஒருவர் !

அண்ணா: அது தானே பார்த்தேன். பேச்சில் நல்ல தமிழ் விளையாடுகிறது.... ஆமாம் ! இது எந்த ஊரிலிருந்து ஒலிபரப்பாகிறது ?

கலைஞர்: இது இலங்கை வானொலியில் இருந்து ஒலிபரப்பாகிறது !

அண்ணா: அதுதான் பார்த்தேன், நல்ல தமிழ் விளையாடுகிறது, தமிழ்நாட்டு வானொலியாக இருக்காது !

– மாநாடே அதிர்கிறது. தமிழ்நாட்டு வானொலியில் நல்ல தமிழ் வருவதில்லை என்பதை அண்ணா, எவ்வளவு நாசுக்காக நாவலர் பேச்சை வைத்துச் சொல்கிறார் !

நாவலர் நூற்றாண்டு விழாவை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எதற்காக முன்னெடுக்கிறார் என்றால், கலைஞர் சொன்ன தன் அடிப்படையில்தான் !

‘நாவலர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் காவலர்களில் ஒருவர்’!

‘நாவலர்’ என்று அழைக்கப்படுவதற்கு முன்னால் ‘இளந்தாடி’ நெடுஞ்செழியன் என்பதுதான் அவர் பெயர்!

கருகருவென கட்டைத்தாடி வைத்திருப்பார். பாதிரியார்கள் போடுவது போல, அங்கியை கருப்பு நிறத்தில் அணிந்துவருவார். அன்றைய தலைவர்களில் அதிக உயரம். அவருக்காகவே மேடையை உயரமாக போட்டார்கள். ‘நான் நின்று, என் கையை மேலே தூக்கினால் இடிக்காத அளவுக்கு பந்தல் இருக்கனும்’ என்று சொல்வார். ஒரு ஊருக்கு அல்ல, சுற்றிலும் ஐந்து ஊருக்கும் சேர்த்தும் தேதியை முடிவு செய்து விட்டு அவரை அழைக்க வேண்டும். இரண்டு மணி நேரம் பேசுவார். ஊர் ஊராகச் சென்று கூட்டம் பேசுவதன் தொடக்க காலம் என்பது நாவலர் காலம். அப்படித்தான் 1943இல் நாவலரையும் பேராசிரியரையும் கலைஞர் அழைத்தார் திருவாரூக்கு!

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டே பெரியாருடனும் அண்ணாவுடனும் பயணப்பட்டார்கள். தமிழ்நாட்டில் எங்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி நடந்தாலும் இவர் முன்னே நின்று முதல்பரிசைப் பெறுவார். சிதம்பரத்துக்கு பேச வந்த பெரியாரிடம், தான் வாங்கிய கேடயங்கள், வெள்ளிக் கோப்பைகள், தங்கப்பதக்கம், பரிசுகளை நாவலர் காட்டுகிறார். ‘படிப்பு முடிந்ததும் என்னோடு வந்து விடு’ என்று சொல்கிறார் பெரியார். அவரோடு நான்கைந்து ஆண்டுகள் பயணப்பட்டார் தமிழகம் முழுவதும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கிய மன்றச் செயலாளராக இவர் இருந்தபோதுதான் அண்ணா அடிக்கடி சென்று அங்கு பேசியது.

பெரியாருடன் செயலாளரைப் போல உடன் சென்றாலும் தனக்கென வேலை ஒன்று இருக்க வேண்டும் என நினைத்து கோவையில் சில காலம் தமிழக அறிவியல் மேதை ஜி.டி.நாயுடுவின் தனிச் செயலாளராகப் பணியாற்றினார் நாவலர். அது, கோவையில் கலைஞர் குடியிருந்த காலம். இருவரும் நெருக்கமானது அங்குதான்.

அங்கிருந்து சென்னைக்கு வந்த நாவலரும் அவர் தம்பி இரா.செழியனும் (இவரது பழைய பெயர் சீனிவாசன்) இராயபுரம், செம்புதாசுதெரு, கார்னர் எஸ்டேட் மாளிகை, அறை எண் 30 இல் தங்கி இருந்தார்கள். சென்னைக்கு வந்தால் இவர்களது அறையில்தான் அண்ணா தங்குவார்.

1947ஆம் ஆண்டு, சுதந்திரத் தினத்தை துக்க தினம் என்று பெரியார் அறிவித்தபோது, அதனை மறுத்து அண்ணா எழுதிய அறிக்கை இவரது அறையில் இருந்து எழுதப்பட்டதுதான். நாவலரின் அரசியல் பேச்சை விட, இலக்கியப் பேச்சில் சொக்கியவர் அண்ணா.

‘நாவலர் பேசும் போதுதான், தமிழ் எவ்வளவு இனிமையானது என்பதை மேலும் அதிகமாக உணர்கிறேன்’ என்றார் அண்ணா. மூன்று மாதங்கள் நாவலரும்

அண்ணாவும் ஒரே சிறையில் இருந்தார்கள். நாவலரைப் பேசவிட்டுக் கேட்டுக் கொண்டே இருப்பார் அண்ணா!

தமிழகம் அண்ணாவுக்கு மயங்கியிருந்தது. அண்ணா, நாவலரின் இலக்கியப் பேச்சுக்கு மயங்கி இருந்தார்! நடமாடும் பல்கலைக் கழகம் என்றார்!

அதற்குத் தரப்பட்ட பரிசுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர்! அந்தக் காலத்தில் அண்ணாவின் தம்பிமார்களில் அவர்தான் மூத்தவர். அவரை விட இரண்டு வயது இளையவர் பேராசிரியர். அவரை விட இரண்டு வயது இளையவர் கலைஞர். அவரை விட இரண்டு வயது இளையவர் ஈ.வெ.கி. சம்பத்!

நாவலர் சீரியசான ஆள் மட்டுமல்ல, அவரது நகைச்சுவை உணர்வு அலாதியானது.

நாவலர் பேசிக்கொண்டு இருக்கிறார். மேடைக்கு அருகில் இருந்த புரோட்டா கடையில் அப்போதுதான் ஒருவர் கொத்துபுரோட்டாவுக்கு ஆர்டர் கொடுக்கிறார். முட்டையை உடைத்து ஊற்றி கொத்த ஆரம்பிக்கிறார் மாஸ்டர். பேச ஆரம்பிக்கிறார் நாவலர். மேடையில் இருந்து மாஸ்டரை பார்க்கிறார் நாவலர். 'என் பேச்சுக்கு நீ தாளம் போடலாம்... ஆனால் பாட்டுக்கு இடைஞ்சல் இல்லாமல் தாளம் போடு' என்கிறார். கொத்துக்காரர் மெதுவாக அடிக்கிறார். கூட்டம் முடிந்ததும் மாஸ்டருக்கு நன்றி சொல்லிவிட்டுப் போனார் நாவலர்.

திருக்கழுகுன்றத்தில் ஒரு கூட்டம். அதை முடித்துவிட்டு செங்கல்பட்டில் அடுத்த கூட்டம். 'அய்யா, நேத்து திருக்கழுகுன்றத்துல உங்க கூட்டத்துக்கு வந்தேன்.. அங்க பேசுனதைத்தான் செங்கல்பட்டுலயும் பேசுனீங்க' என்றார் ஒருவர். 'ஏன்... திருக்கழுகுன்றத்துக்காரனுக்கு தெரிஞ்சது செங்கல்பட்டுக்காரனுக்கு தெரிய வேண்டாமா?' என்று சொல்லிவிட்டுப் போனார் நாவலர்.

ஐம்பது பேரை வைத்து சுருக்கமானதாக தனது திருமணத்தை நடத்திக் கொண்டார். தனக்கு ஏன் சொல்லவில்லை என்று ஒருவர் கேட்டாராம். 'கல்யாணம் எனக்குத்தான்யா... உங்களை எதுக்கு கூப்பிடனும்' என்றாராம் நாவலர்.

அவர் பகுத்தறிவுவாதி. ஒரு ஆன்மிக மேடையில் பங்கெடுத்தார். அவர்களின் சமூகப் பணிகளை பாராட்டிவிட்டு இறங்கினார். கீழே வந்தவரிடம், 'நம்மை மீறிய சக்தி இருப்பதை இப்போதாவது நம்புகிறீர்களா?' என்று கேட்டார் ஒருவர். 'ஆமாம்! அந்த சக்தி எனக்கு என் வீட்டில் இருக்கிறது. அவர்கள் போகச் சொல்லி இயக்கினார்கள்' என்று போட்டார். மேடையில் துள்ளல் தமிழ் இருந்தால், மேடைக்கு கீழே எள்ளல் தமிழ் இருக்கும் அவருக்கு!

நாவலர் உயரமானவர் மட்டுமல்ல, அவர் அடைந்த உயரங்களும் அதிகம்!

1949 முதல் 1955 வரை தி.மு.க. துணைப்பொதுச் செயலாளர்.

1955 முதல் 1961 வரை தி.மு.க. பொதுச் செயலாளர்.

1961 முதல் 1969 வரை தி.மு.க. அவைத் தலைவர்.

1969 முதல் 1977 வரை தி.மு.க. பொதுச் செயலாளர்.

ஒன்றல்ல நான்கு முதலமைச்சர்களின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர் அவர் மட்டும் தான் இருக்கும். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என அவர் தொடர்ச்சியாக அமைச்சர் பொறுப்பில் இருந்தார். ஏறத்தாழ பதினேழு ஆண்டு காலம் அமைச்சர். அவர் போட்டியிட்ட தொகுதிகளின் பட்டியலைப் பார்த்தால் ஒரு முடிவுக்கு வரமுடியாது. தி.மு.க. முதன்முதலாக போட்டியிட்ட தேர்தலில் சேலம் தொகுதியில் போட்டியிட்டார். 207 வாக்குகள் வேறுபாட்டில் தோல்வி அடைந்தார். அடுத்து திருவல்லிக்கேணியில் தொடர்ந்து மூன்று தேர்தல்களில் (1962, 1967, 1971) வென்றார். அ.தி.மு.க. சார்பில் 1980 தேர்தலில் திருநெல்வேலியில் போய் போட்டியிட்டு வென்றார். அடுத்த தேர்தலில் மதுரை ஆத்தூரில் நின்று வென்றார். அடுத்த தேர்தலில் மயிலாப்பூரில் நின்று தோல்வியைத் தழுவினார். 1991 தேர்தலில் தேனியில் நின்று வென்றார். இதில் எதுவுமே அவரது சொந்த ஊர் அல்ல. அவர் பட்டுக்கோட்டைக்காரர். பூர்வீகம் என்று பார்த்தாலும் நன்னிலம் அருகே திருக்கண்ணபுரம். ஆனால் தமிழ்நாடு முழுவதும் ‘கிடைத்த’ தொகுதியில் எல்லாம் நின்றுள்ளார். அவரைப் பொறுத்தவரை கூட்டத்துக்கு தேதி கொடுப்பதைப் போல தொகுதியைத் தேர்ந்தெடுத்துள்ளார். வெற்றியும் பெற்றுள்ளார். நாடே அறிந்த ‘நாவலராக’ இருந்ததால் எந்தத் தொகுதிக்கும் அவரது அறிமுகம் தேவைப்படவில்லை.

முப்பது ஆண்டு காலமாக (1940–1970) தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை விதைத்தவர் அவர். பாரதி பாடல்களை தமிழ் நாட்டு மேடைகளில் அதிகம் ஒலித்தது தோழர் ஜீவா என்றால் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடல்களை ஒலித்தவர் நாவலர். பேச்சாளர்கள், பாடல்களை மனப்பாடமாக ஒப்பித்து மேடைகளில் கைதட்டல்களை அள்ளும் பாணியை அறிமுகம் செய்தவர் நாவலர்.

‘வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்’—என்று அவர் சொல்லும் போது எழுச்சி பிறக்கும். ‘விசையொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்’ — என்று அவர் சொல்லும் போது வன்மை பிறக்கும். அந்த உயரம், அந்தக் குரல், அந்த உச்சரிப்பு, அந்த ஆளுமைத் திறன், அந்தத் தமிழ் அரைநூற்றாண்டுத் தமிழக மேடைகளை ஆட்சி செய்தது.

சமயத்தில் நாவலர் என்றால் சபாபதி நாவலர்.

தமிழ் இலக்கிய மேடைகளில் நாவலர் என்றால் சோமசுந்தர பாரதியார். அரசியலில் நாவலர் என்றால் நெடுஞ்செழியன்.

நாவலருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் அமைப்பு ரீதியாக தொடர்பு அறுந்தது 1977ஆம் ஆண்டு. ஆனாலும் கொள்கை ரீதியான தொடர்பு அற்றுப் போகாது

என்பதன் அடையாளம்தான் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவரை நினைவு கூர்வது. தலைவர் மு.க.ஸ்டாலின் – துர்க்கா அம்மையார் திருமணத்துக்கு தலைமை தாங்கியவர் நாவலர்.

நாவலர் – விசாலாட்சி திருமணத்தில் 1950இல் அண்ணாவுடன் சென்று அதில் பங்கெடுத்தவர் கலைஞர். மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு 1998ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணனை வரவேற்க விமானநிலையம் சென்ற நேரத்தில் முதல்வர் கலைஞரும் – நாவலரும் சந்தித்தார்கள். பதினைந்து ஆண்டுகள் கழித்து சந்திக்கிறார்கள். 'என்ன நாவலரே டல்லா இருக்கீங்க ?' என்றார் முதல்வர் கலைஞர். 'பத்துநாளா வெளியூர் கூட்டங்கள், அலைச்சல்..' என்றார் நாவலர். 'உடம்பை பார்த்துக்கோங்க' என்றார் முதல்வர் கலைஞர். குடியரசுத்தலைவருக்கு நாவலரை முதல்வர் கலைஞர் அறிமுகம் செய்து வைத்தார். இரண்டு ஆண்டுகளில் நாவலர் பிரிந்தார். அவரது இறுதி முகத்தையும் கண்டு கலங்கினார் கலைஞர். திராவிட இயக்க வரலாறு, திருக்குறள் உரை. பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு ஆகிய மூன்றும் அவர் இறுதிக் காலத்தில் எழுதியவை. இளந்தாடி நரைக்கவில்லை என்பதை உணர்த்துபவை.

நன்றி : 'முரசொலி' நாளேடு
11.07.2020

❖ ❖ ❖

நூறாண்டு நாவலரே நுமையென்றும் போற்றுதுமே

- பேராசிரியர் **மா.செல்வராசன்** அவர்கள்

நாவலரே! அண்ணாவின்
நம்பிக்கை நாயகரே!
காவலராய்க் கழகத்தைக்
காக்க வா தலைமையேற்று!
ஆவலாய்த் தம்பி உம்
ஆணையை ஏற்று நாங்கள்
மேவுவோம் என்றறைந்தார்
மேதையாம் அறிஞர் அண்ணா!
யாவர்க்குக் கிடைக்குமிந்த
யாவுமான பெரும்பேறு?

பாவலராய்ப் பொழிஞராய்ப்
பைந்தமிழைக் கற்பதற்கு
ஆவலுடன் மாணவராய்
அண்ணாமலைக்கழகம்
மேவிய பேராசிரியர்
மேன்மைமிகு தோழமையில்

மாவலம் வந்தவரே!
மடங்காத அரிமாவே!
ஏவலராய் ஒருவரிடம்
ஏகாத ஏந்தலே!

தீ வல்ல பெரியாரின்
திராவிட இயக்கம் ஓர்
பூவல்ல புயலென்று
புரட்சியாய்ப் பேசிய
நா வல்ல திறங்கண்டு
நாடன்று மயங்கிற்று!

சேவலாய் எழுந்துநீர்
செஞ்சூர்யன் வருகையைக்
கூவலாய்க் கூவியே
குலத்தமிழர் எழுப்பினீர்
கோவிலும் மடங்களும்

குணங்கெடுக்கும் மதங்களும்
காவியும் கமண்டலமும்
கடவுளரும் கதைகளும்
சாவிதந்தால் உயிர்க்கின்ற
சகதியின் பொம்மையாம்
பாவியர் அல்லரோ
பாதுகாப்போர் தீதுசெய்வோர்
கேவலத்தை எடுத்துரைத்துக்
கினர்ச்சியினை வளர்த்தவரே!
நாவலரே உம்பேச்சு
நறுக்கிடும் நயவீச்சு!

வளர்தாடிப் பெரியாரின்
வாளேந்தும் மறவருள்
இளந்தாடி இளைஞராய்
எழுச்சியுற்ற நெடுஞ்செழியன்
வளந்தேடிச் செல்லாமல்
வண்டமிழர் காக்கின்ற
களந்தேடி அண்ணா பின்
காளையாய் நடந்தவரே!

அளந்தறியாத் தொன்மையுடன்
அறிவுமிக்க தமிழ்நாடு
தளர்ந்துமிகத் தாழ்வதனைத்
தாங்காமல் தடுத்து மேல்
வளர்வதற்குத் தி.மு.க.
வடிவமைத்த அண்ணாவின்
இளபதியாய் எழுந்தவரே!
எழுச்சியூட்டும் சொற்கனலால்
களபதியாய்ப் பலர்தோன்றக்
காரணமாய் ஆனவரே!

நெடுஞ்செழியர் மட்டுமா
நேர்மையாய்க் கருத்துமழை
நெடும்பொழிஞர் அல்லவோ?
நெஞ்சுயர்த்திப் பேசுகையில்
கடுங்காற்றுச் சிலநேரம்
கமழ்தென்றல் சிலநேரம்
எடும்பாட்டுச் சிலநேரம்
எள்ளலும் சிலநேரம்
படும்பாடு மடமையின்
பட்டைதான் உரிந்திடும்!
நடுங்கிடும் நைந்திடும்
நகர்ந்தோடும் அறியாமை!
விடுதலையா உம்முடைய
விழிவீச்சில் காணலாம்
முடங்கிடும் பகை உமது
முரசொலிக்கும் முழக்கத்தில்!
அடங்கிடும் எதிர்க்கூட்டம்
ஆணிவேர்ப் பறிப்பினில்!

மன்றாடும் மக்களின்
மன்றந்தான் செலகவென
அன்றாடம் பேரறிஞர்
அண்ணாதான் உரைத்தசொல்
நன்றாக ஏற்றுநீர்
நல்லிதழ் மன்றம் என
வென்றாள அரசியலும்
இலக்கியமும் விளக்கினீர்!

நண்பரெனக் கலைஞரும்
நாடெல்லாம் நவின்றாரே
பண்பாக உமையென்றும்
பாராட்டி மகிழ்ந்தாரே
அண்ணாவிற்கு அடுத்தபடி
ஆன்றோராய் மதித்தாரே
துண்டல்ல நாவலர்
தூக்கித்தான் எறிவதற்கு!
செண்டல்ல நுகர்ந்தபின்
சேற்றிலே வீசுதற்கு!
தொண்டுக்கு நிகருண்டா
தூய்மைக்கு நேருண்டா
பண்டெழுந்த நெடுஞ்செழியப்
பாண்டியன் இவரென்றே
விண்டுரைக்க உயர்ந்தபெரும்
வெற்பாக நின்றவரே!

நொண்டியர் சதியாலே
நோற்றுயர்ந்த நிலைமறந்து
சுண்டுவிரல் ஆகலா மோ
சுட்டுவிரல் ஆனநீர்?
குண்டர்பின் சென்ற ஒரு
குழகளிறே! ஏறாத
நண்டுகள் உமையிழுக்க
நட்பினை உதறிவிட்டீர்
குண்டுக்கல் பின்னாலே

குன்றுதான் நிற்பதுண்டோ
வெண்பட்டு,சேற்றிலே
விழுந்தகதை ஆயிற்று!

வண்டாகத் தமிழ்நாட்டை
வட்டமிட்டுத் தேன்குடிக்க
உண்டவீட்டிற்கு இரண்டகம்
உண்டாக்கி விட்டவர்கள்
கண்டும்நீர் அவர்பின்னே
கருத்தின்றிச் செல்லலாமோ?
கண்டெங்கள் நெஞ்சங்கள்
கதறிய கண்ணீருக்கு
உண்டிங்கோ ஒருகடல்!
உள்ளலைகள் ஓய்ந்திடுமா ?

பாண்டியன் நெடுஞ்செழியன்
பான்மையில் நீருந்தான்
தூண்டிய வஞ்சகர்
தூண்டிலில் விழுந்ததனால்
ஆண்டபெரும் நிலையெல்லாம்
அடியோடு தகர்ந்ததே!
நீண்டபேர் இயக்கத்தை
நீரூற்றி வளர்த்தவரே
ஈண்டுநீர் செய்தபணிக்கு
ஈடில்லை என்பதுண்மை
வேண்டாமென விட்டுவிட்டு
வெளியேறிப் போனதனால்
தாண்டியே சென்றதனால்
தன்மானம் தவிக்கிறது
கூண்டிலே வேங்கைதான்
குடியிருந்த தாயிற்று!
மூண்டபெருந் தீயாக
முழங்கிய பகுத்தறிவு

தீண்டத்தான் ஆளின்றித்
தேம்பித்தான் நிற்கிறது !
சீண்டினால் உமையாரும்
சிங்கமாய் நோக்குவிரே!
பாண்டியன் தலையாலம்
பகைவென்ற நெடுஞ்செழியன்
மீண்டுவர வேண்டுமே
மானம்மீட்டு வரவேண்டுமே!

நூறாண்டு நிறைபவரே
நும் அருமை எம் பெருமை
ஏறாத மேடையுண்டா
இயம்பாத நேரமுண்டா
கூறாத கருத்துண்டா
குலைக்காத பகையுண்டா
நீறாகாப் பழமையுண்டா
நெருப்பாகாப் புதுமையுண்டா
ஆறாகப் பெருகியே
அறிவுலகம் அழைத்தவரே
வீறுயர்நும் பிறந்தநாள்
விழாக்காணும் சிறந்தநாள்
நூறுயர நிறைந்தநாள்
நூறாயிரம் பாடுவோம்!

ஏறுயர நடப்பதுபோல்
எழும் உமது பகுத்தறிவைச்
சாறாக மாந்திய
தளபதியார் திமுக
நூறாண்டு விழாவெடுத்து
நுவலும் உம் பெருமையென்றார்!

உறைவாளாய் இருந்தவரின்
ஒருகால வீச்சினை
மறைக்கத்தான் முடியுமா
மறுக்கத்தான் இயலுமா?
நிறைமனத்துச் சான்றோனாய்
நிலவுகின்ற தளபதிதான்
சிறைப்பட்ட உம்புகழைத்
திக்கெட்டும் தெரிவிக்கப்
பறைகொட்டி முரசொலியில்
பாராட்டி மகிழ்கின்றார்!
திறைபெற்ற பாண்டியன்பேர்
திகழ்கின்ற நாவலரே!
முறையாக அரசேற்று
முடிசூடும் வேளையிலே
நிறைவான உமதுபுகழ்
நிலைத்திட மன்றமொன்று
நிறுவுவார் தளபதி!
நிலவுவீர் பலபதி!

நன்றி : 'முரசொலி' நாளேடு
11.07.2020

❖ ❖ ❖

இளம் பெரியாராக வேண்டும்

- திரு. **பொன்னடியான்** அவர்கள்



நல்லவர்க்கே இலக்கணமாய் வாழ்ந்தி ருக்கும்
நாவன்மை நாவலரோ ; அன்றும் இன்றும்
வல்லவராய்த் திகழ்கின்ற உயர்பண் பாளர்!
வாழ்வளிக்கும் செழுந்தமிழின் வாழ்வை எண்ணி
அல்லல்களைத் தழும்புகளாய் ஏற்ற வீரர் ;
அரியணையில் அரிமாவாய்க் காட்சி தந்து
வெல்லரிய அந்நாளின் பாண்டி யன்போல்
வினைமுடிக்கும் இவர்தமிழின் உயர்வுச் செம்மல்!

பாவேந்தன் பாக்களெலாம் வடிவம் பெற்றால்
பண்பாளர் இவர்வடிவே பெற்றி ருக்கும்!
சாவேந்தா பைந்தமிழ் ஓர் குரலைப் பெற்றால்
சரியான இவர்குரலே பெற்றி ருக்கும்!

மூவேந்தர் பண்பாடும் உருவம் பெற்றால்
முந்திக்கொண் டிவர் உருவே பெறத்து டிக்கும்!
பூவேந்தும் பூச்செடியால் இலங்கும் இந்தப்
புரட்சிமகன் கல்விக்கோர் காவல் தெய்வம்!

தோற்றத்தில் பேரழகன் ! மக்கள் தொண்டில்
தூய்மைக்கும் பெயர்பெற்ற ஆண்மைச் சிங்கம்!
ஆற்றல்களின் முழுவடிவம் ; பெரியார் பாதை
அணுவளமும் பிசகாத அறிவின் மேலோன் !
மாற்றங்கள் நிதம்விரும்பி மூடப் போக்கின்
மண்டையிலே அடிகொடுக்க மறக்காச் செம்மல்!
போற்றலுக்கும் தூற்றலுக்கும் இடையில் உள்ள
புகழ்க்கலசம் ! இவர் நமது கொள்கை மூச்சு !

நெடுங்கால அரசுகட்டில் வரலாற் றுள்ளே–
நினைவலையின் மனிதருள்ளே; இந்நூற் றாண்டின்
நெடுஞ்செழியர் வரலாறும் நிலைத்து நிற்கும் !
நெஞ்சாலும் வஞ்சனையின் வலையில் வீழா(து)
ஒடுங்கியுளார் வாழ்வுக்கே உழைக்கும் இந்த
உயர்மகனோ வையத்துப் பெருமை எல்லாம்
தொடுங்காலம் வரவேண்டும்! பன்னாள் வாழ்ந்து
தொண்டாற்றி இளம்பெரியா ராக வேண்டும்!

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர் – 1980

❖ ❖ ❖

தமிழால் வாழ்த்துகிறேன் – நீ தமிழ்போல் வாழியவே!

- முரசொலி **மணிமொழி** அவர்கள்

ஜீவநதிப் பெருக்கினின்று சிதறிவரும்
நீர்த்திரளை
சிற்றாறு – பேராறு என்றேதான் சொல்லு
கின்றோம்!

பெருமரத்தின் தனிப்பிரிவைக்
கிளையென்றும்
கொம்பென்றும் கூறுகின்றோம்;

அது போல –
பல்கலைக்கழகத்தில் பட்டங்கள்
பெற்றவர்கள்
மாணவராய்; மாண்புடைய
வல்லுநராய்த்தானிங்கே
வெளியே வருகின்றார்!

நாவலரோ –
பல்கலைக்கழகத்துக் குள்ளிருந்து
பல்கலைக் கழகமாகவே வெளிவந்த
சாதனையின் நாயகர்!

கோழியிலிருந்து முட்டை வருவதுண்டு
கோழியாகவே வருவதென்றால்
பெருஞ்சாதனை இல்லையா ?

பல்கலைக்கழகமெனப்
பொலிந்திருக்கும் நாவலரோ
பல்கலைக் கழகத்தின் வேந்தரல்ல;
துணைவேந்தரல்ல!
இணைவேந்தர்; ஆம்
பல்கலைக் கழகத்திற்கு இணைவேந்தர் !
இணையில்லா வேந்தர்

நடமாடும் பல்கலைக்கழகமாம் நம் நாவலரோ
பைந்தமிழ்; தமிழர்தமைப்
பொருதழிக்க நினைக்கும்
மனிதப் பாம்புகளின் நச்சுப்
பல்–கலைக்கழகம்!

கோல் பிடிக்கும் வயதிலும்
கோலமயில் கன்னியரை; அலங்
கோலப் படுத்துகின்ற அசிங்கங்கள் போலன்றி

ஒழுக்கத்தில் சீலனாக
ஒழுகிவரும் காரணத்தால்
நாவலர்– ஒழுக்கநெறிப் பல்கலைக்கழகம்!
அழுக்கைத் துடைக்கும் அழகான
துண்டைப்போல்

அறியாமை: இல்லாமை எனும்
அழுக்கைத் துடைக்கும் அரும்பணிக்கே
அமைச்சர் பெரும்பதவி! அப்பதவி
கைவிரலா ? இல்லை, விரல்நகம்!
வேண்டாம் எனும்போதில் வெட்டி எறிந்திடலாம்!
நாவலரே;

என்றைக்கும் நிரந்தரமாய் இருக்கின்ற
ஆட்சியாளன்!

ஈடுஇணையில்லா இலக்கியச் சொல்–
ஆட்சியாளன்!

நாடு புகழ்ந்தேத்தும் நல்லெழுத்து
ஆட்சியாளன்!

விசாலமனம்படைத்த விசாலாட்சியாளனவன் ?
கருணைக்கும் அன்புக்கும் இடையிருக்கும்
பொறுமையவர்!

கடமைதான் கலைஞர்! கட்டுப்பாடு
பேராசிரியர்!
கண்ணியமே நம் நாவலராம்!

மா –பலா – வாழை எனும் முக்கனியில்

இடையிருக்கும் வேரிற்பழுத்த பலா!
வெளித்தோற்றத்தில், வீர கம்பீரத்தில்
கடுமை தெரிந்தாலும்
உள்ளத்தில்–பலாவின்
உள்ளிருக்கும் சதைச்சுளைபோல்
சுவைப்பவர்தான் நெட்டை அண்ணா
நெடுஞ்செழியன்!
அண்ணனுக்குத் தம்பியிவர் ;
கலைஞர் உட்பட நம்
அனைவருக்கும் அண்ணனிவர்!

பட்டு என்றால் 'பட்' டென்றே கிழிந்து விடும்
பட்டுக்கோட்டையில் பிறந்து வந்த நாவலரோ,

இதற்கு முரண்பாடு!
பட்டுக்கோட்டை அழகிரிபோல் கொள்கையில்
கெட்டிக் கோட்டை இவர்!

காரியப்படையாம் கழகப் படைகொண்டு
ஆரியப்படை வென்ற அறிவுக்கோட்டை இது!
மனக்கோட்டை
கட்டுகின்ற மாஜித் தலைவர்களின்

கனவுக் கோட்டைகளை
மணற்கோட்டை ஆக்குகின்ற
மலைக்கோட்டை இதுவாகும்!
'செட்டிங்' கோட்டைகளைச்
சின்னாபின்ன மாக்கும்

இரும்புக் கோட்டை இது; நம்
இதயக் கோட்டைஇது!

இதயத்தில் கொலுவிருக்கும் நாவலர் பெரு
மானின்
உதயத்திருநாளில்
உளங்குளிர வாழ்த்திடுவோம்!

வாழ்த்தும் வயதெனக்கு வரவில்லை என்றாலும்
வாழ்த்தெழுதும் தமிழுக்கு வானளவும்
வயதுண்டே!

வயதளக்க முடியாத வண்ணத் தமிழெடுத்து
தமிழ்போல வாழ்கவெனத்
தம்பி நான் வாழ்த்துகிறேன்!
தமிழால் வாழ்த்துகிறேன் – நீ
தமிழ்போல் வாழியவே!

நன்றி : நாடு போற்றும் நாவலர் – 1975

❖ ❖ ❖

இலக்கியத்தில் இடம்பெறும் நாவலர்

- கவிஞர்கோ **புத்தனேரி சுப்பிரமணியம்** அவர்கள்

அரச கோபாலன் அங்கயற் கண்ணி
அருமை மக்கள் எண்மரிலே
வரிசையில் மூன்றாம் மகவாய்த் தோன்றி
வளர்ந்தவர் நாவலர் நெடுஞ்செழியன்

வடக்காளத்தூர் இராச கோபாலர்
வைணவ பக்தியில் மிகஅழுத்தம்
கடவுள் பக்தியால் நாமதாரியாய்க்
காட்சி அளித்ததும் ஒருகாலம்!

பெருமாள் பக்தர் விரைவினில் தந்தை
பெரியார் பக்தராய் மாறிவிட்டார்!
அருமைத் தந்தையின் நாத்திக நெறியை
அகத்தினில் ஏற்றார் நாவலரும்.

பட்டுக் கோட்டை அழகிரி சாமியின்
பகுத்தறி வூட்டும் பேச்சினிலே
மட்டில்லாத உணர்ச்சியால் பெரியார்
வழியை ஏற்றார் நாவலரே.

பெரிய தம்பிஎன நாவலர் பேரும்
சின்னத் தம்பிஎனச் செழியனின் பேரும்
அருமை ததும்ப அழைத்தனர் ஊரார்
அண்ணனும் தம்பியும் வளர்ந்தனர் சீராய்!

பட்டுக் கோட்டைப் பள்ளியில் இருவரும்
கெட்டிக் கார மாணவ மணிகள்
கட்டுப் பாடும் ஒழுக்கமும் வாய்ந்து
கல்வியில் பலப்பல பரிசுகள் பெற்றார்!

மறைமலை யடிகளை மாணவர் மத்தியில்
வரவழைத்தவர் நெடுஞ் செழியன்;
மறைமலை யடிகளின் தனித்தமிழ் இயக்கம்
வளர வைத்தவர் நெடுஞ்செழியன்

சேலம் நகரில் நீதிக் கட்சி
திராவிடக் கழகம் ஆனவுடன்
சாலச் சிறந்த இயக்கம் எனவே
தம்மையே தந்தவர் நெடுஞ்செழியன்

சுயமரி யாதைச் சூறாவளி யாய்ச்
சுழன்று வந்தவர் நெடுஞ்செழியன்
நயமாய்ச் சங்க இலக்கியப் புகழை
நாட்டில் வளர்த்தவர் நெடுஞ்செழியன்

'மன்றம்' என்ற அரசியல் இலக்கிய
மாத இதழைத் தொடங்கினரே;
தென்றல் நடையில் சங்க இலக்கியச்
சிந்தனை தந்தவர் நெடுஞ்செழியன்!

பெரியார் மணியின் திருமணத் தாலே
பெரிய பூசல் கிளம்பியதால்
பிரிவு நேர்ந்தது திராவிடர் கழகம்
பிளவு பட்டதே இரண்டாக!

அண்ணா தலைமையில் முன்னேற்றக் கழகம்
அமைந்தது நாற்பத் தொன்பதிலே;
கண்ணீர் செந்நீர் வளர்த்த கழகமெனக்
கடமை காத்தவர் நெடுஞ்செழியன்!

அண்ணா நடத்திய திராவிட நாட்டின்
ஆசிரியருக்குத் துணைநின்றார்;
பின்னே 'மாலை மணி' ஆசானா கப்
பெரும்பொறுப் பேற்றுப் பணிவென்றார்.

இரட்டைக் குழலின் துப்பாக்கி எனவே
இயக்கம் தமிழைக் காக்கும்எனும்
புரட்சிப் பேச்சால் அண்ணா இளைஞரின்
புதிய படையை நடத்தினரே!

முன்னேற்றக் கழகக் கொள்கையை நாட்டின்
மூலை முடுக்கெல்லாம் முழங்கிவந்தார்;
இன்னல் எதற்கும் அஞ்சா நெஞ்சுடன்
ஏறு போலே நடைபோட்டார்!

சீலம் நிறைந்த நாவலர் வாழ்க்கைத்
திருவிளக் கதனை ஏற்றிடவே
சேலம் டாக்டர் விசாலாட்சி தேவியைத்
திருமணம் புரிந்தார் நெடுஞ்செழியன்!

பருவமும் அன்பும் பண்பும் பொருந்திடப்
பதிவுத் திருமணம் கொண்டனரே
இருமனம் இணைந்த திருமணம் புரிந்தே
இல்லற ஒழுக்கம் ஏற்றனரே!

கட்டிளங் காளை நாவலர் இல்லறக்
கடமையை இனிதே காத்திடவே
மட்டில் லாத மகிழ்ச்சி யளித்தார்
மங்கையர் திலகம் விசாலாட்சி

நல்ல குடும்பம் நாவலர் குடும்பம்
பல்கலைக் கழகம் எனமக்கள்
எல்லோரும் போற்றத் துணையாய் இருப்பவர்
இணையில் லாத விசாலாட்சி

அண்ணா வழியில் அயரா துழைக்கும்
அருமைத் தலைவர் நெடுஞ்செழியன்
கண்ணியம் கடமை கட்டுப் பாடும்
காக்கும் தளபதி நெடுஞ்செழியன்

பாரதி தாசனின் புரட்சிக் கவிகள்
பட்டி தொட்டியெலாம் பரவிடவே
வீர முழக்கம் செய்தே உணர்ச்சியை
விதைத்தவர் நாவலவர் நெடுஞ்செழியன்

இந்தி எதிர்ப்பில் மும்முறை சிறையில்
இன்னல் ஏற்றவர் நெடுஞ்செழியன்;
செந்தமிழ் காக்க எந்தத் தியாகமும்
செய்யத் துணிந்தவர் நெடுஞ்செழியன்

கல்லை உருட்டி நாவலர் உயிரைக்
கவரத் துணிந்தனர் தேனியிலே;
நல்ல வேளை தப்பிப் பிழைத்தார்,
நாவலர் பணியும் தொடர்கிறது.

புள்ளி விவரம் அள்ளிக் கொடுக்கும்
புலமை அமைச்சர் நெடுஞ்செழியன்
துள்ளுந டையில் கவிதைகள் எடுத்துச்
சொல்லும் அழகர் நெடுஞ்செழியன்

கல்விப் பணியே கடவுட் பணியெனக்
காக்கும் அமைச்சர் நெடுஞ்செழியன்
எல்லா ருக்கும் நல்லவர் என்றும்
இனிய அமைச்சர் நெடுஞ்செழியன்

மதுரைப் பல்கலைக் கழகம் அமைக்க
வழிவகை கண்டவர் நெடுஞ்செழியன்
புதிய முறைகளைக் கல்வித் துறைகளில்
புகுத்திடத் துணிபவர் நெடுஞ்செழியன்

எங்கும் எதிலும் தமிழ்எனும் திட்டம்
இயங்கச் செய்பவர் நெடுஞ்செழியன்
மங்காப் புகழுடன் சுற்றுலா இயக்கம்
வளர வைப்பவர் நெடுஞ்செழியன்

கல்லூரி முதல்நிலை வரையும் இலவசக்
கல்வி வழங்கியவர் நெடுஞ்செழியன்
கல்லூரி என்பது புதியவை நிறுவிடக்
கண்டவர் நாவலர் நெடுஞ்செழியன்

உருவத் தாலும் உள்ளத் தாலும்
உயர்ந்தவர் டாக்டர் நெடுஞ்செழியன்
இருநிலம் போற்றும் நாவலர் பெருமை
இலக்கி யத்தில் இடம்பெறுமே!

தூய நெஞ்சுடன் நாவலர் குறிப்பைத்
தொகுத்துச் சொன்னேன் கண்ணிகளில்;
காய்தல் உவத்தல் இன்றி மதிப்பைக்
கணிப்பீர் அன்பு நண்பர்களே!

நன்றி : நாடு போற்றும் நாவலர் – 1975
56ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா மலர்
11.07.1975

❖ ❖ ❖

சந்தம் தவறாத சங்கீதத் தேனருவி

- திருமதி **சௌந்தராகைலாசம்** அவர்கள்

நாவல னைக்கழக நாயகனை நற்றமிழின்
பாவல னைக்கவரும் பண்பினனை – ஆவலுடன்
போற்றும், அவன்பிறந்த பொன்னாளை நாடுமகிழ்ந்(து)
ஏற்றுக்கொண் டாடும் இனிது!

எந்த இடமேகி எவர்முன்னே நின்றாலும்
அந்தஇளந் தாடி அருமைத் தமிழ்பேசி
சந்தந் தவறாத சங்கீதத் தேனருவி
சிந்தியதே சிந்தையினுட் சென்று !

சாதிப்ப தாகமிகச் சாற்றியதைக் காற்றில்விட்டு
வாதிப்ப தேதொழிலாய் வாழ்வதும் – போதிப்ப(து)
ஊருக்கென் றாக்கி ஒதுங்குவதும் நாவலரென்
பாருக் குதவாதப் பா!

வாய்த்தநிதி தன்வலியும் வான்மதியின் பொன்னொளியும்
சேர்த்த நெடுஞ்செழிப்புச் சிந்தனையில் பன்னெடுநாள்
காத்துக் கிடந்ததெல்லாம் காரியமாய்க் கண்சிமிட்டப்
பூத்துக் குலுங்கும் புகழ்!

அண்ணா துரையின் அடியொற்றிக் காலமெலாம்
பண்ணார் தமிழைப் பயிர்செய்து –கண்ணாகக்
காக்கும் நெடுஞ்செழியன் கைதவழ்செங் கோலினிலும்
வாக்கினிலும் பொங்கும் வளம்!

கோளும் பிறவும் குறுக்கிட்டு நின்றாலும்
ஆளும் குழுவின் அகத்திருந்து–நாளும் நீ
தொண்டு புரியத் துணையிருப் பான்குறத்தி
கொண்டாடி நிற்கும் குகன்!

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர் – 1980

❖ ❖ ❖

நெடிய தோள் நாவலர்

- கவிஞர் **கா.வேழவேந்தன்** அவர்கள்

சொல்லெலாம் வெல்லம் தேக்கி,
தொண்டெலாம் தூய்மை தேக்கி,
கல்லெலாம் கரையும் வண்ணம்
கருத்தூறும் நெஞ்சம் தேக்கி,
பல்கலைக் கழக மொன்றே
பாரின்மேல் நடந்த தென்று
நல்லவர் போற்றும் வண்ணம்
'நாவலர்' திகழு கின்றார்!

அந்தநாள் மதுரை ஆண்ட
அருநெடுஞ் செழியன், 'குற்றம்
வந்ததே' என்ற றிந்து
மாண்டதால் நீதி காத்தான்!

இந்தநாள் நெஞ்சை ஆளும்
இந்நெடுஞ் செழியன் பெற்ற
செந்தமிழ் அன்னைக் காகச்
சிறைச்சாலை சென்று காத்தார்!

அண்ணா மலையில்ப யின்றே
அறிவாற்றல் பெற்று, காஞ்சி
அண்ணாகல் லூரி சென்றே
அரசியல் கற்ற தாலே
அண்ணாந்து மாற்றார் போற்ற
அற்புதப் புகழ்ப டைத்தார்!
எண்ணத்தால் செயலால் என்றும்
எறும்புக்கும் தீமை செய்யார்!

போர்ப்பாட்டு மேடை யெல்லாம்
புயலாக இருக்கும்! பேனா
நேர்ப்பாட்டாம் எழுத்தில் கூட
நெருப்பெலாம் கிளம்பும்! ஆனால்
ஆர்ப்பாட்டம் சொந்த வாழ்வில்
அணுவேனும் உண்டா ? நாளும்
ஊர்ப்பாட்டும், உலகப் பாட்டும்
உயர்ந்திடத் தொண்டு செய்வார்!

நெடியதோர் உருவம்; ஆனால்
நெகிழ்ந்திடும் குழந்தை உள்ளம்!
நெடிதுயர் தோள்கள்; ஆனால்
நெறிமாறா அடக்கப் பண்பு!
அடி ஆளும் உயரம்; ஆனால்
அன்புக்கே பணியும் செய்கை!
இடிபோன்ற பேச்சு; கேட்க
இம்மியும் விரசம் உண்டா ?

உருவத்தால் தாம ரைப்பூ!
உள்ளத்தால் தும்பைப் பூதான்!
இருந்திடும் கடமைப் போக்கில்
எழில் ‘சூர்யகாந்தி’ என்பேன்!
மருவியே தொண்டர் வண்டு
வருவதால் ‘ரோசா’ என்பேன்!
இருக்கின்ற தமிழ நாட்டார்
இதயப்பூ நாவ லர்தான்!

எதிரிகள் கூட இன்றே
இவர்பேச்சைக் கேட்டு விட்டால்
‘இதுசரி’ என்பார்; பேச்சில்
எத்தனை எடுத்துக் காட்டு !
பதிலுக்குப் பதிலெ டுத்துப்
பண்ணோசைக் குரலில் சொன்னால்
உதிராதா எதிரிக் கோட்டை ?
ஊரெலாம் திரண்டி டாதா ?

அறிவாலே ‘ஆழி’ யானார்!
அரும்பேச்சால்’அருவி’ யானார்!
நெறியாலே அண்ணா விட்ட
‘நிழ’ லானார்! தொண்ட ருக்குக்
குறிகாட்டும் விளக்காய் ஆனார்!
குரலானார் தமிழன் னைக்கே!
வறியவர், நலிந்தோர் வாழ
வழக்காடும் தலைவர் ஆனார்!

நன்றி: டாக்டர் நாவலர்
மணிவிழா மலர் – 1980

❖ ❖ ❖

புகழுடன் வாழ்கவே

- திரு. **மு.பொன்னையா** அவர்கள்



ஆங்கில ஆசான் அறிவுசால் நியுமென்
பாங்கி னோடும் பகன்ற பண்பெலாம்
தாங்கி நிற்குமெம் தலைவனே ! நின்புகழ்
ஓங்கி வளர்கவே ! உலகெலாம் சிறக்கவே !

டாக்டர் பட்டம்நீர் பெற்றதும் சிறப்பதே!
டாக்டரைப் பாகமாய்ப் பெற்றதும் சிறப்பதே !
டாக்டர்நும் அன்பினால் தளர்வுற்றார் சிறப்பதே !
டாக்டரே! வாழ்கநீர்! தமிழென வாழ்கவே !

இனிய உளவாக இன்னாத கூறல்
கனி யிருப்பக் காய்கவர்ந் தற்றெனும்
கூற்றினுக் கணியாய்ப் போற்றிடும்
அண்ணலே!
போற்றுதும் உம்புகழ்! புகழுடன் வாழ்கவே!

நன்றி: நாடு போற்றும் நாவலர் – 1975

❖ ❖ ❖

நற்றமிழின் பூக்காடு

- கவிஞர் **மணமேடு குருநாதன்** அவர்கள்



நாவளமும் நடைவளமும்
துணையி ருக்க,
நலமிகுந்த பேரறிஞர்
பெரியார் என்னும்

காவலர்கள் பாசறையின்
உறவி ருக்க,
கலைமலரும் தென்றமிழின்
வாழ்வே நெஞ்சின்

ஆவலென எந்நாளும்
எண்ணி, இந்த
அருமையிலே பெருமையுடன்
நின்றி ருக்கும்

நாவலரே! மாண்புடைய
நிதிய மைச்சே!

நற்றமிழின் பூக்காடே !
வாழி ! வாழி!

இலக்கியமும் அரசியலும்
அடுக்க டுக்காய்
இனிப்புடைய கனித்தமிழில்
பக்கு வத்தால்

கலக்கியவா றெடுத்தெடுத்துக்
கொடுத்த உங்கள்
காலமொரு தனிக்காலம்!
மாற்றார் நெஞ்சை

மலைக்கவிடும் சொற்கோவை!
கருத்துப் பொங்கல்!
மனத்துக்குள் பூத்தஒரு
மலரின் வாசம்!

தலைத்தலைமை பூணவரும்
தமிழர்க் கெல்லாம்
தனித்தலைமை பூண்டிருந்து
வாழி ! நன்றே!
அளந்தோடி வருகின்ற
பூம்பு னல்போல்
அசைந்துவரும் பேருருவில்
இளமை கொஞ்சி,

இளந்தாடி குழைந்தாட
நீங்கள் மேடை
இலக்கணத்தில் புதுக்கணங்கள்
தீட்டி வைத்த

வளம்பாடிக் கொண்டிருக்கும்
தமிழ்நெஞ் சங்கள்
வரலாற்றில் நீங்களொரு
கனவுக் கண்ணன்!

களங்காணும் பொழுதெல்லாம்
வெற்றி காணும்
கரைகாணாப் பெருவாழ்வு
பொங்க வாழி !

நன்றி: டாக்டர் நாவலர் மணிவிழா மலர் – 1980

❖ ❖ ❖

சட்டமன்றத்தில் நாவலர்

- டாக்டர் **நாவலர்** அவர்கள்

மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, மேன்மைதங்கிய கவர்னர் அவர்களுடைய உரையை ஒட்டி சென்ற மூன்று நாட்களாக நடைபெறுகின்ற விவாதத்தின் பேரில் இன்று உங்கள் முன் சில கருத்துக்களை எடுத்து வைக்க நான் முன் வந்திருக்கிறேன். தமிழக அரசால் உருவாக்கப்பட்டு, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களால் உரையாக மொழியப்பட்டு, இங்கு வைக்கப்பட்டுள்ள உரையின் மீது, விவாதிக்கின்ற வாய்ப்பும், உரிமையும் இந்த மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தரப்பட்டிருக்கிறது. அந்த வாய்ப்பையும், உரிமையும் பயன்படுத்திக் கொண்டுதான் நான் அந்த உரையின் மீது எழுப்பப்பட்ட விவாதத்தைப் பொறுத்த கருத்துக்களைப் பற்றி பேச முற்பட்டிருக்கிறேன்.

'கவர்னர் உரையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் கலந்துகொள்ளுவது அவ்வளவு பொருத்தமுடையதாக இல்லை; அவர் உரை வழங்குகின்றபோது கூட்டத்திற்கு வராமல் இருந்துவிட்டு விவாதத்தில் எப்படி வந்து கலந்துகொள்ளுகிறார்கள்? அது சரியானதுதானா? பொருத்தமானதுதானா? அரசியல் சட்டத்திற்கு முரண்பாடானது அல்லவா? ஒழுங்கை மீறியதல்லவா?'' என்றெல்லாம் ஆளும் கட்சி உறுப்பினர்கள் வினாவினார்கள்.

கவர்னர் உரையாற்றுகின்றபோது உறுப்பினர்கள் வந்தே தீர வேண்டுமென்ற கட்டாயம் இல்லையென்பதை, இதற்கு முன்னர் இந்த மன்றத்திலே அத்தகைய விவாதத்தின்போது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சனையின் மீது அவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள். சட்டமன்றத்திலே கவர்னர் உரையின்போது கலந்து கொள்வதும், கலந்து கொள்ளாமல் இருப்பதும் அரசியல் சட்ட உரிமைக்கு மாறுபட்ட ஒன்றல்ல. கவர்னர் உரையைக் கேட்க உறுப்பினர்கள் வராமல் இருப்பது குற்றமுடைய ஒன்றல்ல. அத்தகைய தீர்ப்பு இதற்கு முன்னாலே அவைத்தலைவர் அவர்களால் இந்த மன்றத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. கவர்னர் உரைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் ஏன் வரவில்லை என்பதற்கான காரணத்தை முன்பு இதே சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான அறிஞர் அண்ணா அவர்கள் விளக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதை நான் இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

"It is not our intention to discredit or show discourtesy to the Governor. We are only up against the institution of Governorship and the manner in which Governors are being appointed and money being spent on that. Rule 8 of the Assembly Rules expressly states the position only when such and such disturbances take place. By our not attending the Governor's Address we have not impeded the functioning of this House or of any officer of this House."

என்ற கருத்துக்களை அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். நாங்கள் ஒரு கருத்தினைக் கொண்டிருக்கிறோம். கவர்னர் பதவி இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டு இங்கே அனுப்பப்படுகின்ற ஒன்று என்று நாங்கள் கருதுகிறோம்.

இதற்கு முன்னாலே வெள்ளையர் ஆண்டபோது கவர்னர் பதவியின் தகுதியும், அவர்களுக்காகச் செய்யப்பட்ட ஆடம்பரங்களும், செலவுகளும் எந்த அளவிலே, எந்த நிலையிலே இருந்தனவோ, அதே அளவில் அமையத்தக்க வகையிலே இன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றன கவர்னர் உரை நிகழ்த்துவது சட்டமன்றத்தின் தொடர் நடவடிக்கைகளிலே ஒன்று அல்ல. சட்டமன்றத் தொடர் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட ஒன்று. அரசாங்கம் மேற்கொள்ளுகின்ற விழாக்கள், நிகழ்ச்சிகள் போன்று அந்த உரை நிகழ்த்தும் நிகழ்ச்சியும் அமைந்திருக்கிறது. சட்டமன்ற ப்ரொஸீடிங்ஸ் என்ற அந்த நிகழ்ச்சியின் வரிசைகளிலே ஒன்றல்ல என்ற முறையில் அவைத்தலைவர் அவர்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். கவர்னர் பதவியானது நியமிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது; வெள்ளையர் காலத்தில் இருந்ததுபோல் நியமிக்கப்பட்ட ஒன்றாக இருப்பதோடு மட்டுமல்லாமல், பெரும் செலவுக்குக் காரணமாகவும் இருக்கும் காரணத்தால் அந்தப் பதவி அவசியமற்ற ஒன்று என்ற வெறுப்புணர்ச்சியை, விருப்பமின்மையைத் தெரிவிப்பதற்காகப் இந்த முறையைக் கையாள்கிறோம். இது சட்டத்திற்குப் புறம்பான ஒன்று என்றே, முரண்பாடானது என்றே யாரும் கருதுவதற்கில்லை. இது சட்டத்திற்குப் புறம்பானது என்று இங்குள்ள சில உறுப்பினர்கள் கருத்து அறிவித்தமையால்தான் நான் இதனை எடுத்துச் சொல்கிறேன். சட்டமன்ற நடவடிக்கையிலோ, அரசாங்கத்தின் மீதோ

தங்கள் வெறுப்புணர்ச்சியை, விருப்பமின்மையைத் தெரிவிக்கும் முறையில் பல்வேறு முறைகளைக் கையாளுகின்றார்கள். பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே கூட ராணியார் உரையைக் கேட்க மறுத்த நிகழ்ச்சிகள் இரண்டொரு தடவை நிகழ்ந்திருக்கின்றன. இந்தியப் பேரரசின் பாராளுமன்றத்திலேகூட குடியரசுத் தலைவருடைய உரையைக் கேட்கமாட்டோம் என்று கலந்து கொள்ளாமல் இருந்த நிகழ்ச்சிகள் இரண்டொரு தடவை நடந்திருக்கின்றன. அண்மையில் சில மாநிலங்களில் கவர்னர் போக்கில் அதிருப்தி கொண்டு கூட்டத்திற்கு வராமல் இருந்திருக்கிறார்கள். சில மாநிலங்களில் கூட்டத்திற்கு வந்து எழுந்து நின்று ஆட்சேபணையை எடுத்துத் தெரிவித்து விட்டு வெளியேறி இருக்கிறார்கள். அண்மையில் ஒரு மாநில சட்டமன்றத்தில் கவர்னருடைய உரையை கிழித்துப் போட்டு காலால் மிதித்து விட்டு போயிருக்கிறார்கள். இப்படி வெறுப்புணர்ச்சியைக் காட்ட, விருப்பமின்மையைக்காட்ட ஒவ்வொரு வழி முறையை ஒவ்வொருவரும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நாங்கள் எங்களுடைய வெறுப்புணர்ச்சியைக் காட்ட, இந்த முறையைக் கையாள்கிறோம். வெறுப்புணர்ச்சியைக் காட்டுவதே தவறு, வெளியிடுவதே தவறு என்ற முறையில் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எடுத்துக் கூறியது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாக அமைந்திருக்கிறது. அத்தகைய நிலைமையை எடுத்துச் சொல்லும்போது, இன்று இருக்கும் அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டு, உறுதிமொழி அளித்து இங்கே அமர்ந்திருக்கும்போது அந்த அரசியல் சட்ட விதிமுறைகளுக்கு மாறுபாடாக நடக்கலாமா என்று கூடச் சிலர் கேட்டார்கள்.

இதற்கு முன்னால் வெள்ளையன் நாட்டை ஆண்ட காலத்தில்கூட வெள்ளையன் பாராளுமன்றத்தையும், சட்டமன்றங்களையும் வைத்து நடத்தியபோதுகூட அக்காலங்களில்கூட மாபெரும் காங்கிரஸ் தலைவர்கள் தங்களது வெறுப்புணர்ச்சியைக் காட்டும்போது பல தடவை வெளிநடப்புக்கள் செய்திருக்கிறார்கள். அவர்களும் அப்பொழுது உறுதிமொழி எடுத்துக் கொண்டுதான் அந்த அவைகளில் இடம் பெற்றிருந்தார்கள். அவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்போதுகூட பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் பற்றோடு நடந்து கொள்கிறோம் என உறுதிமொழி எடுத்துக்கொண்டுதான் அங்கு இடம் பெற்றிருந்தார்கள்.

“I, having been elected a member of this Assembly do solemnly swear that I will be faithful and bear true allegiance to His Majesty the King Emperor of India, his heirs and successors and that I will faithfully discharge the duty upon which I am about to enter.”

என்று சொல்லித்தான் அப்பொழுதும் காங்கிரஸ் தலைவர்கள் சட்டமன்றங்களில் பங்கெடுத்துக்கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கவே கூடாது, அதை மாற்ற வேண்டுமென்று விரும்பவே கூடாது, சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பட்டு தங்கள் கருத்துக்களை, வெறுப்புணர்ச்சிகளைத் தெரிவிக்கவே கூடாது என்றிருந்தால் அப்பொழுது காங்கிரஸ் தலைவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகவுள்ள தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கவே முடியாது. மன்னர் பிரானுக்கும்,

அவரது வாரிசுகளுக்கும், அவர்களது வழிமுறை வருகிறவர்களுக்கும் (heirs and successors) தாங்கள் நம்பிக்கையோடும், பக்தியோடும் நடந்து கொள்வோம் என்றுதான் அப்பொழுது அவர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி உறுதிமொழி எடுத்துக்கொண்டு எப்படி மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டீர்கள்? எப்படி மாறுபட்ட கருத்துக்களை தெரிவிக்கிறீர்கள்? என்று யாரும் அவர்களைக் கேட்டதுமில்லை, அப்படி கேட்பது முறையும் அல்ல. அதை ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் அவர்களை பணிவன் போடு தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சியிலுள்ள அத்தனைபேர்களும் ஆளும் கட்சியினர் சார்பாக, ஆளும் கட்சியினர் கொண்டிருக்கக்கூடிய கருத்துக் களுக்கு ஆதரவு அளித்து அதைப் போற்றுகிற முறையில், பாராட்டுகிற முறையில் இருக்க வேண்டுமென்று எண்ணி, கருதி அறிவுரை வழங்குகிற அளவுக்கு ஆளும்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். குற்றங் குறைகளைச் சொல்வதைப் பொறுக்க முடியாத அளவிற்கு, குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டுவதை தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு இருக்கிறார்கள், ஆளும்கட்சியைச் சார்ந்தவர்கள்.

“செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு”

என்று வள்ளுவர் வகுத்துத் தந்திருக்கிறார்கள். ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள், எதிர்க்கட்சியினர் சொல்வதைக் கேட்கமாட்டோம், நீங்கள் எங்களை முழுக்க முழுக்க ஆதரிக்க வேண்டுமென்ற பொருள்படும்படி இங்கு பல நண்பர்கள் எடுத்துக்கூறுவது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாக அமைத்திருக்கிறது. நாங்கள் கவர்னர் உரையின்போது இங்கே வரவில்லையென்றால் அது சட்டமன்றத்திற்கு புறம்பானதொன்றல்ல, எங்களின் அதிருப்தியை அறிவிக்க, நாட்டுக்கு அறிவிக்க, மக்களுக்கு அறிவிக்க, அவனியோருக்கு அறிவிக்க, நாங்கள் ஒருமுறையை கையாளுகிறோம். அது, எங்களைப் பொறுத்தவரை சரியானதென்று நாங்கள் கருதுகிறோம். இதற்கு தீர்ப்பளிக்கவேண்டியது, எதிர்காலமும், மக்களுமாவார்கள். அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தைக் கொள்வது தவறு என்று ஆளும்கட்சி அங்கத்தினர்கள் சிலர் கூறினார்கள். எங்கள் கருத்தை வலியுறுத்துவதற்காகத்தான் முறையை நாங்கள் மேற்கொள்கிறோமே தவிர, கவர்னர் பெருமானை இழிவுப் படுத்தவோ அல்லது வேறு வகையில் எண்ணுவதோ அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேன்மை தங்கிய கவர்னர் அவர்களது உரையில் சில பல கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. மதிப்பிற்குரிய கவர்னர் உரைமீது கருத்துக்கள் தெரிவிக்கிறபோது, அதை மிகப் புகழ்பாட பாராட்டி எடுத்துக் கூறினார்கள். இந்த தமிழக அமைச்சரவை பெயர் பெற்று, புகழ் பெற்று விளங்குகிறது என்ற கருத்தை கவர்னர் அவர்கள் தெரிவித்தார்கள். தமிழ்நாடு அமைச்சரவை பெயரோடும், புகழோடும், பெருமையோடும், சீரோடும், சிறப்போடும் விளங்குவது எங்களுக்கு மெத்த மகிழ்ச்சி அளிக்கிற ஒன்றேயல்லாது மாறுபட்டதொன்றல்ல. இந்த அமைச்சரவை உயர்ந்திருக்கிறது, சிறந்திருக்கிறது, புகழோடு விளங்குகிறது, பெருமையோடு துலங்குகிறது என்ற கருத்துக்கள் எங்களுக்கு வெறுப்பைத் தருபவைகளல்ல, அந்தப்

புகழும், பெயரும் மேலும் ஓங்கவேண்டுமென்ற, மேலும் பெருக வேண்டுமென்ற அடிப்படையில்தான் கருத்துக்களை நாம் இங்கு பரிமாறுகிறோம். மற்ற மாநிலங்கள் உயர்ந்து காணப்பட, நமது தமிழகம் தாழ்ந்து காணப்படும் நிலையை நாங்கள் விரும்பு கிறோம் என்று யாரும் தவறாக எண்ண வேண்டாம். பெயருக்கும், புகழுக்கும் ஒரு எல்லை இருக்கிறது, அதற்கு மேல் போவதற்கில்லை என்று சொல்லுவதற்கில்லை. நமக்கு கிடைத்திருக்கக் கூடிய வாய்ப்புகளும், வசதிகளும் பெயரையும், புகழையும் வளர்க்க ஏராளமாகயிருக்கின்றன. அந்த முறையில் நமது தமிழகம் பெயரும் புகழும் அடைந்து சிறப்புற விளங்குவது என்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். அந்த நிலையை நாங்கள் வெறுக்கவோ அல்லது மறுக்கவோ விரும்பவில்லை. நிருவாக அனுபவமும், இளமையின் துடிப்பும் நல்ல முறையில் இணைந்த அடக்கமான அமைச்சரவை இது என்று கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிருவாக அனுபவமும், இளமையின் துடிப்பும் உள்ள அமைச்சரவை என்று கூறியிருப்பதைப் பார்க்கும்போது நிருவாக அனுபவம் ஆறு அமைச்சர்களிடமும், இளமைத் துடிப்பும் மூன்று அமைச்சர்களிடமும் இணைந்த வகையில் இந்த அமைச்சரவை இயங்கி ஆக 9 அமைச்சர்களிடமும் இந்த இரண்டும் இணைந்த இந்த அமைச்சரவை இணைந்து பாடுபடுகிறது என்று கருதுகிறேன். மூன்று அமைச்சர்களிடம் உள்ள இளமைத் துடிப்பையும், ஆறு அமைச்சர்களிடமுள்ள நிருவாக அனுபவத்தையும் கொண்டுதான் இவை இரண்டும் ஒன்றாக இணைந்த அமைச்சரவை என்று கூறியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன், புதிய அமைச்சரவை துரிதமாகவும், துணிவுடனும் செயல்பட முனைத்துவிட்டது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். துரிதமாகவும், துணிவாகவும் எடுத்த நடவடிக்கைகள் பற்றி இந்தப் பேருரையில் எங்கு தேடிப் பார்த்தாலும் அகப்படவில்லை. புதிய அமைச்சரவை துரிதமாகவும், துணிவுடனும் செயல்படுவது எங்கு தென்படுகிறதென்றால், புதிய அமைச்சர் அவையில் உள்ளவர்களின் சுற்றுப்பிரயாணம் துரிதமாக நடக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்களைத் தாக்கிப் பேசுவதில் துணிச்சல் பயன்படுகின்றது என்று குறிப்பிட வேண்டிய நிலையில் தான் அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் எல்லா மக்களையும் கவனித்து பொதுப்படையாக நின்று, நடு நிலையிலிருந்து பணியாற்றவேண்டிய அமைச்சர்கள், எல்லா மக்களுக்கும் பொதுப்படையாக நின்று பெருந்தன்மையோடும், அரசியல் கண்ணியத்தோடும் நடந்து கொண்டு மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகயிருக்க வேண்டிய அமைச்சர்கள், இன்னும் சொல்லப்போனால் எதிர்க்கட்சிக்காரர்களுக்கும், மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்கவேண்டிய பொறுப்பு உள்ளவர்கள் எதிர்க்கட்சியினரும், மற்றவர்களும் கொண்டிருக்கிற கொள்கைகளை முழுக்க முழுக்க இழிவாகத் தாக்கிப் பேசும் பணியில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவர்களுக்கென ஒரு கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கொள்கையை நாங்கள் நாட்டிலே பரப்பி வருகிறோம். அந்த நாட்டு விடுதலைக் கொள்கையில் நாங்கள் நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம், அந்தக் கொள்கை வெற்றி பெறும் என்றும் எதிர்பார்க்கிறோம். அந்த நம்பிக்கையோடு அக்கருத்தை நாட்டிலே பரப்பி வருகிறோம். அதற்கு மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பவர்கள் நாட்டுப் பிரிவினை கோரிக்கையை

வைத்திருப்பவர்களை விஷப் பாம்பை அடிப்பதுபோல் அடித்துத் துரத்துங்கள் என்றும், திராவிடப் பிரிவினை பேய் போன்றது. ஆகவே பேய் பிடித்தவர்களை எப்படி வேப்பந்தழையால் அடித்து விரட்டுவார்களோ அதுபோல் விரட்டுங்கள் என்றும் மருந்து கொடுத்துப் பார்ப்போம் பலன் இல்லாவிடில் அறுவை சிகிச்சை மூலம் போக்க முயல்வோம் என்றும், காமாலைக் கண்ணுக்கு எதைப் பார்த்தாலும் மஞ்சளாகத்தான் தெரியும் என்றும், சொல்லும் விதத்தில் அமைச்சர்கள் துணிவோடு ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை புது அமைச்சரவை ஏற்பட்ட பிறகு கொடுக்கப்பட்ட விளக்கங்களிலிருந்து அறிகிறோம். கருத்து வேற்றுமைக்கு மதிப்பளிக்கிற தன்மை அமைச்சர்களிடம் அதிகமாக இருக்க வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுத் தேர்தல் குறித்து கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ‘‘பொதுத் தேர்தலை நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மாபெரும் நிறுவனம், சுமூகமாக திறமையோடு பணியாற்றியது பற்றி பெருமகிழ்ச்சியடைகிறேன்’’ என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிறுவனம் கூடுமான வரையில் நல்லமுறையில் நடந்தது என்பதை ஓரளவிற்கு நான் ஒப்புக்கொள்கிறேன். சென்ற தடவை நடந்ததைவிட இந்தத்தடவை அதிகப்படியானவர்கள் வாக்களிப்பதற்கு வாய்ப்புக்கள், வசதிகள் செய்யப்பட்டன. சென்ற தடவை வோட்டு போடுகிற முறை மாறி இப்பொழுது முத்திரை வைக்கும் முறை வந்திருக்கிறது. அதைவிட இது சிறந்தது. இன்னும் அதிகப்படியான மக்கள் வந்து வாக்களிக்க வாய்ப்பளிக்கும் முறையில் இந்த நிறுவனம் நல்ல முறையில் செயல்படவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் இந்த நிறுவனம் இன்னும் செம்மையாகவும், மக்கள் அதிகக் கஷ்டப்படாமல் நீண்டதூரம் வர வேண்டியதற்கு அவசியமில்லாத அளவிற்கு நல்லமுறையில் வந்து வாக்களிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர முயலவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், ‘‘தங்களிடம் விடப்பட்ட பெரும் பொறுப்பை பொறுமையோடும், நடு நிலைமையோடும் நிறைவேற்றி முடித்த அரசாங்க அலுவலர்கள் அனைவருக்கும் நமது பாராட்டுக்கள் உரியனவாகும்’’ என்று கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் எப்படி, எவ்வளவு தூரம் நடுநிலைமையோடு செயல்பட்டது என்பதை எதிர்க்கட்சி நண்பர்கள் பலர் இங்கு எடுத்துரைத்தார்கள். ஆளும் கட்சியினர்களுக்கு வசதியும், வாய்ப்பும் இருந்த சூழ்நிலையில், ஆளும் கட்சிக்காரர்களுக்கு பயன்படுகிற வகையில் அமைச்சர்களுடைய சுற்றுப் பயணங்கள் அமைந்திருந்தன. அமைச்சர்களாக இருக்கிற காரணத்தால், அமைச்சர்கள் போகின்ற சுற்றுப்பயணத்தின்போது, அவர்களுக்கு ஏற்படுகின்ற வாய்ப்பும் வசதியும் தேர்தல்காலத்தில் மற்றவர்களுக்குக் கிடைப்பதில்லை. அமைச்சர்கள் தேர்தல்காலத்தில், சுற்றுப்பயணம் செல்கின்றார்கள் என்றால், அவர்களோடு அதிகாரிகள், கலெக்டர், டெப்யூடி கலெக்டர்கள், தாசில்தார் இம்மாதிரிப் பட்டவர்கள், மற்றும் பொறியியல் அதிகாரிகள் எல்லோரும் அமைச்சர்களோடு செல்லுவதால் அந்தந்த இடங்களில் தனி வசதியும்; வாய்ப்பும் ஆளுங்கட்சியினருக்கு ஏற்படுகின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம்.

அடுத்து, நடுநிலைமையாக தேர்தல் நடைபெற வேண்டுமென்றால் அமைச்சர்களாக இருப்பவர்கள், சுற்றுப்பயணம் செய்யாமல், வேண்டுமென்றால் தங்கள்

தங்கள் தொகுதியில் மட்டும் சுற்றுப்பயணம் செய்கின்ற நிலைமை ஏற்பட வேண்டும். இல்லாவிட்டால் ஆறு மாதங்களுக்கு முன்பாவது எல்லா அமைச்சர்களும் பொறுப்புகளில் இருந்து விலகிக்கொண்டால் இத்தகைய குறைபாடுகள் இல்லாமல் இருக்கும் என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர்கள் போட்டியிடுகின்ற தொகுதியில் மட்டும் சுற்றுப்பயணம் செய்தால் ஓரளவுக்கு அதிகாரம் மற்ற இடங்களிலாவது கட்டுப்படுத்தப்படும் என்ற அளவில் விட்டுவிடலாம். ஆனால் மற்ற இடங்களிலும் சுற்றுப்பயணம் செய்யப்படுகின்ற காரணத்தால், பல சலுகைகள் ஆளும் கட்சியினருக்கு கிடைக்கின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. இப்போது நடந்திருக்கின்ற நிலைமையை எடுத்துக்கொண்டால், அமைச்சர்கள் எல்லோரும் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டார்கள். ஒவ்வொரு இடத்திற்கும் அமைச்சர்கள் சென்றது, காங்கிரஸ் பிரச்சாரகர்கள் என்ற முறையில் அல்ல. தாங்கள் அமைச்சர் பதவிகளில் இருக்கின்ற காரணத்தால், பயன்படும் என்கிற முறையில் தான் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார்கள். அப்படியில்லை என்றால் பதவியில் இல்லாமல் இருக்கும் முன்னாள் அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்திருக்கவேண்டும். அப்படியில்லாமல் அமைச்சர்களாக இருப்பவர்கள் மட்டும் ஒவ்வொரு தொகுதியிலும் சென்றுத்தீர வேண்டிய நிலை ஏற்பட்டது என்றால், ஆளும்கட்சியினருக்கு அதனால் சலுகைகள் ஏற்பட்டன என்று பொருள். அந்த அளவுக்கு அமைச்சர்களின் சுற்றுப்பயணம் அமைந்திருந்தன. ஆகவே இதை தவிர்த்து நான் முன்னால் கூறிய இரண்டு முறைகளில் ஒன்றைக் கையாண்டால் நல்ல முறையில் தேர்தல் நடைபெறுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விருப்புகிறேன் மற்றும் தேர்தல் காலங்களில் அரசியல் கட்சியில் உள்ளவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைப்பற்றி எடுத்துக் காட்டுகின்ற நிலையில் பல கருத்துக்கள் இரு தரப்பிலிருந்தும் வழங்கப்பட்டன. தேர்தல் காலத்தில் பண வலிவும், அதிகார வலிவும், ஆதிக்க வலிவும், ஜாதி வலிவும் எந்த முறையில் வேலை செய்தன என்பதையும் பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். இந்த மன்றத்தில் ஆளும்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்த கருத்துக்களில், மாற்றுக் கட்சியினர் தேர்தலில் பணத்தைக் கொடுத்து வோட்டுக்களை வாங்கினார்கள் என்றும் மாற்றுக் கட்சியினருக்கு ஏராளமான பணம் கொடுக்கப்பட்டது, அதைக்கொண்டுதான் தேர்தல் நடத்தினார்கள் என்றும், சில இடங்களில் வாக்காளர்களிடம் கொடுக்க இருந்த பணத்தை பிடுங்கி அதிகாரியினிடத்தில் ஒப்படைத்துவிட்டோம் என்றும் தெரிவிக்கப்பட்டன. இது குறித்து நான் ஒன்றே ஒன்றை மட்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

பொறுப்புள்ள நிலைமையில் இருக்கின்ற, நடுநிலைமையிலிருந்து செய்திகளை வெளியிடுகின்ற ஒரு நாளிதழில் இது குறித்து வந்த ஒரு கருத்தை மட்டும் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்த பொறுப்புள்ள நாளிதழில் எழுதப்பட்டிருக்கிற கருத்து என்ன என்பதையும் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். அந்த பத்திரிகையைச் சேர்ந்த ஒரு நிருபர் ஏறக்குறைய ஆயிரம் மைல்களுக்கு மேல் ஏழு மாவட்டங்களில் தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்ததாகவும், அங்கங்கே இருக்கின்ற பல்வேறு கட்சித் தலைவர்களிடம் கலந்து தேர்தல் நிலைமைகளைப்பற்றி எல்லாம் பேசியதாகவும்,

அங்கங்கே தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களைச் சந்தித்ததாகவும், பல இடங்களிலும் தேர்தலில் நிலை எப்படியிருக்கிறது, ஆங்காங்கே மக்கள் என்ன மனப்பான்மையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்? மக்களுடைய மனம் எந்த நிலைமையில் வேலை செய்கிறது? அந்தந்த தொகுதியிலுள்ள மக்கள் அந்தந்த தொகுதியிலுள்ள வேட்பாளர்களைப்பற்றி என்னென்ன நினைக்கிறார்கள்? என்பதைப்பற்றியெல்லாம் தான் தெரிந்த கொண்டதாகவும் அதில் தெரிவித்திருக்கிறார். அதோடு, சென்னையின் பக்கத்திலுள்ள ஒரு தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் அபேட்சகரை சந்தித்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார். அந்த அபேட்சகரைப் பற்றி குறிப்பிட்டிருப்பதில், அவர் சமீபத்தில் அரசியல் கட்சிக்கு வந்தவர் என்றும் எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரை எதிர்க்கின்ற முக்கிய அபேட்சகராகவும் விளங்கினார் என்று கூறிவிட்டு, அந்த அபேட்சகரிடம் எப்படித் தேர்தல் இருக்கிறது என்று கேட்டதற்கு, அவர் உடனே சட்டைக்குள் கை விட்டு, ஒரு கத்தை ரூபாய் நோட்டுகளை எடுத்துத் தரை மீது வீசி எறித்துவிட்டு, “இது இருக்கிற வரையில் என்னுடைய தேர்தல் வெற்றிகரமாக நடைபெறுவதில் சந்தேகமேயில்லை, என்னுடைய பஸ் பெட்ரோல் இருக்கிற வரையில் ஓடுவது மாதிரி, இந்தத் தேர்தலும் இதனால் நடந்து கொண்டிருக்கும்” என்று சொன்னதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

“Early in my tour nearer, Madras City, I happened to meet a Congress candidate, a new-corner to politics, who, however is lucky to be among a handful of Congress candidates opposing top opposition leaders. At my first question, he took out from his inner pocket a sheaf of currency notes and carelessly threw them on the ground, and said: ‘So long as this is available, the election goes on. It is like petrol to my bus’. என்று கூறிவிட்டு, இதை நிருபர் குறிப்பிடும்போது, The was honest and frank because he indicated what wins elections.” என்று எழுதியுள்ளார். இதை வெளிப்படையாக உண்மையாகவே தெரிவித்தார் என்று 18.2.1962 தேதி “மெயில்” இதழில் எழுதியுள்ளார். அதற்கு பிறகு தேர்தல் நடந்திருக்கின்றது. எதற்கு இதை எடுத்துத் தெரிவிக்கிறேன் என்றால், இந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துப் பேசுகின்ற நேரத்தில், யார் யார் எந்தெந்தக் குற்றங்களைச் செய்தார்கள் என்பதை எல்லாம் விட்டு விட்டு எதிர்காலத்திலாவது, தேர்தல் நேரங்களில் பண வலிவுக்கும், ஆதிக்க வலிவுக்கும், ஜாதி வலிவுக்கும் இடம் கொடுக்காத அளவுக்கு, எல்லோருடைய மனசான்றுகளுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளக் கூடிய சூழ்நிலையை, இந்த மன்றத்தில் உள்ள நாம் அனைவரும் ஏற்படுத்த வேண்டும் என்பதை அன்போடும் பணிவோடும் தெரிவித்துக் கொள்கின்ற வகையில் தான் நான் இதை எடுத்துக் கூறினேன். குற்றச்சாட்டுகள் என்று வருகின்ற காலத்தில் மாறி மாறி குற்றங்களை கூறிக்கொண்டிருந்தால், எப்படி இந்த மன்றத்தின் பெருமையும் புகழும் காப்பாற்றப்படும்? எப்படி நாம் நம்மை நாமே பெருமைப்படுத்திக்கொள்ள முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எதிர்காலத்தில் நல்ல முறையில், தேர்தல் நடத்தவேண்டும், எதிர்காலத்தில் இந்த நாட்டின் ஆக்கவேலைகளுக்கு நம்முடைய சக்தியை எல்லாம் பயன்படுத்த வேண்டும் என்கின்ற அளவில் அதற்குத் தகுந்தவாறு

நம்மை நாமே திருத்திக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை உணர்த்துவதற்காகத்தான் இதை நான் சுட்டிக்காட்டுகின்றேன்.

மன்னிக்கவும்.. மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றியும் அதனுடைய வளர்ச்சியைப் பற்றியும் கவர்னர் அவர்களது உரையில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் திட்டமே கூடாது என்று கூறுபவர்கள் அல்ல திராவிட முன்னேற்றக் கழகத்தினர் திட்டத்தைப் பொறுத்த வரையில் திட்டத்தோடு ஒரு ஆட்சி நடைபெற வேண்டுமென்பதை நல்ல முறையில் உணர்ந்திருக்கிறது. திட்டமே இல்லாமல் ஆட்சி நடைபெற வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறவில்லை. இந்தியாவில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப்போட்டு, தற்போது இரண்டு திட்டங்களை முடித்துவிட்டு, இப்போது மூன்றவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நிலைமை இன்றைக்கு வந்திருகிறது.

ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி எடுத்து சொல்லுகின்ற நிலைமையில், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலேயும் ஒதுக்கப்பட்டிருக்கிற பணம், தமிழகத்தைப் பொறுத்த வரையில் மிகக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது–திட்டங்கள் மிகக் குறைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தார் அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறார்கள். இந்த முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 1960 கோடியிலே தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிற திட்டத்தின் அளவு 80 கோடி என்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத்துறைக்கு மொத்தமாக ஒதுக்கப்பட்ட 4600 கோடியில் தமிழகத்தில் 156 கோடி அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7500 கோடி ரூபாய் பொதுத்துறையில் இந்தியத் துணைக்கண்டம் பூராவுக்குமாக ஒதுக்கப்பட்டதில் தமிழகத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களுக்கு 291 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதை நாம் கவனிக்கின்றபோது, இந்தியத் துணை கண்டத்தின் மக்கள் அளவைப் பார்க்கும்போது, அதோடு தமிழகத்தில் வாழக்கூடிய மக்கள் அளவைப் பார்க்கும்போது, தமிழத்தில் வாழக்கூடிய மக்கள் அளவு இந்தியத் துணைக் கண்டத்தில் வாழக்கூடிய மக்கள் அளவில் பத்தில் ஒரு பகுதி என்று அறிகிறோம். இந்தியத் துணைக்கண்டம் பூராவுக்கும் ஒதுக்கப்பட்ட தொகையில் 10–இல் ஒரு பகுதி, அதாவது 10 சதவிதம் தமிழகத்திற்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் கிடைத்திருப்பது 4 சதவீதம் தான் – அதாவது 4 சதவீத அளவுக்குத் தான் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழகத்தைப் பொறுத்தவரையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதை விட்டு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், இந்தியத் துணைக்கண்டத்தின் மக்கள் அளவையும் தமிழகத்தின் மக்கள் அளவையும் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது, தமிழகத்திற்கு 10 சதவீதம் அளவிற்குக் கிடைக்க வேண்டியிருந்தும், கிடைத்திருப்பது 4 சதவீதம்தான். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கணக்கிட்டுப் பார்த்தாலும் 10 சதவீதம் கிடைக்க வேண்டும்–ஆனால் 7600 கோடியில் நமக்குக் கிடைந்திருப்பது 4 சதவீத அளவுக்குத்தான். 10–10 சதவீதம்

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் கிடைக்கவேண்டும் என்று வைத்துக்கொண்டால், கிடைத்திருப்பது 4–4 சதவிதங்கள்தான். மேற்கொண்டு 6–6 சதவிதம் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை. எனவே அதிகமாக வற்புறுத்தித் திட்டத்தின் அடிப்படையில் தொகை வாங்கப்படுமானால், அப்படி வாங்குவதற்கான வழிவகைகளைப் பார்க்குமானால், தமிழகம் மேலும் சிறக்கும். தமிழகத்தில் மேலும் தொழில்கள் பெருகும். மேலும் திட்டங்கள் நிறைவேற்றப்படும், வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவுக்குக் குறையும், மக்கள் வாழ்க்கைத்தரம் ஓரளவுக்கு வளர வழிவகை ஏற்படக்கூடும். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும், தமிழகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஓரளவுக்கு எடுத்து உணர்த்த ஆசைப்படுகிறேன்.

''தென் நாடு ஒன்றும் தேயவில்லை, வட நாடு ஒன்றும் வாழவில்லை, இரண்டும் சமமான அளவில் தான் இருக்கின்றன'' என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கிறார்கள். நான் ஒரு குறிப்பை எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன். ''நேஷனல் கவுன்சில் ஆஃப் அப்ளைட் எக்கனாமிக் ரிஸர்ச்'' என்று ஆராய்ச்சி நிறுவனம் டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்களை டைரக்டர் ஜெனரலாகக் கொண்டு இயங்குகிறது. அது ஒரு அறிக்கையை 1960–ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. 7.61960–இல் அந்த அறிக்கையை இங்கே சென்னை அமைச்சர்களை உடன் வைத்துக்கொண்டு டாக்டர் பி.எஸ். லோகநாதன் அவர்கள் வெளியிட்டார்கள். அதில் குறிப்பிடப்பட்டிருக்கிற ஒரு கருத்தை அமைச்சர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"The development pattern in future will necessarily be doninated by the growth of industries as agriculture has more or less already played its part. A total investment of Rs. 2,000 crores of development finance would be needed during the next ten years. Madras should include a vigorous programme to develop large scale industries. In the matter of large scale industries the position in Madras compared unfavourably with either Bombay or West Bengal."

டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் மிகத் தெளிவோடு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தொழில் வளர்ச்சி அடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது பம்பாயோ அல்லது மேற்கு வங்காளமோ வளர்த்திருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழகம் மிக மிகப் பின் தங்கிய நிலையில் இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்து டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் எடுத்துத் தெரிவித் திருக்கிறார்கள் என்பதைத்தான் எடுத்துச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் நியாயம் வழங்கப்படவில்லை என்ற கருத்தை எடுத்து வைக்கவும், ஆகவே தமிழகத்திற்குப் பெறவேண்டிய தொகையைப் பெறுவதற்கு அமைச்சர்களும், மற்றவர்களும் முயல வேண்டும் என்று தெரிவிப்பதற்காகவும் இதை நான் தெளிவுபட எடுத்து வைக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விலைவாசிகள் குறைக்கப்பட வேண்டும் என்ற அத்தகைய கருத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தார் வற்புறுத்தி வருகிறார்கள். மற்ற எதிர்க்கட்சியினரும் வற்புறுத்தி வருகிறார்கள். ஆனால் கட்சியை சேர்ந்தவர்களே

எடுத்துக் கூறினார்கள், கவர்னர் பெருமான் அளித்திருக்கிற உரை இருக்கிற நிலைமையை எடுத்து விளக்கும் தன்மையில் இருக்கிறதே தவிர கொள்கைகளை விளக்கும் முறையில் அமையவில்லை. அப்படிக் கொள்கைகளை விளக்கும் முறையில் அமைந்திருக்குமானால், அடுத்த இரண்டு தினங்களுக்குப் பிறகு நிறைவேறவிருக்கிற நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதில் இப்போது இங்கே வழங்கப்படுகிற கருத்துக்கள் ஓரளவுக்கு உதவி செய்வனவாக அமையக்கூடும். அறிக்கையில் குறிப்பிடும்போது ''புதிய அரசாங்கத்தின் கொள்கைகள், வேலை திட்டங்கள் பற்றி நிதி அமைச்சர் தமது நிதிநிலை அறிக்கை உரையில் விளக்கமாகக் கூறுவார்'' என்று சொல்லி, இப்போது எந்த நிலைமைகளைப்பற்றி, புதிய திட்டங்களைப் பற்றியும், தங்கள் கொள்கைகளைப் பற்றியும் விளக்காமல், பின்னால் விளக்குவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கவர்னர் உரை கொள்கை விளக்கத்திற்குப் பயன்படுத்தும் வகையில் அமைத்திருந்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறுகிற கருத்துக்களை வைத்துக்கொண்டு, பின்னால் தயாரிக்கப்படவிருக்கிற நிதிநிலை அறிக்கையில் அத்தகைய திட்டங்களையும், கருத்துக்களையும் சேர்த்துக்கொள்ள வழிவகை பிறக்கக்கூடும்.

இந்த உரையில் நாட்டு மக்களும் மற்றவர்களும் எதிர்பார்த்தது என்னவென்றால் தங்களது உடனடியான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதாகும். நாட்டு மக்களுக்கு இருக்கிற உடனடியான பிரச்சினை தங்களால் தாங்க முடியாது இருக்கிற விலைவாசி உயர்வு, அத்தகைய விலைவாசி உயர்வை குறைக்க வழிவகை ஏற்படும் என்று எதிர்பார்த்தார்கள். இன்றைக்குள்ள திட்டங்களில் குடிதண்ணீர்த் திட்டங்கள் மிகவும் நல்ல முறையில் நிறைவேற்றப்படுவதற்கு வழிவகை காணப்பட வேண்டும் என்று சென்னை போன்ற நகரங்களிலும், வேறு பல சிற்றூர், பேரூர்களிலும் இத்தகைய பிரச்சினை வெகுவாக காணப்படுவதால், மக்கள் எதிர்பார்த்தார்கள். அதோடு வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் மேலும் வளருகிற நிலைமை இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழிவகை காண்பதற்கும் இந்த உரையிலே இடம் இருக்கும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்கள். இந்த மூன்று கருத்துக்களுக்கும் இடம் இல்லாத வகையில், இருக்கிற நிலைமையை எடுத்துக்காட்டும் தன்மையில் உரை விளங்குகிறது. விலைவாசிக் கட்டுப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்களும் சுட்டிக்காட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் அதை மிகவும் வற்புறுத்தி வந்திருக்கிறார். விலைவாசி குறைக்கவேண்டிய அவசியத்தை அவ்வளவு உறுப்பினர்களும் மிகத் தெளிவுபட எடுத்துக்கூறியிருக்கிறார்கள். விலைவாசிகளைக் குறைக்க வேண்டிய வழிவகைகளைக் காண வேண்டியவர்களாக நாம் இருக்கிறேம். அதை அமைச்சர்கள் ஏற்று நடைமுறையில் கொண்டுவர கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். தாங்க முடியாத அளவுக்கு விலைவாசிகள் ஏரி இருக்கிற தன்மையை பார்க்கும்போது, விலைவாசி உயர்வுக்கான காரணங்களை ஆராய்ந்தால், அது நீக்கப்படுவதற்கான வழிவகைகளைக் காணும் நிலைமைகள் எற்பட முடியும்.

தேவை அதிகமாகவும், உற்பத்தி குறைவாகவும் இருக்கும் அத்தகைய ஒரு நிலைமை காரணமாக இருக்கக்கூடும் அல்லது உற்பத்தியில் குறிப்பிட்ட ஒரு

பகுதியை விலைக்கு வாங்கி, பின்னர் அதை அதிக விலைக்கு விற்பதற்காகப் பதுக்கி வைத்திருப்பது விலைவாசி ஏறுவதற்குக் காரணமாக இருக்கலாம். அல்லது வாய்தா போச் சந்தை நடப்பதன் மூலமாக விலைவாசி ஆங்காங்கே ஏறுவதற்குக் காரணமாக இருக்கக்கூடும். இந்த வாய்தா போச் சந்தையானது பம்பாயிலிருந்து ஆரம்பித்து அகில இந்தியாவையும் கட்டுப்படுத்தும் அளவுக்கு நடைபெறுகிறது. ஏற்றுமதி, இறக்குமதி கோட்டாக்களில் செய்யப்படும் மாறுதல்கள் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணங்களாக அமைந்து விடுகின்றன. போக்குவரத்து வசதியின்மையும் ஆங்காங்கே விலைவாசி ஏற்றத்திற்கு காரணமாக அமைந்துவிடுகிறது. பண வீக்கம் மிக முக்கிய காரணமாக அமைந்துவிடுகிறது என்று பொருளாதார நிபுணர்கள் எடுத்துரைக்கின்றனர். பல விலைகள் அகில இந்திய ரீதியில் நிர்ணயிக்கப்படுவதன் காரணமாகவும், அத்தகைய தன்மை ஒரு சிலரிடம் அமைந்து போகின்றதன் காரணமாகவும், அவர்கள் அகில இந்திய ரீதியில் ஒரு விலையை நிர்ணயித்துவிடுவதன் காரணமாகவும் நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு பொருள்களின் விலைகள் அமையாமல், விலைவாசி ஏற்றத்திற்கு காரணமாக அவைகள் அமைந்துவிடுகின்றன. ஆகவே, இந்த அளவிலே பார்க்கின்றபோது மாபெரும் உற்பத்தியானாலும் ஒரு சிலருக்கே அந்த உற்பத்தி அனைத்தும் ஏகபோக கோட்டாவாகி விடுகின்றது. அதன் காரணமாக இரும்பை உற்பத்தி செய்கின்ற டாட்டா கம்பெனியார் தாங்கள் நிர்ணயம் செய்கின்ற அளவையே ஒரு அளவாக வைத்துக்கொண்டு அரசியல் துறையிலே அமைகின்ற அத்தகைய இரும்புக்கும் நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகின்ற காரணத்தினாலே, விலைவாசி ஏறுமுகமாகும் தன்மை அடைந்துவிடுகிறது. இதைப் போக்குவதற்கு வழிவகைகளை அவ்வப்போது பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து தெரிவித்துப் பண வீக்கம் மிக முக்கிய காரணமாக அமைந்துவிடுகிறது என்று பொருளாதார நிபுணர்கள் எடுத்துரைக்கின்றனர். பல விலைகள் மாறுதல்கள் விலைவாசி ஏற்றத்திற்கு காரணங்களாக அமைந்து விடுகின்றன. போக்குவரத்து வசதியின்மையும் ஆங்காங்கே விலைவாசி ஏற்றத்திற்கு காரணங்களாக அமைந்துவிடுகிறது கொண்டு வருகிறார்கள். உற்பத்தியை உண்மையாகவே மிகைப்படுத்தவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். இன்றைக்கு உற்பத்தி பெருகி இருக்கிறது என்ற கணக்கு ஒரு பக்கத்திலே காட்டப்படுகிறது. மற்றொரு பக்கத்திலே விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. உற்பத்தி பெருகியிருப்பது உண்மையானால் விலைவாசி ஓரளவு குறைந்து காணப்படுவது அவசியம். ஆனால் விலைவாசி ஏறிக்கொண்டே போவதன் ‘காரணத்தினாலே ஒன்று உற்பத்தி பெருக்கம் எற்படுகிறது என்று சொல்கிற கணக்கு சரியான கணக்காக இல்லாமல் இருக்க வேண்டும்; அல்லது உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டு, விலையேற்ற காலத்திலே அவைகளை விற்கும்படியான ஒரு சூழ்நிலை இருக்க வேண்டும். உற்பத்திப் பெருக்கம் உண்மையாகவே இருக்குமானால், பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருந்த வேண்டும் என்கிற ஒரு முடிவுக்கு நாம் வா வேண்டியவர்களாகத் தான் இருக்கிறோம்.

ஒரு நியாயமான அளவுக்கு மேல் சரக்குகளை குத்தகை வியாபாரிகள் வைத்திருக்கக் கூடாதென்று ஒரு நிலைமையை ஆட்சியாளர்கள் அப்போது ஏற்படுத்தினால், விலைவாசி குறையலாம். அதற்கான வழிவகைகளை அவர்கள்

செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இன்றியமையாத பண்டங்களுக்கு உச்ச விலை நிர்ணயிப்பதன் மூலமாகவும், அப்படி நிர்ணயிக்கப்படும் உச்சவிலையைத் திறம்பட காப்பாற்றுவதன் மூலமாகவும் விலைவாசியைக் குறைக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அரிசி ஒரு முக்கியமான பண்டமாக, இறக்குமதிக்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்யக்கூடிய அளவிலே நாம் இருக்கிறோம். ஆகவே அரிசியைப் பொறுத்த அளவில் அண்மையிலே ஒரு கமிட்டி ஒன்று இந்திய அரசினரால் அமைக்கப்பட்டு, ஆராய்ந்து, தன் கருத்தை அவர்கள் மக்களிடத்திலே அறிக்கை மூலமாக சமர்ப்பித்திருக்கிறார்கள்.

1957இல் Foodgrains Enquiry Committtee என்ற ஒரு கமிட்டி அசோக் மேத்தா அவர்களுடைய தலைமையில் அமைக்கப்பட்டது. அந்த அசோக் மேத்தா கமிட்டி ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள்.

“It is said categorically that for the next ten years there will be food deficit in India inspite our best efforts to improve the condition and that we must make regular arrangements for the import of foodgrains for the period ” என்று அவர் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார். அதுமட்டுமல்லாமல், அந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

“The buffer stock operation can be a most effective instrument for the stabilization of the prices of foodgrains…. If the Foodgrains Stabilisation Organisation starts operating from a position of strength with sufficient stocks at its disposal and sufficient funds to invest, it will soon find itself in the position of dominant.

அவைத் தலைவர் அவர்களே, மயக்கத்தின் காரணமாக நான் பேசவேண்டிய பேச்சுக்களை பேச முடியாமல் போய்விட்டது. அதற்காக என்னை மன்னிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். புதியதாக இருக்கிற காரணத்தினாலும், பொறுப்பு உணர்ச்சி அதிகமாக இருக்கிற காரணத்தினாலும், அளவுக்கு மீறி நான் கண்விழித்துக் கருத்துக்களைத் திரட்டுகிற பொறுப்பு உணர்ச்சியில் ஈடுபட்ட காரணத்தினாலும் தேவைக்கு மேலே கருத்துக்களை எல்லாம் இரவெல்லாம் திரட்டிய காரணத்தினாலும் கண்கோளாறின் காரணமாகவும் ஏற்பட்டதாக இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். எனவே இந்தக் குறையை பொறுத்தருளுமாறு அவைத்தலைவர் அவர்களையும், மற்ற உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அளவிலே கவர்னர் பேருரையின் மீது கூறப்பட்டிருக்கிற கருத்துக்களை யொட்டி எதிர்காலத்திலே நல்ல பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்தவும், விலைவாசிகளில் உயர்வைக் குறைக்கவும், மக்களுக்கு இன்றியமையாத தேவையாக இருக்கிற குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தரவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு வழிவகைகாணவும், புதிய தொழிற்சாலைகள் இங்கே ஏற்படுத்துவதற்கான முறையில் திட்டங்கள் தீட்டவும், மத்திய சர்க்காரிடம் அதிகமாக வற்புறுத்தி அவர்களிடமிருந்து பெரிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான

நியாயமாக நமக்குக் கிடைக்க வேண்டிய தொகையை மேற்கொண்டு பெறவும், அதற்கான முயற்சியில் ஈடுபடவும், இந்த மாநிலத்தை மேலும் நல்ல நிலைமையில் கொண்டு வருவதற்கான திட்டங்கள் தீட்டவும் அமைச்சர் அவை ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் முதலில் எடுத்துக் கூறியது மாதிரி, இந்த அமைச்சரவை செய்கின்ற எல்லா நல்ல செயல்களுக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம். நாட்டில் குறைபாடுகள் ஏற்படும்பொழுது, குற்றங்கள் ஏற்படுகின்ற நேரத்தில் அவைகளைச் சுட்டிக்காட்டவும், குறைபாடுகளை எடுத்துக் காட்டவும், அவைகளைப் போகவேண்டுமென்று வற்புறுத்தவும் நாங்கள் கடமைப்பாடு உடையவர்களாக இருக்கிறோம். அப்படிக் குற்றங்குறைகளை எடுத்துச் சொல்லுகிற பொழுது, ஆளுங்கட்சியினரும் அமைச்சர்களும் பொறுமையோடு எங்களுக்கு வழிவகை கண்டெடுத்து சொல்லுகிற அளவுக்கு நடந்து கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கவர்னர் பேருரையில் இந்தகைய இன்றியமையாத தேவைகள் வற்புறுத்தப்படாததன் காரணமாக அதை நான் ஆதரிப்பதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கடைசியில் முடிக்கிறபொழுது, ‘நீங்கள் மேற்கொண்ட வேலையில் பற்றும் நம்பிக்கையும் கொண்டு பணியாற்றவும், கண்ணியத்துடனும் ஒழுங்காகவும் செயலாற்றுவதில் புகழ்பெற்ற இந்தச் சட்டமன்றத்தின் நடவடிக்கைகளை சீராக நடத்திச்செல்லவும் இறையருள் துணைப்புரிய வேண்டுகிறேன்’ என்று கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இறை என்றால், ஆண்டவனையும் குறிக்கும், ஆள்பவர்களையும் குறிக்கும். இத்தகைய நிலைமை ஏற்படுவதற்கு இங்கே உட்கார்த்திருக்கிற ஒன்பது இறைவர்களாக இருப்பவர்கள் அருள் புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கருத்துக்களை பொறுத்து, கொள்கையைப் பொறுத்து, ஆளும் கட்சியினர், எதிர்கட்சியினர் என்ற நிலைமை இருந்தாலும் கூட, செயலாற்றுவதைப் பொறுத்து அமைச்சர்கள் அத்தனை பேர்களும் ஒரு கட்சியினராகவும், மற்ற ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் ஒன்றாகச் சேர்ந்த எதிர்க்கட்சியினராகவும் இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் குறைபாடுகளை எடுத்துத் தெரிவிக்கிறார்கள். செயலாற்றுகிற நிலைமையில் எல்லா உறுப்பினர்களும் குறைகளை எடுத்துச் சொல்லவேண்டுமென்றால், அத்தனை பேர்களும் அமைச்சர்களுக்கு எதிர்க்கட்சி ஆளுகிறார்கள். கொள்கையைப் பொறுத்து, கருத்துக்களைப் பொறுத்துதான் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று ஏற்பட வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இந்த மாநிலம் முன்னேற வேண்டும், நல்ல பல நன்மைகள் ஏற்பட வழிவகைகள் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி கேட்டுக்கொண்டு இந்தப் பேருரையைப்பற்றி மகிழ்ச்சி அடைவதற்கோ, பாராட்டுவதற்கோ இல்லை என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

– சட்டமன்றப் பேரவையில் டாக்டர் நாவலர் ஆற்றிய உரை

27.04.1962

❖ ❖ ❖

நினைவில் நாவலர்



தமிழ்க்கடலில்
முத்துக்கள்

Pearls In Tamil Ocean

இரா. நெடுஞ்செழியன்

அன்புத் தம்பி
திரு இரா. செழியனுக்கு
அன்புப் பரிசு!

இரா. நெடுஞ்செழியன்
18.11.91

நாவலர் அவர்களின் கையெழுத்து

அதிரா நெடுஞ்செழியன்

- பேராசிரியர் **இரா.மதிவாணன்**
தொகுப்பாளர், அகரமுதலி

அண்ணா வழியில் அடிவைத்த நாள்முதலாய்
உண்ணாது உறங்காது உழைக்கின்றான் – பண்ணாரும்
வண்டமிழின் வாழ்வுக்கே தன்னை உவந்தளித்த
அண்ணன் நெடுஞ்செழி யன்.

தமிழ்வாழ்ந்தால் நாம்வாழ்வோம் அஃதின்றேல் மேன்மை
அமிழும் எனவுணர்ந்து ஆற்றுகின்றான் தன்பணியை!
தேங்குபுகழ்ச் செந்தமிழ்க்குத் தீங்குவரின் தீய்ந்திடுவான்
ஓங்கு நெடுஞ்செழி யன்

மல்லர் களங்கண்டு உவப்பர்; சிலரறிஞர்
சொல்லாடு மன்றம் நயப்பர்காண் – பல்லவையில்
யாவரையும் சொக்கவைப்பான் எஞ்ஞான்றும் தோலாத
நாவன் நெடுஞ்செழி யன்.

ஆக்கப் பணியே கடமை; தன் உள்ள த்தில்
தேக்கும் வலிமையே கண்ணியம் – தூக்கமின்றிக்
கட்சியைக் காத்தல்,கட் டுப்பா டெனுங்கொள்கை
உச்சி நெடுஞ்செழி யன்.

நடமாடும் நூலகமென் றெல்லாரும் போற்ற
திடமான கட்டோடு பல்லாண்டு வாழ்க !
எதிர்த்திடுவார் ஏசிடுவார் எள்ளிடுவார் யார்க்கும்
அதிரா நெடுஞ்செழி யன்.

நன்றி : டாக்டர் நாவலர் மணிவிழா மலர் – 1980

❖ ❖ ❖

துறவறப் புத்தன்போல் தொண்டுகள் புரிந்தவர்

- கவிஞர் **பண்ணுருட்டி பரமசிவன்** அவர்கள்

வாழையின் அடியில் நின்று
வளர்கின்ற கன்றைப் போல
வேழம்போல் நிமிர்ந்து நின்று
விளங்கிய பெரியா ருக்குத்
தோழமைச் சீடன்; அந்தத்
தூங்காத தலைவன் மீதில்
ஆழமாய் அன்பு வைத்த
அழகிய ஒழுக்கச் சீலன்.

அண்ணாவின் வலக்கை யாக
அருகினில் இருந்த தம்பி!
கன்னுக்குள் மணியைப் போலக்
காஞ்சியின் தலைவன் நெஞ்சில்
எண்ணமாய் இருந்து வந்த
இனியவன்: தம்பிக் கெல்லாம்
தொண்டாற்றிப் பெருமை தன்னைத்
தொடுத்திட்ட மூத்த தம்பி!
படுத்துள்ள தரையின் மீது
படுத்துள்ள நதியைப் போல,
குடிமக்கள் நெஞ்சின் மீது
குடிகொண்ட செல்வன்: நல்ல
கொடிகட்டி மக்கள் நெஞ்சைக்
கொள்ளைகொண் டாளு கின்ற

முடிசூடா மன்ன னுக்கு
முன்நிற்கும் படைத்த லைவன்!

மண்ணிலே பிறந்த மக்கள்
மண்ணுக்கே உழைக்க, அந்த
மண்ணிலே உழைக்கும் மக்கள்
வயிற்றிலே மண்ணைப் போடும்
சண்டாளர் வீழ, அன்னார்
சதியினை வீழ்த்த,அம்புத்
தண்டுபோல் பாய்ந்து வந்த
தமிழக அசோக மன்னன்!

"நடமாடும் கல்விச் சாலை,
நாவன்மைச் சோலை" என்று
திடமாகக் கற்ற அண்ணா
தீட்டிய புகழோன்: தூங்கிக்
கிடந்திட்ட மக்கள் காதில்
கிண்டுதேன் பேச்சு வார்த்தோன்!
விடியாத எளியோர் வாழ்வை
விடிந்திடச் செய்த நல்லோன்!

அறியாமை இருளைப் போக்க
அறிவொளி விளக்கு வைத்த
துறவறப் புத்தன் போலும்
தொண்டுகள் புரிந்தோன்! மக்கள்
பிறப்பிலே சாதி என்று
பிரிப்போரை எதிர்த்தோன்; தெய்வக்

குறள்போல் வேறு பாடு
கொள்ளாத குணமு டையோன்!

நன்றி: டாக்டர் நாவலர்
மணிவிழா மலர் – 1980

❖ ❖ ❖

நற்றமிழ் போல் வாழ்க நயந்து

- திருமுருக **கிருபானந்தவாரியார்** அவர்கள்

ஏடுபல போற்றும் இனிய குணமாரும்
நாடுமிக ஏத்தும்சீர் நாவலர் – பீடுபெற
கற்றவர்கள் நெஞ்சில் கனியமுதாய்த் தித்தித்து
நற்றமிழ்போல் வாழ்க நயந்து!

நன்றி: நாடு போற்றும் நாவலர் – 1975

நீண்டு செழித்த நெடுந்தகை

- கவியோகி **சுத்தானந்த பாரதியார்**

நீண்டு செழித்தவனார்? –
நேயருக் கினியவனார்?
தூண்டு சுடர்போலே
சொக்கும் சொற்கோயார்?

அண்ணாவிற் கிணையாம்
அன்புத் தங்கமதார்?
பண்ணார் செந்தமிழின்
பாயும் அருவியதார்?

எவரும் நோகாமல்
இனிய புன்னகை கோத்து
கவரும் நாவலன்யார்
காட்சிக் கெளியன்யார்?

முன்னேற்றக் கழகம்
முரசொலித் தாண்டிடவே
தன்னை வழங்கியதார்?
தளரா வீரனிங்கார்?

கல்விக் கடலோன்யார்?
கவினார் கலைவாணர்
செல்வத் தோழனிங்கார்? –
சீரிய நெடுஞ்செழியன்

நெடுஞ்செழியன் என்றால்
நேர்மையெனப் பொருளாம்
நெடுஞ்செழியன் என்றால்
நிகரில் புலமை யென்போம்

உள்ளத்தைக் கவரும்
உலகம் வேட்பவரும்
வெள்ளச் சொல்லுடையான்
வினைத்திட்பம் உடையான்

வாழிய நெடுஞ்செழியன்
வண்டமிழர் தொண்டன்
வாழிய தமிழரசே
வாழிய தமிழ்மொழியே!

நன்றி: நாடு போற்றும் நாவலர் – 1975

நாடாண்ட நால்வரின் ஓர் உருவம் நாவலர்

- தமிழ்மொழிக்காவலர் திரு. **கீ.இராமலிங்கனார்** அவர்கள்

நாவலர் டாக்டர் மாண்புமிகு இரா.நெடுஞ்செழியனார் அவர்கள், பிறப்பால் சோழர், பெயரால் பாண்டியர், தோற்றத்தால் சேரர்; அரியணை சேர் இடத்தால் பல்லவர்.

பழங்காலச் சோழமன்னர்கள், பண்பும்–வளமும்–செங்கோல் கோணாச் சிறப்பும்–சீர்மையும் படைத்தவர்கள். பிற்காலச் சோழ அரசர்கள், அருங்கலையுணர்வும், ஆளுந்திறனும் பூண்டவர்கள்.

பாண்டியன் நெடுஞ்செழியன் நேர்மைக்கும், நீதிக்கும், நிறைமதிக்கும், வீரத்திற்கும் தீரத்திற்கும் பெயர் போனவன்.

சேரவேந்தர்கள், செந்தமிழ்ப் பற்றை கொண்ட செம்மல்கள். செரு பல வென்று வாகைசூடியவர்கள் நாட்டிற்கு வளத்தையும், வலிவையும், பொலிவையும் சேர்த்தவர்கள்.

பல்லவ மன்னர்கள், மாமல்லபுரத்தில் சிற்பக்கலைச் சிறப்பினை நிலைநாட்டியவர்கள். கவின் கலைகளைப் போற்றியவர்கள்.

இவ்வாறாகச் சோழ–பாண்டிய–சேர–பல்லவ நாடாண்ட மரபினர் நால்வரும், ஒரு உருவாய் இன்று இங்கு உற்றாற் போல, இலங்குகின்றவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள்!

நன்றி : டாக்டர் நாவலர் பவள விழா மலர்
11.07.1995

நற்றொண்டு தொடர்க

- கவிஞர் **ஆனந்தம்** அவர்கள்

நாவால்மைப் பேனாவால் நாட்டி லுள்ள
நலிவுகளைப் பேச்சாலும் எழுத்தி னாலும்
பூவாமல் காய்க்கின்ற அத்தி போலப்
புரியவைக்க, மேடைகளில் இதழ்கள் தம்மில்
தூவாத கருத்தில்லை என்னு மாறு
தொடர்பணியை ஆற்றுதற்குப் படித்த வர்கள் –
மூவாத செந்தமிழின் முறைகள் கற்றோர் –
முன்வராத காலத்தே இவர்தான் வந்தார்!

படிப்பதெல்லாம் அலுவலுக்குச் செல்வ தற்கும்
பணம்பதவி தேடவுமே என்றில் லாமல்
துடிப்புடனே பகுத்தறிவுக் கருத்தைச் சொல்லித்
துவளாது மறுப்புகட்குக் கலங்கி டாமல்
இடிப்பாரே; வெடிகுண்டாய் முழங்கு வாரே;
இளந்தாடி நெடுஞ்செழியன் அந்த நாளில்
வெடிப்பாரே கழகத்து மேடை தோறும்;
வினாவெழுப்பி ஐயமற விடையும் சொல்வார்!

அய்யாவின் தொண்டரானார்; அண்ணா வுக்கும்
அணுக்கத்து நண்பரானார்! இளவ லோடும்
மெய்யான தன்மான இயக்கம் ஓங்க
மேன்மையுடன் கொள்கையிலே உறுதி கொண்டு
கொய்யாவின் கனியனைய கவிஞர் பாட்டைக்
குறிக்கோளாய்ச் சொற்பொழிவில் இணைத்துக் கூறிப்
பொய்யான வைதிகரின் புராணத் தீங்கைப்
புரட்டுகளை உடைத்திடுவார் இனிமை யாக!

இழிந்தோடும் அருவியென அறிவு வெள்ளம்
இருகரையும் புரண்டோடும்; எழுச்சி ஆறு
வழிந்தோடும் தேனாக; இலக்கி யத்தின்
வற்றாத சுவையூறும் கருத்துச் செல்வம்!
அழிந்திடுமே தமிழ்இந்தி நுழைவால் என்றே
அயராது போராடும் துணிச்சல் உள்ளம்;
கழிந்ததிவர் இளமையெலாம் கழகத் துக்கே;
கண்மணியாய் நாட்டவர்கள் உயர்த்தி விட்டார்!

"தம்பீவா தலைமையேற்க வா" யென் றண்ணா
தகைமையுடன் திருச்சியிலே அழைத்து வந்து
நம்பிக்கை மிகுந்ததனால் கழகத் துக்கு
நல்லபொதுச் செயலாளர் ஆக்கி வைத்தார்!
தெம்புடனே தேர்தலிலே ஈடு பட்டுத்
திருப்தியுடன் பதினைவர் சட்ட மன்றில்
அம்புகளாய்ப் பாய்ந்து – சென்றார்! ஆட்சி பீடம்
அமர்வதற்கும் வழிசமைத்தார் அன்றே அன்னார்!

போற்றுகின்ற தமிழாட்சி பூத்த நாளில்
பூரிக்கும் ஏழைக்கு வாழ்வு நல்க
மாற்றாரும் மதிக்கின்ற அண்ணா வோடும்
மாப்புகழ்சேர் நல்லிளவல் கலைஞ ரோடும்
ஏற்றமுடன் இணைந்திருக்கும் நாவ லர்க்கே
இணையான பண்பாளர் யாரும் உண்டோ?
ஆற்றலுடன் "நற்றொண்டு தொடர்க" என்றே
ஆவலுடன் வாழ்த்துகின்றேன்; நெடுநாள் வாழ்க!

நன்றி: நாடு போற்றும் நாவலர் – 1975

❖ ❖ ❖

நாவலருக்கு முத்தமிழே பொன்முடி

- கவிஞர் **கோ கோவை இளஞ்சேரன்** அவர்கள்

பாவேந்தர் வைரமணிப்
பாடல்களே வெண்குடையா
மூவேந்தர் முடிவளர்த்த
முத்தமிழே பொன்முடியா
நாஏந்தும் நற்குறளே
நடை மறையா, பகுத்தறிவுக்
கோவேந்தர் பெரியார்தம்
கொள்கையதே வெல்கொடியா
மாளந்தல் அண்ணாதம்
மாண்பேசெங் கோலாய்க்கொள்
நாவலவ! நெடுஞ்செழிய!
நடப்பமைச்சுச் செம்மால்கேள்:

ஆவலுடன் இளமையதில்
அருந்தாடி தான்வளர்த்துச்
"சேவலுக்குத் தாடையுண்டு :
செழுந்தோகை ஆண்மயிற்கே:
மேவுதந்தம் ஆண்யானைக்கு
எனச்சான்று தான்காட்டி
நாவலன்தான் எனுஞ்சிறப்பை
நயத்தோடே கொண்டனைகாண் !

நன்றி: டாக்டர் நாவலர்
மணிவிழா மலர் – 1980

❖ ❖ ❖

நாவலர் ஒரு புத்தகம்

- புலவர் கல்லை **ஆ.துரை** அவர்கள்

வாழ்வெலாம் மூடக் கொள்கை,
வழியெலாம் தீய செய்கை,
தாழ்வெலாம் தாமே ஏற்றுத்
தமிழர்கள் தரமி ழந்து
பாழ்பட்டுக் கிடந்த நாளில்
பாங்குடன் காஞ்சி அண்ணன்
ஏழ்கடல் போல வந்தார்!
எழுந்தது தமிழர் சேனை!

தென்னகம் எங்கும் மீண்டும்
தென்னவர் விழித்தெ ழுந்து
பொன்னென மொழியைப் பண்பைப்
போற்றிட லானார் ! அந்த

மன்னவன் அண்ணா வின்கீழ்
மாண்புறு தமிழர் எல்லாம்
மின்னலாய் ஆர்த்தெ ழுந்தே
மேன்மையை வளர்க்க லானார்!

நடிப்பிலே தமிழும், நித்தம்
நாவிலே தமிழும், எங்கும்
படிப்பிலே தமிழும், பார்க்கும்
பார்வையில் தமிழும் ஆக,
பிடிப்பிலாது இருந்த நாட்டில்
பழம்பெரும் கீர்த்தி யெல்லாம்
துடிப்புடன் எழுச்சி யுற்றுத்
துலங்கிட்ட அந்த நாளில்,

இளந்தாடி வேந்த ரான
இராநெடுஞ் செழிய னாரோ,
வளந்தேடி அலைந்த இந்த
வளர்தமிழ் நாடு வாழ,
களந்தேடி வந்தார்! தூய
கருத்துப்போர் நிகழ்த்த லானார்!
உளந்தனில் மலர்ச்சி காண
ஊரெலாம் முழக்க மிட்டார்!

தென்றலும் புயலும் சேர்ந்தே
தினந்தினம் மேடை யேறி,
அன்றன்றும் முழக்க மிட்ட
அருங்காட்சி அவரின் பேச்சு!
என்றென்றும் ஈடே இல்லா
ஏற்றங்கொள் காட்சி! மற்றும்
குன்றென்று தோன்றும் தோள்கள்!
குறிக்கோளைக் கொண்ட நெஞ்சம்!

பெரியாரின் கருத்துக் கேற்ற
பெருமித எண்ணம்; அண்ணா
சரியாகப் புடத்தில் வைத்த
செந்தமிழ்த் தங்கம்! ஏய்க்கத்
தெரியாத வெள்ளைச் சிந்தை!
தெளிவான வாழ்க்கைப் பாதை!
புரியாத தென்ன ? நீண்ட
புத்தகம் இவரே ஆவார்!

'விசாலமாய்' நெஞ்சம் கண்டார்!
விளங்கிடும் 'மதியை'ப் பெற்றார்.
வசைமொழிக்கு இடமே இல்லா
வளர்ந்திடும் 'மன்றம்' கொண்டார்;
அசைபல சேர்ந்தே நல்ல
அருங்கவி ஆவ தேபோல்,
அசலென வாழு கின்றார்!
அறுபதைத் தாண்டு கின்றார்!

அறுபதாம் ஆண்டு காணும்
அழகிளம் நாவ லர்க்குத்
திருவளர் செல்வம் வந்து
தேடியே வாழ்த்து நல்கும் !
ஒருபெருங் காட்சி போல
உயர்நிதி அமைச்ச ராக
இருப்பதே அருமை: ஆகா:
இந்நிலை யார்க்கு வாய்க்கும் ?

வானிலே மீன்கள் போல
வாவியில் பூக்கள் போல
தேனிலே ஈக்கள் போல
தமிழிலே கவிதை போல
ஊனிலே கலந்த எங்கள்
உன்னத தமிழே போல
நானிலம் போற்ற எங்கள்
நாவலர் நீடு வாழ்க!

நன்றி: டாக்டர் நாவலர்
மணிவிழா மலர் 1980

❖ ❖ ❖

நாவலர்

- பேராசிரியர் **மு.நாகநாதன்** அவர்கள்



“தென் திசையைப் பார்க்கின்றேன்
என் உள்ளம் எல்லாம் பூரிக்குதடா”

– என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

நாவலர் நூற்றாண்டு நிறைவு விழாவை எண்ணி, எண்ணி என் உள்ளம் உணர்வால், மகிழ்வால் பூரிக்கிறதே! காரணம் பள்ளிப் பருவத்திலிருந்தே நான் போற்றிய திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர். என் மீது பேரன்பு பொழிந்தவர். பெரியார் கொள்கைகளை இம்மி அளவும் விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்த கொள்கை சான்றோர்.

நான் வசித்த சிந்தாதிரிப்பேட்டை திராவிட இயக்கத்தின் கோட்டை. 1962ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்பு எழும்பூர் தொகுதியிலிருந்த சிந்தாதிரிப்பேட்டை பகுதிகள், தொகுதி சீரமைப்பால் திருவல்லிக்கேணி தொகுதியோடு இணைந்தன.

பச்சையப்பன் கல்லூரியில் பட்டப் படிப்பில் சேர்ந்தவுடன் அண்ணா நற்பணி மன்றம் என்ற அமைப்பைத் தொடங்கி ஏழை, எளிய குடும்ப பள்ளி மாணவர்களுக்கு இலவசக் கல்விப் பயிற்சியை மாலை நேரத்தில் வழங்கினேன்.

பொங்கல் விழாவில் கலந்து கொண்டு அறிஞர் அண்ணாவின் படத்தைத் திறந்து சிறப்புரை ஆற்றுமாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாவலரை அழைத்தேன். வந்தார். அரியதொரு சொற்பொழிவை ஆற்றினார். படிப்பில் கவனம் செலுத்துமாறு அறிவுரை வழங்கினார்.

1964இல் தொடங்கிய நாவலரின் தொடர்பு அவர் மறைந்த 2000ஆம் ஆண்டு வரை அன்பின் பிணைப்பால், அவரது அரவணைப்பால் நீடித்தது. 1970ஆம் ஆண்டு பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டப்படிப்பு முடிந்தவுடன் நாவலரைச் சந்தித்து என் விருப்பத்தைத் தெரிவித்தேன்.

ஒன்றிய, மாநில அரசுகள் நடத்தும் தேர்வாணைய எழுத்துத் தேர்வுகளை எழுதி உயர்அலுவலர் பொறுப்பில் சேரலாமே என்றார் நாவலர். அரசுக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர விருப்பம் எனத் தெரிவித்தேன். அப்போதெல்லாம் அரசுக் கல்லூரிகளில் தற்காலிகத் துணைப் பேராசிரியர் பணியில் நியமிக்கும் முறை கல்வி துறையிடமே இருந்தது. என் விருப்பம் அறிந்த மறுநாளே என்னைத் துணைப் பேராசிரியராக நியமிக்கும்படி கேட்டுள்ளார்.

அப்போது கல்லூரி இணை இயக்குநராகப் பேராசிரியர் சூர்ய நாராயணன் என்பவர் பொறுப்பு வகித்தார். முதல்வர் அலுவலகத்தில் இருந்து சிலருக்குப் பரிந்துரை வழங்கப்பட்டதால் எனக்கு உடனடியாகப் பணி வழங்கப்படவில்லை. இடையில் நாவலர் ஒரு மாதம் அமெரிக்கா சென்று விட்டார்.

அமெரிக்கப் பயணம் முடித்துத் திரும்பும் போது, கழகத்தின் சார்பில் வரவேற்பு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அளிக்கப்பட்டது. நான் சென்று மாலை அணிவித்து வரவேற்றேன். என்னைப் பார்த்து பணியில் சேர்ந்துவிட்டீர்களா? என்றார். இல்லை என்றேன்.

இதை மனதில் கொண்டு மறுநாள் தலைமைச் செயலகத்திலிருந்து இணை இயக்குநரிடம், இயல்புக்கு மாறாகக் கடுமையாகப் பேசியுள்ளார். எனக்கு இது தெரியாது. இணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து நேரில் வரும்படி அழைப்பு வந்தது.

சூரிய நாராயணன் பெரியார் பற்றாளர். நேர்மையானவர். உள்ளே அழைத்து, சென்னையில் காலி இடங்கள் இல்லாததால் சேலம் அரசுக் கலைக் கல்லூரியில் பொருளாதாரத் துணைப் பேராசிரியராக நியமனம் செய்துள்ளேன். உடனடியாகப் பணியில் சேரவும் எனக் கூறிவிட்டு, நாவலர் உங்களுக்கு உறவினரா? என சூரிய நாராயணன் கேட்டார்.

இப்போது உள்ள அறிவு அளித்த பக்குவம் எனக்கு அப்போது கிடையாது. துடுக்காகப் பதில் அளித்து விடுவேன். "கல்வி அமைச்சர் நாவலர் அறிஞர் அண்ணாவின் முதல் தம்பி, நான் கடைகோடி தம்பி" எனப் பதில் அளித்துவிட்டேன்.

மறுநாள் நாவலரைச் சந்தித்து நன்றி கூறச் சென்றேன்.

அரசு உயர் அலுவலரிடம் என்னிடம் பேசுவது போல உரிமை எடுத்துக் கொண்டு பேசக் கூடாது என்றார்.

நாவலர் பற்றிப் பல நினைவுகளை எடுத்து எழுத பல பக்கங்கள் தேவை. சில முதன்மையான கருத்துக்களை மட்டுமே மொழிகிறேன். எனது திருமண நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே வெளி மாநில பயணத்தை விரைவில் முடித்துக் கொண்டார். என் மணநாள் 1975 ஏப்ரல் 24 தேதியில் எனது தந்தையின் விருப்பத்திற்கு ஏற்ப முடிவு செய்யப்பட்டது. முதல்வர் கலைஞரிடம் ஒப்புதல் பெற்று விட்டேன். திருமணத்திற்கு வந்தார். மனம் திறந்து பாராட்டினார்.

நாவலர் பொன்விழாவைச் சிறப்பாக சிந்தாதிரிப்பேட்டையில் 1970ஆம் ஆண்டில் கொண்டாடி மகிழ்ந்தோம்.

நாவலர் தி.மு.கவை விட்டு விலகிய போதும் அவரின் 65, 70, 75ஆவது பிறந்த நாட்களில் நேரில் சென்று எனது அன்பினைத் தெரியப்படுத்தி உள்ளேன். கலைஞர் இரு முறை நாவலரைச் சந்தித்து அவரின் கருத்தினை அறிந்து வருமாறு அனுப்பியுள்ளார்.

1980 களில் ஒரிசாவின் தலைவர் பிஜு பட்நாயக் தி.மு.க., அ.தி.மு.க. இணைய வேண்டும் என்று முயன்றார். கலைஞர் – எம்.ஜி.ஆர். சந்திப்பு அரசின் விருந்தினர் இல்லத்தில் பட்நாயக் முன்னிலையில் நடைபெற்றது. அப்போது கலைஞர் நாவலரைச் சந்தித்து அவரின் கருத்தினைக் கேட்டு வர என்னை அனுப்பினார்.

மறு நாள் காலை 6 மணி அளவில் நாவலர் இல்லம் சென்றேன். கலைஞர் கூறிய கருத்துக்களை நாவலரிடம் சொன்னேன். நாவலர் இந்த இணைப்பு பல குழப்பங்களை ஏற்படுத்தும். இரு கட்சிகள் இருப்பதே நல்லது. இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் இயங்கி வரவில்லையா ? இதுவரை எம்.ஜி.ஆர். என்னிடம் கலந்து ஆலோசிக்கவில்லை. கலைஞரிடம் இதைத் தனியாகச் சந்தித்துக் குறிப்பிட்டு விடுங்கள் என்றார் நாவலர். கலைஞர், நாவலர் சரியாகத்தான் சொல்லியுள்ளார் என்றார். இரு கட்சிகள் இணையவில்லை. காலம் சரியான பதிலை அளித்துள்ளது. “தேசிய”க் கட்சிகள் தமிழ் நாட்டில் வளராமல் போனதற்கு இதுவும் ஒரு காரணம் தானே.

2000ஆம் ஆண்டில் கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை திறப்பு விழாவிற்கு நாவலர் கலந்து கொண்டு உரையாற்ற வேண்டும் என முதல்வர் கலைஞர் பெரிதும் விரும்பினார். என்னை நாவலரைச் சந்தித்து விழாவில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள்விடுவிக்குமாறு கேட்டார். நான் செல்வதற்கு முன்பே தொலைபேசியில் தொடர்பு கொண்டு கலைஞர் நாவலரிடம் பேசினார். நான் மறுநாள் சென்று கலைஞரின் விருப்பத்தைத் தெரிவித்தேன். அப்போது நாவலர் திமுகவிலிருந்து விலகியது ஒரு விபத்து போன்றது. மீண்டும் தி.மு.கவிற்கு வருவது சரியாக அமையாது என்றார் நாவலர்.

எனது மாமனார் க.ரா.ஜமத்கனி தமிழில் மொழிபெயர்த்த கார்ல் மார்க்ஸ் மூலதனம், மிகைமதிப்பு நூல்கள் 1998ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன.

எனது மாணவர் பேராசிரியர்.சிவராஜிடம் 6 தொகுதிகளை நாவலரிடம் நேரில் சென்று கொடுக்கச் சொன்னேன். எனது மைத்துனர் மகன் திருமணம் வெளியூரில் நடைபெற்றதால் நான் நேரில் செல்லவில்லை. சிவராஜிடம் நூல்களைப் பெற்றுக் கொண்ட நாவலர் சிறிது நேரம் உட்காரச் சொல்லிவிட்டு, ஒரு பாராட்டு மடலை அனுப்பிவைத்தார். மறுநாள் கலைஞரிடம் காண்பித்தேன். அடுத்த பதிப்பில் நாவலர் மடலை வெளியிடு என்றார். நாவலர் மறைந்த போது, ஒன்றிய அரசின் தேர்வாணையப் பணிக்காகப் புதுடெல்லியில் தங்கியிருந்தேன். முதல் நாள் கலைஞர் சென்ற விமானத்தில் தான் நானும் பயணம் செய்தேன். புதுடெல்லியில் இருந்த கலைஞருக்கு இந்தச் செய்தி எட்டியவுடன் திரு.கோ.சண்முகநாதனிடம் நாகநாதனிடம் தெரியப்படுத்தக் கூறியுள்ளார். இந்தச் செய்தி எனக்குக் கிடைக்காவிட்டால் நாவலர் இல்லம் சென்று எனது இறுதி அஞ்சலியைச் செலுத்தியிருக்க முடியாது.

இன்றைய கழகத் தலைவர் தளபதி ஸ்டாலின் நாவலருக்கு நூற்றாண்டு நிறைவு விழா எடுத்து இருப்பது அவரின் பெருந்தகைமையைப் பறைசாற்றுகிறது. பெரியாரின் சீடர்கள் அண்ணாவின் தம்பிகள் கடந்த காலங்களில் பிரிந்து இருந்தாலும் நாங்கள் கொள்கைவழி திராவிட வேர்கள் தான், விழுதுகள் தான் என்பதை நாட்டிற்கு எடுத்துக்காட்டி அறிஞர் அண்ணா வழியில் தனது தலைமைப் பண்பினைத் தலைவர் ஸ்டாலின் மெய்ப்பித்துள்ளார்.

நாவலர் புகழ் ஓங்குக!! திராவிட இயக்கம் வெல்க!!!

❖ ❖ ❖

அந்த நாள் இந்த நாள்!

- டாக்டர் **நாவலர்** அவர்கள்



இன்று 1995ஆவது ஆண்டு புத்தாண்டு, புதுநாள் பிறந்து இருக்கிறது. எட்டாவது உலகத் தமிழ் மாநாடும் தோற்றம் பெற்றிருக்கிறது. இங்கே குழுமியிருக்கும் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் நான் பூரிப்பும் பெருமையும் கொள்கிறேன்.

“உவகை உவகை
உலகத் தமிழ் மாநாட்டால்
வந்து குவியுது நெஞ்சில் உவகை உவகை”

என்ற உவகைப் பெருக்கு கொள்கின்ற அளவுக்கும் “ஆடுவோமே பள்ளி பாடுவோமே, தமிழ் ஆட்சியின் மாட்சியில் கூடுவோமே. “ஆடுவோமே பள்ளு பாடுவோமே” என்று ஆடிப்பாடி மகிழும் வகையில் இங்கே நாம் கூடியிருக்கிறோம். முத்தமிழ் வளர்த்த தஞ்சை மூதூரில் நாம் கூடியிருக்கிறோம். இயற்கலையையும், இசைக்கலையையும், நாட்டியக் கலையையும், நாடகக் கலையையும், சிற்பக்கலையையும், ஓவியக் கலையையும், கட்டடக் கலையையும் சிறப்புற வளர்த்த தஞ்சைத் தரணியில், தீந்தமிழ் வளர்க்க நாம் கூடி இருக்கின்றோம். உலகத் தமிழர்கள் அத்தனைப் பேரும் ஒன்று கூடியிருக்கின்றோம். நஞ்சை சூழ்ந்த தஞ்சையில், கலைகள் மலிந்த தஞ்சையில், வீரம் செறிந்த தஞ்சையில், வீரம் பொருந்திய தஞ்சையில் வெற்றிகள் பலவற்றை நிலைநாட்டிய தஞ்சையில் நாம் கூடியிருக்கின்றோம்.

தஞ்சை மாநகரமே இன்று விழாக்கோலம் பூண்டிருக்கிறது. படை பெருத்ததால், தஞ்சை சிறுத்ததோ அல்லது தஞ்சை சிறுத்ததால் படை பெருத்ததோ என்று சொல்லுகின்ற அளவுக்கு வெள்ளம் போல் தமிழர்கள் கூடியிருந்து, இந்த எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டை மிகச் சிறப்புற நடத்துகின்ற அளவிலே ஆர்வமும், அக்கறையும் செலுத்துவது கண்டு நாங்கள் எல்லாம் பூரிப்பும், பெருமையும் கொள்கிறோம்.

"வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம் அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்
றுடலினால் பலராய்க் காண்பர்
கள்ளத்தால் நெருங் கோணாதே;
எவனையும் கலங்கக் கண்டு
துள்ளும் நாள் எந்நாள் ? உள்ளம்
சொக்கும் நாள் எந்த நாளோ" ?

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதற்கிணங்க, 'அந்த நாள் இந்த நாள்' என்று சொல்லத்தக்க அளவுக்கு உலகத்தமிழர்கள் ஒன்று கூடியிருக்கின்ற தன்மையையும் நாம் காண்கின்றோம்.

இந்த மண், பராந்தக சோழனும் இராஜ ராஜ சோழனும், இராஜேந்திர சோழனும், குலோத்துங்க சோழனும், கண்டராதித்த சோழனும், விக்கிரம சோழனும் ஆண்டு வீரத்தை நிலைநாட்டிய பூமியாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, 1968இல் சென்னையில் நடந்தது பொன்மனச்செம்மல் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களுடைய காலத்தில் ஐந்தாவது தமிழ் மாநாடு, மதுரையில் சிறப்புற நடந்தேறியது. 1966இல் முதல் மாநாடு, கோலாலம்பூரில் நடைபெற்றது. 1970இல் மூன்றாவது மாநாடு, பாரீசில் நடைபெற்றது, 1974இல் நான்காவது மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. ஐந்தாவது மாநாடு மதுரை மாநகரில் நடைபெற்றது, ஆறாவது மாநாடு, 1987இல் கோலாலம்பூரில் நடைபெற்றது. 1989இல் ஏழாவது மாநாடு, மொரீஷியஸ் நாட்டில் நடைபெற்றது.

எதையும் செயற்கறிய முறையில் செய்து காட்டுவதில், இராஜராஜ சோழன் மிக வல்லமைக் கொண்டவனாகத் திகழ்ந்தான்.

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய மூன்றுமே ஊர்வலமாக வந்த காட்சிகளை, நாம் எல்லோரும் சிறப்புறக் கண்டுகளித்தோம். இந்த மாநாட்டிற்குப் பொலிவு சேர்க்கவும் வலிவு சேர்க்கவும் வருகை தந்திருக்கிற பல இலட்சக்கணக்கான மக்களை நான் மனதார வரவேற்கிறேன். உங்களுடைய வருகை மிகச் சிறப்புற அமைக என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன் அனைவரும் வாரீர், வாரீர் என அழைக்கிறேன்.

"வெற்றி முரசு கொட்டுவீர் வீர எக்காளம் ஊதுவீர் ? எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கை முழங்குவீர்"

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள்; ஆண்மைச் சிங்கத்தின் கூட்டம் என்று சிறியோருக்கு ஞாபகம் செய்ய நாம் முழங்குகிறோம்.

'வெங் கொடுமை சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித்தோள்கள் கங்கையைப் போல், காவிரியைப் போல் கருத்துக்கள் ஊறும் உள்ளம். எங்கள் உள்ளம் செங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ் எங்கள் மூச்சாம், அந்த வீரநடை போடுகின்ற இந்த மாநாடு, சிறப்புற நடைபெற உங்கள் அனைவரையும் மீண்டும் மீண்டும் வருக வருக என்று வரவேற்பதில் நான் பூரிப்படைகின்றேன். பெருமைப்படுகிறேன் என்று கூறி, உங்கள் அனைவரையும் வரவேற்பதிலே பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

– தஞ்சாவூரில் நடைபெற்ற 8ஆவது உலகத் தமிழ் மாநாட்டில் ஆற்றிய உரை (1995)

தமிழுக்கு சிறப்பு அளிக்கின்ற நிதிநிலை அறிக்கை

- டாக்டர் **நாவலர்** அவர்கள்

மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, 1962–1963ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கை, கனம் நிதி அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தினுடைய ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ளது. சென்ற ஆறு நாட்களாக, ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிய தங்கள் தங்கள் கருத்துக்களை, தங்கள் தங்கள் கொள்கை, கோட்பாடு, நோக்கம், குறிக்கோள் ஆகியவற்றின் அடிப்படையில், இந்த மாமன்றத்தின் முன்னால் எடுத்து வைத்திருக்கின்றார்கள். பொதுவாக, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களையும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களையும் தொகுத்தும் வகுத்தும், அவற்றிலே முக்கியமானவற்றை வற்புறுத்தி எடுத்துச் சொல்கின்ற வாய்ப்பை பெறுகின்ற முறையில்தான் நான் இறுதியாக இங்கே பேச முன்வந்திருக்கின்றேன்.

இருதரப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கள் அத்துணையையும் ஆராய்ந்து பார்த்து, அவை பற்றிய தம்முடைய கருத்துக்களையும், அவை பற்றிய முடிவுகளையும் நமக்களிக்க, எனக்கு பின்னால், நிதிநிலை அறிக்கை எடுத்து வைத்த கனம் நிதியமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் இங்கு கருத்துக்கள் பரிமாறப்பட்டு வருகின்றன. இந்த நிதிநிலை அறிக்கை மிகப்

பெரியதாகவும் – அளவிலே பெரியதாகவும், பக்கங்களிலே பெரியதாகவும், உள்ளே வருகின்ற கருத்துக்களில் வரி இனங்களில் பெரியதாகவும், அதைப் படித்துக் காட்டுவதில் பெரியதாகவும் இருக்கிறது என்பது நகைச்சுவையின் அடிப்படையிலே எடுத்துரைக்கப்பட்ட ஒன்றாகும். இது இழித்துரைக்க வேண்டுமென்றோ, குறைத்து மதிப்பிட வேண்டும் என்றோ சொல்லப்பட்டது அல்ல; சாதாரணமாகப் பேசுகின்ற நிலையில், கனம் முதலமைச்சர் அவர்கள் கூட, இதை நகைச்சுவையின் அடிப்படையிலேதான் எடுத்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆகவே, அறிக்கை வளர்ந்திருப்பது குற்றத்தின்பாற்பட்ட ஒன்றல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். விளக்கங்கள் அதிகமாகத்தந்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறும் குறைபாடுகளுக்கும், குற்றங்களுக்கும் நல்ல சமாதானம் எடுத்துவைக்கின்ற வகையிலே நிதிநிலை அறிக்கை இருக்க வேண்டும் என்ற கருத்தைத்தான் நாங்களெல்லொரும் எடுத்து வற்புறுத்திக் கொண்டுவருகிறோம்.

இந்த ஆண்டு எடுத்து வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை கூடுமான வரையில் நல்ல, எளிய, இனிய தமிழில் ஆக்கித் தரப்பட்டிருக்கிறது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் தனியாகப் பேசும்போது, “இதற்கு முன்னால் வைத்த நிதிநிலை அறிக்கைகள் எல்லாம் முதலிலே ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, பிறகு தமிழாக்கம் செய்யப்பட்டன. ஆனால் இந்த முறை நிதிநிலை அறிக்கை தமிழிலே ஆக்கப்பட்டு, பிறகு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது” என்று எடுத்துச் சொன்னார்கள். அந்த முறையிலே தமிழுக்குச் சிறப்பு அளிக்கின்ற தன்மை ஏற்பட்டிருப்பது உள்ளபடியே மகிழ்வுக்கு உரிய ஒன்றாகும்.

இந்த நிதிநிலை அறிக்கை பற்றிய கருத்துக்களை எடுத்துச் சொல்கின்றபோது, இந்த நிதிநிலை அறிக்கை முழுவதும், அறவே, அப்படியே முழுக்க முழுக்க, ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று எடுத்துக்கூறியவர்களும் இல்லை; இந்த நிதிநிலை அறிக்கை அறவே, முழுக்க முழுக்க, ஒதுக்கிப் புறக்கணிக்கப்பட வேண்டும் என்று எடுத்துக்கூறியவர்களும் இல்லை. எடுத்துச் சொன்னவர்கள் குறைகளை எடுத்துச் சொன்ன அளவிலே வேண்டுமென்றால் கூடவும் குறையவும் சொல்லி இருக்கலாம். அந்தக் குறைகள், குற்றங்கள், இவைகளினுடைய தன்மைகள் அந்தந்த கட்சிகளுடைய கொள்கை, கோட்பாடு, நோக்கம் ஆகியவற்றினுடைய அடிப்படையில் எடுத்துச்சொல்லப்பட்டவைகளாக இருக்கலாம். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் குற்றங்குறைகளை எடுத்துச் சொல்லும்போதெல்லாம், ஆளும்கட்சி உறுப்பினர்கள், “குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்” என்ற முறையில் இழித்தும் பழித்தும் பேசினார்கள். ஜனநாயக அமைப்பில் எதிர்க்கட்சியாக அமைந்திருப்பது, ஆளும்கட்சி செய்வதிலே இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டுகிற, குற்றங்களை எடுத்துக்காட்டுகிற வாய்ப்பையும், அத்தகைய உரிமையையும் பெறுவதற்கேயாகும். அவைகளை ஆய்ந்து, அந்தக் குறைகளைப் போக்கவும், குற்றங்களை நீக்கவும் ஆன முறையில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் –அமைச்சர் குழுவைச் சார்ந்தவர்கள் – செய்யவேண்டும் என்ற முறையில்தான் குற்றங்குறைகளை எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எடுத்து வைக்கின்றார்கள். குற்றத்தைச் சொல்வது, குறையை எடுத்துச் சொல்வது என்பது அவரவர்கள் உள்ளத்தின் அடிப்படையில் எழுகின்ற நீதி, நேர்மை, மனப்பான்மை இவைகளைப் பொறுத்திருக்கிறது. இதைக் குறித்துத் தீர்ப்பளிக்க வேண்டும்

என்றால், அந்தக் குற்றங்குறைகளுக்குப் பதில் உரைக்க இருக்கிறவர்கள் தீர்ப்பளிக்க வேண்டியவர்களாக இருக்கமாட்டார்கள். இரண்டு சாரார்களுடைய கருத்துக்களையும் கேட்டு, கேட்கப்பட்ட குறை எல்லாம் உள்ளபடியே கேட்கப்படவேண்டிய குறைகள்தானா, அல்லவா என்று தீர்மானிக்க வேண்டியவர்கள் நடுநிலைமையாக இருந்து சிந்திப்பவர்களாக இருக்க வேண்டும். ஆனால், இந்தக் குற்றத்தைத்தான் கேட்கலாம், இன்ன குறைகளைத்தான் சுட்டிக் காட்டலாம் என்று அதற்குப் பதில் உரைக்கத்தக்க நிலையில் இருப்பவர்கள் இங்கு தீர்ப்பளிக்கிறார்கள்.

ஆகவே, குறைகளை நாங்கள் எடுத்துச் சொல்கிறோம் என்றால், நாங்கள் மனதார எண்ணுகின்றவற்றை இங்கே எடுத்துவைக்கின்றோம். அவை குறைகள் அல்ல, அவை குற்றங்கள் அல்ல என்றால் அவற்றிற்கேற்ற சமாதானம் கூறவேண்டிய அத்தகைய பொறுப்பு ஆட்சி பீடத்தில் இருக்கிறவர்களையே சார்ந்ததாகும். அந்த முறையில் நாங்கள் எடுத்து வைக்கின்றோம். வரிகள் கூடாது என்றோ, திட்டங்கள் நிறைவேற்றப்படக் கூடாது என்றோ எதிர்த்தரப்பிலிருக்கிற எங்களில் யாரும் எண்ணவும் இல்லை; பேசவும் இல்லை. ஒரு நாடு வாழவேண்டுமென்றால், வளம்பெற வேண்டுமென்றால் அந்த நாடு வாழ்வதற்குரிய, வளம்பெறுவதற்குரிய திட்டங்கள் தீட்டப்படவேண்டும். அப்படித் தீட்டப்படுகிற திட்டங்கள் அடிப்படையிலேயே இன்றைக்கு அகில உலகத்து நாடுகளும் தங்கள் தங்களுடைய வாழ்வையும், வளத்தையும் பெருக்கிக்கொள்ளுகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றன என்பதை அறியாதவர்கள் அல்ல நாங்கள். திட்டங்களை மிகவும் திறமையாகப் போட்டு, அவற்றை மிகவும் திறமையாக நிறைவேற்றி வளத்தையும்; வாழ்வையும் பெற்று உயர்ந்திருக்கும் சிறந்த நாடுகளையும் நாம் பார்க்கிறோம். ஆகவே, திட்டங்களே கூடாது, வரிகளே கூடாது என்று நாங்கள் சொல்லவரவில்லை.

வருவாயின் அடிப்படையிலேயே ஓர் ஆட்சி நடைபெறவேண்டும். சாதாரணமாக ஒரு குடும்பத்தின் வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பது என்றால் வரவுக்கேற்ற செலவு செய்யவேண்டும் என்ற இலக்கணத்தின் அடிப்படையில் அது வரையறுக்கப்படவேண்டும். ஆனால், செலவுக்கேற்ற வருவாயைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய இலக்கணம் என்று பொதுவாக எடுத்துச் சொல்வார்கள். நாங்கள் எல்லாம் இப்போது சொல்வது வரியே போடக்கூடாது என்பது அல்ல. தாங்கக் கூடிய சுமை அளவு வரிகளை தாங்கக்கூடியவர்களின் பேரில் போடுவது, அந்த வரிகளைக் கட்டக்கூடிய வருமானம் உள்ளவர்களின் மீது போடுவது என்பதுதான். அத்தகைய வரியினங்கள் வருவதைப் பற்றிக் கருத்து வேறுபாடு இல்லை. நாங்கள் எடுத்துச் சொல்வது தாங்கக் கூடியவர்களின் மீது விதிக்கக் கூடிய வரியினங்கள், அவற்றைத் தாங்கக் கூடாதவர்களின் தலையில் விழுகின்ற அளவில் இருக்கின்றனவே, ஆகவே, சிறிது சிந்தியுங்கள், மாற்றுங்கள், தாங்க முடியாதவர்களின் தலையில் இந்த வரிகள் விழுந்துவிடாதபடி தாங்கக் கூடியவர்களின் மீதே போடுங்கள் என்பதுதான். பொதுவாகத் தாங்கக் கூடியவர்களின் மீது தான் நாங்கள் வரி போடுகிறோம் என்று இவர்கள் சொல்லிவந்தாலும், அந்தந்த வரிகளைத் தாங்கக்கூடியவர்கள் நாளாவட்டத்தில் தாங்கக் கூடாதவர்களுடைய தலையில் ஏற்றுகின்ற நடவடிக்கைகள் பல்வேறு துறைகளிலே ஏற்பட்டிருக்கிற நிலைமையை நாம் கண்டிருக்கிறோம். நீங்கள் வரிப் பளுவைத் தாங்கக்கூடியவர்களின் மீதே போடுகிறீர்கள். ஆனால் இந்த

வரிப்பளுவைக் கொஞ்சங் கூட தாங்கமுடியாதவர்களின் தலை மீது மறைமுகமாகக் கூட விழாதபடி நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி விழுகிற போது இடையில் நின்று அவ்வாறு விழாதபடி தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். இவைதான் ஒரு நல்லாட்சிக்குரிய செய்கையாகும் என்று எடுத்துச் சொல்கிற முறையில்தான் நாங்கள் இந்த வரி இனங்களைப் பற்றிச் சொல்லும் போது ஏழை எளியவர்களைப் பாதிக்காதபடி இவை கொண்டுவரப்பட வேண்டுமென்ற அடிப்படையில் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏழை எளியவர்களை எந்தெந்த வரிகள் எந்தெந்த வகையில் பாதிக்கின்றன என்பதை உணர்ந்து, அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். நாட்டின் வளத்தை பல்வேறு துறைகளில் பெருக்கவேண்டுமென்றால் ஓர் அரசாங்கம் வரியினங்களையும் கொண்டு வருவது நியாயம்தான். ஆனாலும்கூட அதைப் பெறுகின்ற முறை, பெறுகின்ற இடம் இவற்றையெல்லாம் கவனிக்காது கொண்டுவருவது முறையாகாது. இன்றைக்கு போடப்பட்டிருக்கும் வரிகளோடு கூடிய இந்த நிதிநிலை அறிக்கையை, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களேகூட, “இந்த நிதிநிலை அறிக்கை மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதை மனப்பூர்வமாக வரவேற்கிறோம்'' என்று முதலில் சொல்லுகிறார்கள். பின்னர் கடைசியில் போகப் போக வரியினங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், நிலவரி, தண்ணீர் தீர்வை, மின்சார கட்டண உயர்வு, பஸ்கள் மீது போடப்படும்படியான வரி இவைகள் எல்லாம் எந்தெந்த வகையில் மக்களைப் பாதிக்கும் என்பதை எடுத்துச் சொல்லி அவற்றையெல்லாம் எடுத்துவிட வேண்டுமென்ற முறையில்தான், நீக்கிவிட வேண்டுமென்ற முறையில்தான், ஆளும்கட்சி உறுப்பினர்களே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் கடமைதான் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களாகிய எங்களுக்கு அமைந்திருக்கிறது. ஆங்கிலத்தில் சொல்கிறபோது “The Ruling Party has its way and the Opposition party has its say'' என்று இன்னின்ன குற்றங்கள் இருக்கின்றன, குறைகள் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்வதற்காக எதிர்க்கட்சியினர் வீற்றிருக்கிறார்கள். அவற்றைக் கண்டு ஆராய்ந்து நீக்குவதற்கேற்ற வழிவகைகளை மேற்கொள்வதற்கு ஆளும் கட்சியினர் செயல்பட வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் எதிர்க்கட்சியைச் சேர்ந்த எங்களால் குற்றங்குறைகள் எடுத்துவைக்கப்படுகின்றன.வரிகளை அறவேபெருக்கக்கூடாதுஎன்றுசொல்லவில்லை.

“வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை'',

என்று வள்ளுவப்பெருந்தகையார் மிக அழகுபட எடுத்துக் கூறினார்கள். ஓர் நல்லாட்சி நடைபெறவேண்டுமானால் வரியைப் பெருக்கவேண்டும். ஒரு நாட்டின் வளம் பெருகுவதற்கு வருமானம் மிகவாக வேண்டும். ஆகவே, வருமானத்தைப் பெருக்குவதற்கான காரணங்களை ஆராயவேண்டும். ஆராய்ந்து அந்த வினையைச் செய்கின்ற முயற்சியில் ஈடுபட வேண்டும். வருமானத்தைப் பெருக்குவதற்காக நாம் யார் யாருக்கு வரிகள் விதிக்கின்றோமோ அவர்கள் அந்த வரியைத் தங்கள் தங்கள் வருமானத்தில் இருந்து கொடுக்காமல், அந்த வரிச்சுமையைத் தாங்க முடியாதவர்களின் பேரில் ஏற்றும்படியாக விட்டுவிடக்கூடிய நிலைமை இருக்குமானால் அதைத் தடுத்து நிறுத்தவும் சிந்திக்கவேண்டும். இப்படியெல்லாம் சிந்தித்து செயல்படுவதற்கு

முயற்சிக்கவில்லையானால், நாம் யாருக்கோ வரி போட, அவர்கள் மறைமுகமாக அந்த வரிகளை எல்லாம் யார்யாரிடமிருந்தோ வாங்க முயற்சிசெய்ய, அந்த நிலைமையைத் தடுக்க வழிவகுக்கவில்லையானால் –அந்த வினைகளை ஏற்றுக்கொள்வதைவிட, ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது நல்லது என்ற அடிப்படையில்தான் பலர் எடுத்துக்கூறினார்கள். வரியினங்களைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தவிர திட்டங்கள் கூடாது என்று சொல்லவில்லை. திட்டங்கள் தேவைதான். முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று போட்டிருந்தாலும் நம் நாட்டுக்கு ஒரு பலனும் ஏற்படவில்லை என்று எடுத்துச் சொல்லவரவில்லை. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் என்ன என்ன பலன் ஏற்பட்டிருக்கின்றன, உங்களுடைய சாதனைகள் என்ன என்று நீங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்களோ அவைகளை ஒப்புக்கொண்டு அந்தப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தான் எதிர்க்கட்சியினரும், மற்றவர்களும் சிந்தித்துப் பார்க்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள், இந்தத் திட்டங்களை இன்னும் திறமையாக, இன்னும் நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கான வழிவகைகள், வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று கருதுகிறோம்.

நம்முடைய வரியினங்களின் பெரும்பாலான வரிகளை மத்திய அரசினர் எடுத்துச் சென்றுவிடுகின்றனர். மிக முக்கியமான வரிகளை விதித்துக்கொள்ளும் உரிமையை மத்திய அரசுக்குக் கொடுத்துவிட்டோம். அவர்கள் அந்த உரிமையைக் கொண்டு இந்த நாட்டில் குறிப்பாக கடந்த பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வசூலித்து வந்திருக்கிற பணத்தின் அளவுக்கு ஏற்றவாறு திரும்ப அவர்கள் இந்நாட்டுக்கு உதவவில்லை. நாம் கொடுத்திருக்கிற அளவுக்கு ஏற்றவாறு நமக்குத் திரும்பி வந்திருக்கிற அளவு இல்லை. மிகக் குறைவாகவேதான் நம்முடைய மாநிலத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். எண்ணூறு கோடி ரூபாய் என்றும், எழுநூறு கோடி ரூபாய் என்றும் அந்த வடபகுதிகளில் உள்ள திட்டங்களுக்குச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். ரூர்க்கேலா என்றும், துர்க்காபூர் என்றும், தண்டகாரண்ய புனருத்தாரண திட்டம் என்றும் கோடிக்கணக்கான ரூபாய்களை மத்திய அரசு செலவிடுகிறது. அகில இந்தியா ஒன்று என்ற அடிப்படையில் நினைக்கின்றவர்களுக்கு இது சரியாக இருக்கலாம். ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், இந்த மாநிலத்தில் இருந்து மத்திய அரசு எந்தெந்த வகைகளில் மிக அதிகமாக வரிப்பணத்தைச் சேர்த்துக் கொள்கிறதோ அந்த அளவுக்கேற்ற பணம் நமக்குத் திருப்பிக் கொடுக்கப்படுமானால் இந்தப் புதுவரிகளைக் கொண்டு வேண்டிய அவசியமே இருந்திருக்காது என்பதுதான். இங்கே இருக்கிற அறிவும், ஆற்றலும் இங்குள்ளவர்களுக்குப் பயன்பட்டிருக்கும் என்றுதான் எடுத்துச் சொல்கிறோம். நம்முடைய உரிமைகளை மத்திய அரசுக்கு ஒப்படைத்துவிட்டு, நாம் திரும்ப அவர்களிடம் கையேந்தி நின்று, நாம் கொடுக்கிற பணத்தில் பாதியைக் கூடத் திரும்பப்பெறாது, மற்றவர்களைப் போல நாம் பெறவேண்டிய பலன்களையும் கூட இழந்து நிற்பதைக் காட்டிலும், நம்முடைய உரிமைகள் நம்மிடமே இருக்கவேண்டும் என்ற கருத்தைத்தான் நாங்கள் இந்த நாட்டு மக்களிடையே எடுத்து வைத்திருக்கின்றோம். இந்த மாமன்றத்திலும் அடிக்கடி எடுத்து வைக்கிறோம். அதற்கான ஆதரவை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுக்கு தேடிக்கொண்டு வருகிறார்கள். ஆதரவும் திரண்டு கொண்டு வருகிறது. அந்த அடிப்படையில்,

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”,

“எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”

என்பதற்கிணங்க நடுநிலையில் நின்று ஆராய்ந்து பார்க்கும் மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்கு நாங்களும் கருத்தை எடுத்துவைக்கிறோம். அத்தகைய கருத்துக்கு நாளுக்கு நாள் ஆதரவு கிடைக்கும் என்கிற நம்பிக்கையோடுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்கள் கருத்துக்களை நாட்டு மக்கள் முன் எடுத்து வைக்கிறார்கள். இந்த மன்றத்திலும் நாங்கள் எடுத்து வைக்கிறோம். மத்திய அரசினர் இந்த நாட்டில் இருந்து வரியாகத் திரட்டிப் போகிற பணத்தில் பெரும்பகுதி வடபகுதியின் வாழ்வுக்காகவே, வளத்திற்காகவே செலவிடப்பட்டுவிடுகிறது. நம்முடைய பகுதி வளம்பெறாததோடுகூட நம்முடைய திட்டங்களுக்காக நாம் மேலும் மேலும் இந்தப் பகுதியில் வரிச்சுமையை அதிகப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, நம்முடைய மாநிலத்திலிருந்து மத்திய அரசு பெற்றுப்போகிற பணத்தில் பெரும் பகுதியையாவது திரும்பப்பெற முயற்சி செய்தால் இந்தப் புது வரியினங்களுக்கே அவசியம் இருக்காது என்ற கருத்தை எடுத்துச் சொல்லுகிறோம். திட்டங்கள் என்று தீட்டப்படும்போது மக்களுடைய இன்றியமையாத தேவைகளாகிய உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், வாழ வழி, ஓய்வு நேரம், மக்கள் நுகர்வதற்கு சில உல்லாச வசதிகள் என்ற இந்த அடிப்படையில் சிந்தனை படிப்படியாக உயர்ந்திருக்கவேண்டும். இந்த நாட்டில் உள்ள மக்கள் அத்துணைப்பேர்களுக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், உறைய இடமும் அளித்திருக்க முதன்மையாக முயன்றிருக்கவேண்டும். இந்தக் குறைந்த அளவுத் தேவைகளையாவது இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். நாளுக்குநாள் மக்களுடைய அன்றாட வாழ்க்கை கடினமானதாக மாறிக்கொண்டிருக்கிறது.

தாங்க முடியாத அளவுக்கு, தவிர்க்கவும் முடியாத அளவுக்கு வாழ்க்கைச் செலவினங்கள், விலைவாசிகளின் உயர்வினால் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இந்த நிலைமையில் விலைவாசிகளின் உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டால்தான், அவர்களுடைய திட்டங்கள் நல்லமுறையில் நிறைவேற்றப்படுவதோடு மக்களுக்கும் பயன் அளிக்கக்கூடியனவாக அமையும் என்று எடுத்துக்கூறுகிறோம். இப்படி எடுத்துச் சொல்கிறபோது, விலைவாசிகள் எல்லாம் தவிர்க்க முடியாத அளவு மக்களால் தாங்க முடியாத அளவு உயர்ந்துகொண்டே போகின்றனவே என்று எடுத்துச் சொல்லும்போது, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், “அப்படி ஒன்றும் உயர்ந்துவிடவில்லை, மக்கள்—ஏழை மக்கள் தாங்கக்கூடிய அளவு தான் உயர்ந்திருக்கிறது. உயர்ந்திருக்கிறது என்றால் அவர்களுடைய வருமானமும் உயர்ந்திருக்கிறது. இதைப் பார்க்காது எதிர்க்கட்சியினர் குறைகளையே சொல்லவேண்டும் என்பதற்காக இவைகளைச் சொல்கிறார்களே தவிர, உண்மையில் நாட்டின் நிலைமை அப்படி இல்லை” என்பதாகச் சொல்கிறார்கள். நாட்டு மக்களுடைய வாழ்க்கை நிலை மிகவும் திருப்திகரமானதாக இருப்பதாக ஆளும்கட்சி உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம்

விலைவாசிப் புள்ளிவிவரங்களை நாங்கள் தயாரிக்கவில்லை. அரசாங்கமே திரட்டித் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரங்களிலிருந்துதான் நாங்களும் விலைவாசிகளைத் தெரிந்துகொள்ளவேண்டியவர்களாக, எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்துப் பார்த்துச் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

1961ஆவது ஆண்டு கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவர அடிப்படையிலே அதே நிலையும் விலையும் இப்பொழுதும் நீடித்துக் கொண்டிருக்கின்றன என்று கூறப்பட்டாலும், இப்பொழுது இன்னும் கொஞ்சம் வளர்ந்துகொண்டிருக்கிற சூழ்நிலை தன்மையைத்தான் பார்க்கிறோம். விலைவாசிகள் ஏறியிருக்கின்றன, அதைக் கட்டுப்படுத்த வேண்டும், அப்படி கட்டுப்படுத்தாவிட்டால் மக்கள் பாதிக்கப்படுவார்கள், அதனால் தொல்லைகள் பல ஏற்படும், ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழிவகை காண முடியாத நிலைமைக்குப் போய்விடும் என்று நாங்கள் சொன்னால், நாங்கள் இட்டுக்கட்டி குறைசொல்லுகிறோம் என்றும், அத்தகைய நோக்கத்தின் அடிப்படையில்தான் குற்றம் சொல்லுகிறோம் என்றும் ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பலரும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆட்சியாளர்கள் வெளியிட்டிருக்கிற 1960 – 1961ஆவது ஆண்டு கவர்னர் அவர்களுடைய உரையிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிற குறிப்புகளைக் காணவேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

“அகவிலைகள் இடைவிடாமல் ஏறிக்கொண்டு போவதுதான் நமது நாட்டின் இன்றைய பொருளாதாரத் துறையில் வருந்தத் தக்க ஒரு அம்சமாகும்” என்பதை எதிர்க்கட்சியினர் மட்டும் எடுத்துச்சொல்லவில்லை. எதிர்க்கட்சியினர் மட்டும் குறை சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே குறை சொல்லவில்லை. கவர்னர் அவர்களுடைய உரையிலே இது மிக வருந்தத் தக்க நிலை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

“அகவிலைகள் இடைவிடாமல் ஏறிக்கொண்டு போவதுதான் நமது நாட்டின் இன்றைய பொருளாதாரத்துறையில் வருந்தத்தக்க ஒரு அம்சமாகும். இதனால் மக்களுக்கு அதிக கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதிலும், முக்கியமாக குறைந்த வருமானமுள்ள மக்களுக்கு இதனால் பெருங்கஷ்டம் ஏற்படுகிறது. இந்தப் போக்கினை நாம் கட்டுப்படுத்தாவிடில், திட்டத்திற்கு எதிர்பார்க்கப்படும் நிதி வசதிகள் எல்லாம் கிடைக்காமற் போய்விடலாம். ஏனென்றால், பண வீக்கம் ஏற்படுவதால் பணத்தைச் சேமிக்கும் வாய்ப்பும், வசதியும் குறைந்துபோகின்றன. அகவிலைகளைக் கட்டுப்படுத்துகிற அம்சங்களில் – முதலீடு செய்யும் விகிதம், தொழில் கொள்கை, இறக்குமதி கட்டுப்பாடுகள், கலால் தீர்வைகள், கடன் நிபந்தனைகள், பற்றாக்குறை நாணய செலாவணி போன்ற அம்சங்களில் பெரும்பாலானவற்றை மத்திய அரசாங்கத்தார் திட்டக் கமிஷனுடன் கலந்தாலோசித்து முறைப்படுத்துகின்றனர். இது பற்றிய தமது கருத்துக்களை இந்த அரசாங்கம் தேசிய வளர்ச்சிக் கவுன்சிலிடம் கூறியுள்ளது. அந்தக் கவுன்சிலின் உயர்நிலைக் குழு ஒன்று இதுபற்றி இப்போது ஆராய்ந்து வருகிறது. இந்தக் கமிட்டியார் சந்தர்ப்பத்திற்கேற்ப இந்தப் பிரச்சினை குறித்து தீவிரமாய் ஆலோசித்து நல்லதொரு முடிவுக்கு வருவார்கள் என்று நாம் நம்புவோமாக” என்று கூறப்பட்டிருக்கிறது.

அவர்கள் என்ன யோசனை கூறினார்கள்? அந்த யோசனை எந்த அளவிற்கு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது? என்ற நிலைகளையெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கவேண்டும். 50 பக்கங்களுக்கு விரிந்து விளக்கமாக நிதிநிலை அறிக்கை உள்ளது. நிதிநிலை அறிக்கை நீண்டிருக்கிறதே என்று முதலில் எடுத்துச் சொன்னேன் நகைச்சுவைக்காக. மிக மிக முக்கியமான ஒரு பிரச்சினை பற்றி, நாட்டு மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற பிரச்சினைபற்றி, அத்துணைப் பேர்களுடைய நிலைமையையும் பாதிக்கக்கூடிய அளவிற்கு, ஏழை, எளிய, பாட்டாளி, தொழிலாளி மக்களைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு இருக்கிற பிரச்சினை பற்றி ஏதாவது சமாதானம் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்: விலைவாசிகள் உயர்வைப் பற்றியோ; அல்லது உணவுப் பண்டங்களின் விலை ஏறியிருக்கிற தன்மையைப் பற்றியோ, அல்லது அதைக் குறைப்பதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பது பற்றியோ ஏற்கெனவே கூறப்பட்டிருக்கிற நிலைமை இருந்தாலும் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதற்கான விளக்கம் பற்றியோ இந்த நிதிநிலை அறிக்கையில் எவ்வித குறிப்பும் இல்லை. இருக்கவேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்பார்ப்பதிலே எந்தத் தவறும் இல்லை. அதுமட்டுமல்ல, 1960–1961ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேகூட இறுதியில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:

"மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் இத்தருணத்தில் இரண்டாவது திட்டக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு விலைவாசிகளை, அதிலும் முக்கியமாக அத்தியாவசியமான பொருள்களின் விலைவாசிகளை, ஓரளவுக்குள் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை வகுக்கவேண்டியது மிகவும் அவசியம் என்பதை மறுமுறையும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்" என்று விலைவாசிகள் ஏறியிருக்கின்ற தன்மையை மிகுந்த அழுத்தத் திருத்தத்தோடு தெளிவாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையிலே அப்பொழுதே எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

இதை இன்னமும் வலிவுபடுத்திச் சொல்லுகின்ற முறையில், 1959–1960ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அப்பொழுது அமைச்சராக இருந்தவர் மிகத் தெளிவுபட அதே நிலைமையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் :

"விலைவாசிகளில் அடிக்கடி ஏற்படும் மாறுதல்கள்தான் நம் நாட்டின் பொருளாதார நிலையில் உள்ள மிகவும் கவலைக்கிடமான அம்சமாகும். மக்களின் அத்தியாவசிய தேவைப் பொருள்களான உணவு, உடை இவைகளின் விலையில் ஏற்றங்காணும்பொழுது மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் ஒருபுறம் இருக்க அதன் காரணமாக நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்படுவதைக் காண்கிறோம். அதிலும் திட்ட அடிப்படையில் நாம் பொருளாதாரத்தை வளர்க்க எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகளுக்கு விலைவாசி மாறுதல்கள் மிகவும் முரண்பாடாகவும் அமைந்துள்ளன. நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் குறிக்கோளுக்கிணங்க திட்டம் நிறை வேற்றப்படவேண்டுமானால், விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் அவசியமென்பதை மேன்மேலும் பல நிகழ்ச்சிகள் வலியுறுத்தி வருகின்றன. திட்ட அடிப்படையில் வளர்ச்சியும் கட்டுப்பாடற்ற விலைவாசியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. இதை மனதிற்கொண்டுதான் உணவு தானியங்களின் விலையேற்றத்தை நாம் ஆராயவேண்டியிருக்கிறது.

1957–1958ஆம் ஆண்டு பட்ஜெட் உரையில் விலைவாசிகளின் ஏறுமுகம், அன்னிய செலாவணிக் குறைவு இவை இரண்டுமே நாட்டின் பொருளாதார நிலையை பாதிக்கும் பெரும் சிக்கல்கள் என குறிப்பிட்டிருந்தேன். ஆனால் விலைவாசிகளின் உயர்வு இன்னும் பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகிறது. அதிலும் முக்கியமாக உணவுப் பொருள்களின் விலையேற்றம் கவலைக்கிடந்தரக்கூடியதாக உள்ளது. தானிய மொத்த விலை குறி எண், 1957 டிசம்பரில் 512இல் இருந்தது 1958 டிசம்பரில் 569 அளவுக்கு உயர்ந்தது. சமீப காலத்தில் விலை சிறிது அளவு குறைந்திருந்தாலும், அது முற்றிலும் அறுவடைக் காலங்களில் சாதாரணமாக ஏற்படும் விலைக் குறைவே எனத் தென்படுகிறது. ஆகவே, உணவுப் பொருள்களின் விலை வருடத்திற்கு வருடம் மேன்மேலும் உயர்ந்துகொண்டே போவதை நாம் காண்கிறோம். இதன் காரணமாக வாழ்க்கைச் செலவுக் குறி எண் ஏறுமுகமாகவே இருந்து வருகின்றது'' என்பதை 1959–1960இல் அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

''இதைப் பரிசீலனை செய்த தேசீய அபிவிருத்திக் குழு, உணவு தானிய விலையை கட்டுப்படுத்த வேண்டுமாயின் தானிய மொத்த வியாபாரம் அனைத்தையும் சர்க்காரே எடுத்துக்கொண்டு நடத்துவதுதான் வழி என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. இம்முடிவையொட்டி தற்போது நம் சர்க்கார் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை கவர்னர் தம் உரையில் கூறியுள்ளார். கூடிய சீக்கிரம் தேசீய அபிவிருத்திக் குழுவின் முடிவை அமுலாக்குவதற்கான விரிவானத் திட்டம் உருவாகுமென எதிர்பார்க்கலாம்'' என்று 1959–1960ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவ்வப்பொழுது தேசீய அபிவிருத்திக் குழுவினுடைய யோசனையை ஏற்று அதை நடைமுறைக்குக் கொண்டுவந்து விலைவாசியினுடைய ஏறியிருக்கிற எறுமுகத்தைக் குறைப்பதற்கான வழிவகைகளில் நாங்கள் ஈடுபடுவோம் என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு கொடுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் விலை ஏறுமுகத்தைக் குறைப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? கொடுத்த வாக்குறுதிகளை எந்த அளவிலே நிறைவேற்றினார்கள் ? அந்த வாக்குறுதிகளை எந்த அளவிலே நிறைவேற்ற முடியவில்லை ? அதற்கான காரணம் என்ன ? திட்டக் கமிஷன் என்ன யோசனைகள் சொல்லிற்று ? அந்த யோசனைகளைச் செயல்படுத்துவதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன ? அதன் காரணமாக ஏற்பட்ட விளைவுகள் என்ன ? என்பதைப் பற்றிய நிலைமையையும், மற்ற விளக்கங்களையும் விளக்கமாகக் கொடுத்திருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதிலும், அதற்கான பரிகாரம் வேண்டுமென்று கேட்பதிலும் தவறு ஒன்றுமில்லை. விலைவாசிகள் நாளுக்குநாள் ஏறிக்கொண்டு வருகின்றன என்று ஏறுகிற நிலைமையை எடுத்துச் சொன்னபொழுது சென்ற ஆண்டிலே இருந்த விலைவாசிகளைவிட இப்பொழுது இருக்கிற நிலைமை 2 புள்ளி அளவிலேதான் உயர்ந்து இருக்கிறது, அதிக அளவு ஏறவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சென்ற ஆண்டு எந்த நிலைமையில் இருந்தது என்பதை அப்பொழுது இருந்த கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய நிதிநிலை அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். கவர்னர் அவர்களும் தம்முடைய உரையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலையே இப்பொழுதும் இருக்கிறது, ஏறவில்லை என்று வைத்துக்கொண்டாலும்,

அந்தச் சூழ்நிலையிலும் சங்கடங்கள் இருக்கின்றன. விலைவாசி ஏற்றம் பல பொருளாதாரத் திட்டங்களை பாதிக்கக்கூடிய நிலைமையில் அமைந்திருக்கிறது. எடுத்துக்காட்டப்படுகிறது என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். நிதிநிலை அறிக்கையிலே அதற்கான விளக்கத்தை எதிர்பார்த்தோம், விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன என்று நாங்கள் மட்டும் சொல்லவில்லை. கவர்னர் அவர்களுடைய உரையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. நிதி அமைச்சர் அவர்களும் தொடர்ந்து அதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு விலைவாசிகள் இறங்கிவிட்டன என்று சொல்லுவதற்கும் காரணங்கள் இல்லை. அதே நிலையில்தான் இருக்கிறது. 2 புள்ளி கூடவே ஆகி இருக்கிறது, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் என்று கூறுகின்றார்கள். அதே நிலை அப்போது கூறப்பட்டிருக்கிற அதே நிலை இப்பொழுதும் இருக்கிறது என்ற அந்த நிலையை மாற்றுவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்? என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி இருப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். அதைப் போக்குகின்ற நிலைமைக்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன? என்பதைத்தான் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

எனவே, விலைவாசிகள் ஏறியிருக்கின்றன, குறைக்கவேண்டும் என்று அட்டைகள் தூக்கிக்கொண்டும், கொடிகள் பிடித்துக் கொண்டும், கோட்டைக்கு முன்னால் பேரணி வகுத்து நிற்பது என்பது ஜனநாயகத்திற்கோ அல்லது முறைக்கோ மாறுபட்டது அல்ல, உலகத்தில் முதன்முதலாக இப்பொழுதுதான் கொடிகள் தூக்கிக்கொண்டு, அட்டைகள் பிடித்துக்கொண்டு, முழக்கங்கள் எழுப்பவில்லை. ஆட்சியாளர்களுக்கு எண்ணத்தை உணர்த்துவதற்காக வேண்டி முதன்முதலாக நாங்கள் கொடிகள் காட்டவில்லை. கொடிகளை தூக்கிக்கொண்டும், அட்டைகளை பிடித்துக் கொண்டும் உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் தங்களுடைய குறைகளை ஆட்சியாளர்களுக்கு தெரிவித்துள்ளார்கள், இப்படித்தான் தெரிவித்துள்ளார்கள். உலக தத்துவ ஆசிரியர்களிலே மிகப் பெரியவர் என்று கருதப்படுகிற பெட்ரன்ட் ரஸ்ஸல் அவர்கள் கூட அணுகுண்டை ஒழிக்கவேண்டுமென்றும், அணுகுண்டின் மூலம் உலகமே நசிந்துவிடும், ஆகவே, அதை ஒழிக்கவேண்டும் என்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உணர்த்துவதற்கு இப்படிப்பட்ட முறையில்தான் கொடிகளை பிடித்துக்கொண்டும், தட்டிகளை ஏந்திக்கொண்டும் முழக்கங்கள் மூலமாகவும் கருத்தை உணர்த்தினார்கள். கொடிகளை பிடித்துவிட்டால், தட்டிகளை ஏந்திவிட்டால் விலைவாசிகள் குறைந்துவிடுமா என்றார்கள். கொடி பிடித்து விட்டால் அது நேரடியாகச் சென்று விலைவாசிகளை குறைத்து விடாது. கொடி பிடிப்பது, தட்டிகளை ஏந்துவது, அதிலே வாசகங்களைப் பொறித்துக் காட்டுவது என்பது கொடுத்திருந்த வாக்குறுதிகளை மறந்த ஆட்சியாளர்களை நினைவூட்டுவதற்குத்தான். 1960–1961, 1961–1962ஆம் ஆண்டுகளில் நிதிநிலை அறிக்கையிலே என்ன செய்யப்படும், இதைக் குறைப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுப்போம், விலைவாசிகள் ஏறியிருக்கின்றன, நாட்டு மக்களை அது நிச்சயம் பாதிக்கும் என்று எடுத்துச் சொன்னார்களே அதை மீண்டும் நினைவுபடுத்துவதற்கும், உணர்த்துவதற்கும், அறிவுறுத்துவதற்கும், பேரணி நடத்தப்பட்டதே தவிர, அதில் எந்தவிதமான தவறும் இல்லை. அது அரசியல் கட்சியினர் பலரும் செய்த ஒரு செயல்தான், கொடி என்ன செய்யும்? அட்டை என்ன செய்யும்? என்றால், விடுதலைப் போராட்ட காலங்களில்



எல்லாம் கொடி பிடித்தால் நடக்கும், அட்டை பிடித்தால் நடக்கும், அது உணர்ச்சிகளைத் தூண்டிவிடும், அவைகள் சிந்திக்க வேண்டியவர்களைச் சிந்திக்க வைக்கும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியவர்களை நடவடிக்கைகள் எடுக்கத் தூண்டும் என்ற முறையில்தான் போராட்டக்காரர்கள் அத்துணைப்பேர்களும் கூறிக்கொண்டிருந்தார்கள். அந்த அடிப்படையில்தான் இன்று ஆட்சி பீடத்தில் வீற்றிருப்பவர்கள் கூட, விடுதலைப் போராட்ட காலங்களில் அவர்கள் கருத்துக்களை ஆட்சிப்பீடத்தினருக்கு அறிவுறுத்த, எடுத்துச் சொல்ல இப்படிப்பட்ட முறைகளைக் கையாண்டிருக்கிறார்கள். எனவே, புதிதாக கையாள்கிற முறையாக இதை எடுக்கவில்லை. கொடி பிடித்தவர்கள், இப்படிப்பட்ட அட்டைகளைத் தாங்கி அதன்மூலம் தங்கள் கருத்துக்களை உணர்த்தவேண்டுமென்று சென்றவர்கள் அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். கண்ணீர் என்ன செய்யும்? அழுத கண்ணீர் என்ன செய்யும்? என்றால், அது அரசைக் கூட அழிக்கும் என்று வள்ளுவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்

"அல்லற்பட் டாற்ற தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

கொடி என்ன செய்யும்? அட்டை என்ன செய்யும்? என்று கேட்டால் அது மக்களின் கோரிக்கைகளை ஆட்சியாளர்களுக்கு உணர்த்த பயன்படும். இந்தப் பேரணி அடியோடு

பயன்படாத ஒன்று என்று ஆளும்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் கூறவில்லை. இங்கே வந்து பேரணி நடத்துவதற்குப் பதிலாக சினிமாக்காரர்கள் வீட்டிற்கு முன்பு சென்று நடத்தினால் அவர்களிடமிருந்து பணம் பெற இயலும், அதனால் பயன் ஏற்படும்; கிராமங்களுக்குச் சென்று எடுத்துச் சொன்னால் அதனால் பலன் ஏற்படும் என்று சொன்னார்கள். ஆக, இப்பேரணிகளினால் பலன் உண்டு என்று ஒப்புக்கொண்டது குறித்து மகிழ்ச்சிதான். அங்கே போய் செய்யுங்கள், அதனால் பலன் ஏற்படும்; இங்கே செய்தால் அதற்கு நாங்கள் இடம் கொடுப்பதற்கில்லை என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பற்றி ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேலியும், கிண்டலுமாகப் பேசியிருப்பது பற்றி நான் வியப்படையவில்லை. ஆளும்கட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கட்சியில் உள்ளவர்களைப் பற்றித் தாழ்மைப்படுத்தி இப்படித்தான் சொல்வார்கள். ஒரு விடுதலை இயக்கத்தை, அது ஆளும் கட்சிக்கு விரோதமாயிருக்கிறபோது ஆளும் கட்சியினர் அந்த விடுதலை இயக்கத்தினரை எப்படி கண்காணிப்பார்கள் என்பதை அண்ணல் காந்தியார் ஒரு முறை அழகுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதலில் அந்த இயக்கத்தினரை ஆட்சியாளர்கள் அலட்சியப்படுத்துவார்கள், பிறகு கேலி செய்வார்கள், பிறகு குறை சொல்வார்கள், பிறகு அடக்குமுறைக்கு ஆளாக்குவார்கள், பிறகு மக்களின் ஆதாவு அந்த இயக்கத்திற்கு வந்தே தீரும் என்று அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எங்கள் நம்பிக்கையை குறை சொல்லலாம், குறைத்து மதிப்பிடலாம், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள். “காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு” என்பார்கள். அவரவர்கள் கொள்கையில் நம்பிக்கை வைத்து அதில் போராடி விடுதலை பெறமுடியும் என்று நினைத்து நடந்து வருகிறார்கள். அந்த அடிப்படையில்தான் நாங்கள் நடந்து வருகிறோம்.

வரி வரும் என்ற நிலையை முதலமைச்சர் அவர்கள் மதுரையில் எடுத்துக் காட்டினார்கள். அப்படிப் போடப்படுகிற வரி ஏழை எளியவர்களைப் பாதிக்கக்கூடிய வரியாக இருக்க வேண்டாமென்றுதான் பேரணியில் எடுத்துச் சொன்னோம். அதில் எந்தவிதத் தவறும் இருப்பதாக நான் கருதவில்லை. நடவடிக்கைகளை இழித்துப் பழித்து பேசி விடுவதால் கழகத்தை ஒழித்துவிட முடியும் என்று கருதிக்கொண்டு ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசுகிறார்கள். ஆகவே, இது சனநாயக முறைக்கு மாறுபட்டதல்ல.

அவைத் தலைவர் அவர்களே, டாக்டர் லோகநாதன் அவர்கள் தம்முடைய அறிக்கையில் கூறியிருக்கிற கருத்துப்படி, அரசினரே மேற்கொள்ளும் கொள்முதல்–விற்பனைக் கட்டுப்பாட்டின் மூலம் செய்யவேண்டுமென்ற அத்தகைய கருத்தை ஆட்சியாளர்கள் திறம்பட நிறைவேற்ற வேண்டும். அந்தக் கட்டுப்பாட்டை மீறுகிறவர்களுக்கு கடும் தண்டனை விதிக்கும் அளவுக்கும் நடவடிக்கைகளை எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று நான் ஆட்சியாளர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய வரிகளைப்பற்றி, குறிப்பாக பஸ் வரியைப் பொறுத்த வரையிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துக்களை

எடுத்து வைத்தார்கள். அந்த முறையிலே, பஸ் முதலாளிகளைப் பாதிக்கிற அளவுக்கு, பஸ் முதலாளிகளிடமிருந்து பெறுகிற அளவுக்கு மட்டும் இந்த வரி இருப்பதிலே எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. பிரயாணிகளுடைய தலையில் விழாத அளவுக்கு பாதுகாப்புத் தரவேண்டிய பொறுப்பை ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற கருத்தைப் பலரும் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். அதையே நான் வலியுறுத்துகிறேன். இப்போதே மைலுக்கு 4,5,6 காசுகள் அளவுக்கு கட்டணம் வைத்திருப்பவர்கள் மேலும் அதிகமாக ஆக்கிவிடுவார்கள், மேலும் உயர்த்துவதற்கான முயற்சியில் ஈடுபடுவார்கள் என்றும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பெரிய பஸ் முதலாளி ஒருவர், அறிக்கையொன்றில் சொல்கிறபோது கூட, ‘இப்போது போடப்பட்டிருக்கிற வரியின் அளவை வைத்துப் பார்த்தால் பஸ்களை ஓட்டுவது கடினமாக அமையக் கூடும், ஆகையால், பஸ் கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்ற நெருக்கடிக்கு பஸ் முதலாளிகள் உள்ளாவார்கள்’ என்றும் கூட அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் ஆட்சியாளர்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு, பஸ் கட்டணத்தை உயர்த்தாத அளவுக்கு, ஏழை, எளிய நடுத்தர மக்கள் செல்வதற்குப் பற்றுக்கோடாக அமைந்திருக்கிற சாதனம் என்ற வகையில் அவர்களைப் பாதிக்காத அளவுக்கு காப்பாற்றித் தரவேண்டிய பொறுப்பை இந்த ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதையும் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

லாரி வரியைப் பொறுத்த அளவில் பல பேர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆளுங்கட்சியிலிருந்து பல பேர் எடுத்துச்சொன்னார்கள். இப்போது லாரிகளில் பெரும்பாலானவைகள் இன்றியமையாப் பொருள்களை எடுத்துச் செல்வதற்காகவும், உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்காகவும், பயன்படுத்தப்படுகிற காரணத்தால் அந்த லாரிகளுக்கு வரி ஏற்றுவதன் மூலம், உணவுப் பண்டங்கள், மற்ற இன்றியமையாப் பொருள்கள் விலை தூக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. லாரியை வைத்திருப்பவர்கள், பஸ் வைத்திருப்பவர்கள் அடைகின்ற இலாபத்தின் அளவுக்கு வருமானம் அடைய முடியாத அளவில் பல பேர் இருக்கிறார்கள் என்ற கருத்தும், அதிலே பழக்கப்பட்ட ஒருவரால் தெரிவிக்கப்பட்டது. எனவே, உணவுப் பண்டங்களினுடைய விலை ஏறவும், அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏறவும் அடிப்படை காரணமாக அமையக்கூடிய வகையில் அமைந்திருக்கிற லாரிக்குப் போட்டிருக்கும் வரியை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது 5,352 பஸ்கள் ஓடுவதாகவும் அதன் மூலமாகச் சர்க்காருக்குக் கிடைத்திருக்கும் வரி 1959–1960இல் நான்கு கோடியே நாற்பத்தி ஏழு இலட்சம் ஆகும். 1960–1961இல் இந்த வரி மூலம் ஆறு கோடி ஐந்து இலட்சம் ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. மேலும் மேலும் பஸ் ரூட்டுகளைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளையும் பெருக்கித் தரவேண்டுமென்ற விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கிற நிலைமையையும் பார்க்கிறோம். எனவே, லாரியினுடைய வரியைக் குறைத்துப் பஸ் தொழிலின் மீது அந்த வரியைப் போட்டு, பஸ் முதலாளிகள் மட்டுமே அந்த வரியைக் கொடுக்கும் வகையில், பிரயாணிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டிலே நம்முடைய அரசாங்கமானது ஏழு கோடியே பதினைந்து இலட்சம் ரூபாய்க்கு வரி போட்டுத் தீருகிற நெருக்கடியில் இருக்கிறது. திட்டங்களை நிறைவேற்ற இந்த வரிகளைப் போடவேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. ஆளும்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் இதற்கான கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள், இப்போது இருக்கிற நிதிநிலை அறிக்கையை, ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் மதிப்பீட்டின் அளவோடும். கிடைக்கும் வருவாயின் அளவோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வருமானத்தைப் பெருக்கித்தரும் அளவுக்கு ஏற்கனவே போடப்பட்ட வரிகளே தந்து கொண்டிருக்கின்றன என்பதை உணர்ந்துகொள்ள முடியும். ஆண்டுக்கு ஐந்து கோடி, ஆறு கோடி, ஏழு கோடி அதிகமாகத் தரும் அளவைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. அந்த முறையில் இப்போது போடப்பட்டிருக்கும் வரிகள் மூலம் எதிர்பார்க்கும் தொகை ஆறு கோடி சில்லரை ரூபாய் என்றால் இது பத்துக் கோடி ரூபாய்க்கு மேல் வரக்கூடுமென்று எதிர்பார்த்தே சொல்கிறார்கள்.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது ஏழைகளையும் உழவர்களையும் பாதிக்கக் கூடிய அளவில் இருக்கும் நில வரி, மின்சார வரி, தண்ணீர்த் தீர்வை ஆகியவற்றைக் குறைக்க வழிவகைகள் ஏற்படக்கூடும். எதிர்பார்க்கப்படும் வருமானம் ஆறு கோடி சில்லரை என்பது பத்து, பன்னிரண்டு கோடி அளவுக்கு வளர வாய்ப்பு இருக்கிறது. இந்தச் சூழ்நிலைதான் கடந்த ஆண்டுகளில் இருந்து வந்திருக்கிறது. ஏழை, எளிய பாட்டாளி மக்களான விவசாயப் பெருங்குடி மக்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் நிலவரியையும், தண்ணீர்த் தீர்வையையும், உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான வரியையும் எடுத்துவிட முயற்சி செய்யவேண்டுமென்று இந்த ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின்சாரம் கொடுப்பதில் ‘லோ டென்ஷன், ஹை டென்ஷன் பற்றிய கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ‘ஹை டென்ஷன்’ மூலமாக மின்சாரம் பெறுகிறவர்கள் இலாபத் தொழிலை நடத்துகிற காரணத்தால் அதிலே வரி போடுவதால் பாதகம் ஏற்பட முடியாது. சாதாரண, அத்தியாவசியமான பணிகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறவர்களுக்கு ‘லோ டென்ஷனுக்கு’ வரியை எடுத்துவிட்டு மற்றவர்களுக்கு போடப்பட்டிருக்கும் வரி மூலம் கிடைக்கும் அத்தகைய வருமானத்தை வைத்துக்கொண்டே இந்தச் செலவினங்களைச் சரிகட்ட வழி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தவரையில், மது விலக்கப்பட்டதைப்போல் இதுவும் ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று என்பது பல பேருடைய கருத்து. ஆகவே, அதற்குப் போடப்பட்டிருக்கும். வரியை – ஏற்கனவே பல மெம்பர்கள் எடுத்துச் சொன்னது போல் கூட்டினாலும் கூடக் கவலை இல்லை. இந்த வரிகள் நேரடியாக ஏழைகளைப் போய்ப் பாதிக்கக் கூடிய வகையில் அமைந்திருப்பன அல்ல.

கல்வித் துறையைப் பொறுத்தவரை, 25 கோடி ரூபாயைக் கல்விப் பெருக்கத்திற்கான வழிவகைகளைச் செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதை மனமார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வகையிலே நாங்கள், திட்டங்களே கூடாது. வளர்ச்சியே கூடாது என்று எண்ணுபவர்கள் அல்ல. வளரத்தான் வேண்டும். இப்போது

நமது அரசாங்கத்தின் வருமான நிலையைப் பார்க்கும்போது, மத்திய அரசிடத்திலிருந்து கிடைக்கும் பங்குத் தொகை பதினேழு கோடியே இருபத்தோறு இலட்சம் என்றும், உதவித் தொகை பதின்மூன்று கோடியே ஆறு இலட்சம் என்றும், மாநில வரிகள் மூலம் ஐம்பத்தி நான்கு கோடியே எண்பத்தி எட்டு இலட்சம் என்றும், வரி இல்லா இனங்கள் மூலம் இருபத்தெட்டு கோடி என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வரியில்லா இனத்தின் வருமானத்தைப் பெருக்கவும், மத்திய அரசாங்கத்திலிருந்து பங்குத் தொகையை அதிகமாகப் பெறுவதற்குமான முயற்சிகளிலே இந்த அரசினர் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் தொழிலைத் தேசியமாக்குவதன் மூலமாக அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்க முடியும் என்ற கருத்தினை நாங்கள் எடுத்துச் சொல்லும்போது இப்போது எடுத்துக்கொள்ளப் போவதில்லை என்று கனம் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ‘அரசின் வருமானத்தைப் பெருக்க நீங்கள் என்னென்ன வழிவகைகளை, திட்டங்களைச் சொல்கிறீர்கள்’ என்று கேட்கும்போது, நாங்கள் சிலபல வழிவகைகளை எடுத்துச் சொல்கிறோம். நாங்கள் கோடிட்டுத்தான் காட்ட முடியும். கனம் அமைச்சர்கள்தான் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, நிபுணர்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, வாய்ப்புகளும் வசதிகளும் ஏற்படக் கூடுமா என்பது பற்றி புள்ளிவிவரத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள்.

திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பணம் சேகரிக்கும் முறையிலும் கூட இப்போது எளிதாகப் பணத்தைப் பெற்றுப் பயன்படுத்துகிற அளவு ஆயுள் இன்ஷுரன்ஸ் கம்பெனிக்குக் கிடைக்கிற தொகையிலிருந்து திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுத்தப்படுகிறது. இந்த முறையிலும் கூட அந்தந்த வட்டாரத்தில் அதாவது அந்தந்த மாநிலத்தில் ஆயுள் இன்ஷுரன்ஸ் கம்பெனிக்குக் கிடைக்கும் தொகையை, அந்தந்த மாகாண வளர்ச்சிக்கே செலவழிக்கப்படும் அளவுக்கு, பெரும் பகுதி ஒதுக்கப்படும் அளவுக்கு மத்திய சர்க்காரை வற்புறுத்திப் பெற இந்த ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகிறேன். மேலும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் வருமானம் உள்ளவர்கள் கட்டாயம் ஆயுள் இன்ஷுரன்ஸ் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று ஏற்படுத்தும் சட்டத்தைச் சிபாரிசு செய்வதன் மூலமாக வருமானத்தை பெருக்கி, அதைத் திட்டங்களுக்கும், மற்றவைகளுக்கும் செலவழிக்கும் முறைகளை கொள்வார்களேயானால் புதிய வரிகள் போடவும், ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்படாதிருக்கும்படியான சூழ்நிலை வளரவும் வழி ஏற்படுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதியோர் வாழ்க்கையைக் காப்பாற்ற, அவர்களுடைய வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 20 ரூபாய் உதவி நிதியாக அளிக்க முன்வந்த ஆட்சியினுடைய செயலைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த முறையில் 60 வயதுக்கு மேற்பட்ட வறுமையில் வாடும் அத்தனை பேருக்கும் அந்த உதவித் தொகை கிடைக்கவில்லை. தங்களைச் சேர்ந்தவர்களால் புறக்கணிக்கப்பட்ட நிலைமையில் இருப்பவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகளும், குறைபாடுகளும் ஆங்காங்கே வந்து கொண்டிருக்கின்றன. வறுமையில் உழலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுடைய நெருக்கடி நிலைமைகளை உள்ளபடியே அறிந்து சலுகைகள்

முழுவதும் போய்ச் சேரும் அளவுக்கு அத்தனை பேரும் காப்பாற்றப்பட தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சனையைப் பொறுத்தவரை அது எல்லா இடங்களிலும் இருந்து வருகிறது. குறிப்பாக, சென்னை மாநகரிலும் இந்தப் பிரச்சனை இருந்து கொண்டிருக்கிறது. அதற்கான திட்டங்களைத் தீட்ட அரசியலார் முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாக வினாக்களுக்கு விடையளிக்கும்போது அமைச்சர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 'ஆந்திர பகுதியிலிருந்து சென்னை நகரத்திற்கு வேண்டிய தண்ணீரைப் பெறுவதா ? அல்லது தமிழக காவிரி ஆற்று நீரைப் பெறுவதா ?' என்ற திட்டமே அடிப்படைப் பிரச்சனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் திட்டங்கள் எல்லாம் ஆராய்ச்சியில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆந்திரத்திலிருந்து நீரைக் கொண்டு வரும் முறைகளைப் பேசிப் பெறுவதற்கான கஷ்டங்களை எடுத்துச் சொல்கிறார்கள். காவிரியாற்றிலிருந்து நீரைக் கொண்டு வரும் திட்டத்தின் மூலம் சென்னை மாநகருக்குத் தண்ணீர் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், அவ்வளவு தொலைவில் இருந்து கொண்டு வரும்போது பலருக்குப் பயன்பட வழி ஏற்படக்கூடும்.

"நெல்லுக்கு இரைத்த நீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்"

என்பதைப் போல் அங்கிருந்து தண்ணீரைக் கொண்டுவரும்போது வழியில் இருக்கக் கூடிய தமிழகப் பகுதிகளான கடலூர், திண்டிவனம், சிதம்பரம் போன்ற பகுதிகளுக்கும் குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க வழி இருக்குமா என்பதை நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து, அதற்கு வழிவகைகள் இருக்குமானால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று அரசினரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு இதழ் பதிவுபெறாதவர்களாக இருக்கும் என்.ஜி.ஓ.க்களுக்கு வாழ்க்கைச் செலவை ஈடுகட்டும் வகையில் 150 வரையில் சம்பளம் வாங்குபவர்களுக்கு ஐந்து ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். இந்த உயர்வை 300 ரூபாய் வரை ரூபாய் சம்பளம் வாங்குபவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்ற கருத்து இங்கே எடுத்துக் கூறப்பட்டது. அதிலே கவனம் செலுத்தி அந்த நிலையை நிறைவேற்ற வேண்டும். 'மத்திய அரசின் கீழ் பணியாற்றுகிறவர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்கிறது, நமக்குக் கிடைக்கவில்லை' என்று அரசு இதழ் பதிவுபெறாதவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிற அந்தக் குறைபாட்டைத் தீர்க்க, வேறுபாட்டைச் சரிகட்டும் முறையில் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற பொழுது தமிழக மாநிலம் மற்ற எந்த வகையிலும் தொழில் துறையிலே பின் தங்கிவிடவில்லை என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உள்ளபடியே பார்க்கிறபொழுது, பம்பாய் மாநிலமும், வங்காள மாநிலமும் தொழில்துறையை பொறுத்தமட்டில் முன்னேறியிருக்கின்றன. அதிக வருமானம் தரக்கூடிய தொழில்கள் அங்கு அமைந்திருக்கின்றன. முன்னேற்றத்திற்கான முயற்சியில் தமிழகம் ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. முன்னேறவேண்டுமென்ற ஆவல் கொண்டுள்ளார்கள் என்பதையும் நான் மறுக்கவில்லை. தங்களுடைய வசதிகளை பெருக்குவதற்கும், அதற்கான

திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், அதிகமான திட்டங்களை கோடிட்டுக்காட்டி பெறவேண்டுமென்று உத்தேசித்து, பெறமுடியாது இருக்கிற அத்தகைய தன்மையை மாற்றி, அதிக வருவாயை மத்திய அரசினரிடமிருந்து பெற்று, அதிக திட்டங்களை இங்கே நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை செய்யவேண்டுமென்றும் நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்வதற்கு அமைச்சர் அவையிலே வீற்றிருக்கிற அமைச்சர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். முக்கியமாக நாம் உணவுப் பிரச்சனையைப் பற்றியும், விலைவாசி ஏற்றத்தைப் பற்றியும் எடுத்துக் கூறுவதற்கும், அதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவதற்கும், ஏற்கெனவே அரசினரால் தரப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கும், அதிலே இருக்கிற சங்கடமான நிலைமையை மாற்றுவதற்கும், அதற்கான வழி காண்பதற்கும், நான் பணிவன்போடு தெரிவித்துக்கொண்டமாதிரி, அவ்வப்பொழுது அறிந்து நிலைமையைப் பார்த்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கும், வற்புறுத்துவதற்கும், அத்தகைய நிலைமைகளை எடுத்துச் சொல்லுவதற்கும், நிபுணர்கள், அரசினர் சர்வகட்சித் தலைவர்கள் கொண்ட குழுவை அமைத்து அதன் மூலம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலபேர் எடுத்துத் தெரிவித்துக்கொண்ட கருத்துக்கிணங்கவும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்துக்கொண்ட கருத்துக்கிணங்கவும், நில வரியையும், மற்றபடி தண்ணீர் தீர்வையையும், அத்துணைப் பேர்களும் சேர்ந்து கேட்டுக் கொண்டதன் காரணமாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் மிகப் பெருந்தன்மையோடு, பெரிய மனது வைத்து, அதைக் குறைத்து, ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற அதிக வரியின் மூலம் எதிர்பார்த்திருக்கக்கூடிய செலவை ஈடுகட்டுகிற நிதி வரக்கூடும் என்ற நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால், அதைச் செய்யவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

''கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்''

என்று வள்ளுவர் கூறியுள்ளார். அப்படி வரிபோடுகிறபொழுது கடிதோச்சினாலும் அதனை நிறைவேற்றும்பொழுது 'மெல்ல எறிக' என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, வரிகள் மூலம் மேலும் மேலும் ஏழை, எளிய, பாட்டாளி, தொழிலாளி மக்கள் பாதிக்கப்படாத அளவுக்கு வருமானத்தின் அளவைப் பெருக்கி, வரியின் மூலம் பெரும் வருமான அளவை நாளுக்கு நாள் குறைப்பதற்கான திட்டங்கள் தீட்டி அமைச்சர் அவர்கள் அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிறேன்.

இந்த நாடு வளம் பெறவேண்டும். வளம் பெறக்கூடாது என்று யாரும் நினைக்கவில்லை. இந்த நாட்டின் வளம் பெருக அதிகமான திட்டங்களை தீட்டவும், அவைகளை நிறைவேற்றுவதற்கும், மத்திய அரசினருடன் போராடி அதிகமான உரிமைகளைப் பெறுவதற்கும், அதிகமான நிதிகளைப் பெறுவதற்குமான எல்லா முயற்சிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நாங்கள் எங்களுடைய மனப்பூர்வமான முழு ஒத்துழைப்பையும், நல்ல ஆதரவையும் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

அரசு மாறக்கூடியது அல்ல. அது நிலை பெற்றிருக்கக்கூடியது ஆனால், ஆட்சி மாறக்கூடும். அரசு என்றென்றும் நிலைபெற்றிருக்கக்கூடிய அத்தகைய தன்மையின் அடிப்படையில் இந்த நாடு பாழ்படவேண்டுமென்றோ, இந்த நாட்டினுடைய நிருவாகம் உடைந்துவிடவேண்டுமென்றோ, நாட்டினுடைய நிருவாகம் சீர்கேடடைய வேண்டுமென்றோ நாங்கள் கருதி செய்யவில்லை. ஆட்சியின் நிலைமை அடிக்கடி மாறக்கூடும். ஆனால், அரசு என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய ஒன்று. இந்த அரசு நன்றாக இருக்கவேண்டும், நாடு நன்றாக இருக்கவேண்டும், நாடு வளம் பெறவேண்டும், நாட்டின் வருமானம் மிகுந்து நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவும், வேலையில்லாத் திண்டாட்டம் போகவும், மானமாற உடைகள் உடுக்க அத்துணைபேர்களுக்கும் வசதிகளும். அத்துணைபேர்களும் அறிவுரை பெறுவதற்கு கல்வி வசதிகளும் வேண்டும் என்ற கருத்துக்களிலே யாருக்கும் மாறுபட்ட அபிப்பிராயம் கிடையாது. ஆளும்கட்சிக்கும் இல்லை, எதிர்க்கட்சிக்கும் இல்லை. இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிற குறைபாடுகள் என்பவை எதிர்க்கட்சித் தரப்பினரிடமிருந்து மட்டும் வரவில்லை. மிகக் கடுமையாகவும், காரசாரமாகவும் ஆளும்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களிடமிருந்து கூட வந்திருக்கின்றன. அத்தனை பேர்களும் சேர்ந்து அந்த வகையிலே கனம் நிதி அமைச்சர் அவர்களிடத்திலும், மற்ற அமைச்சர்களிடத்திலும் குறைகளைத் தெரிவித்து, இதற்கு வழிவகை காணவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படித்தான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்களும் எங்களுடைய கருத்துக்களை வற்புறுத்தவும், எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சில கருத்துக்களை கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கருத்துக்களின் மீது நம்பிக்கை வைத்து, அந்தக் கருத்துக்கள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மக்களிடம் எடுத்துச் சொல்லுகிறோம். அந்தக் கருத்துக்கள் அப்படி எடுத்துவைக்கப்படும் பொழுது, அவை 'ஆகாதவை, பகற்கனவு, நடக்காதவை, கானல்நீர், நீர்க்குமிழி' என்றெல்லாம் சொன்னாலும் கூட, அதிலே நம்பிக்கை இருக்கிறது எங்களுக்கு. நாளாக நாளாக எடுத்துச் சொல்லுகிறோம். அந்த முறையில்தான் இந்த நாட்டினுடைய வருமானம், இந்த நாட்டினுடைய வளம் அதனை பயன்படுத்துகின்ற அறிவும் ஆற்றலும் படைத்தவர்கள் நம்மவர்கள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் இங்கே இருந்து செய்கின்ற நிலைமை ஏற்பட வேண்டும் என்பதைத்தான் நாங்கள் எடுத்துக் கூறுகிறோம்.

சென்ற கவர்னர் அவர்களுடைய உரையின்மீது நடந்த விவாதத்திற்கு விடை அளிக்கும்பொழுது, கனம் நிதி அமைச்சர் அவர்கள் மிகவும் உருக்கமாக, பலமுறையும் திரும்பத் திரும்ப எங்களைக் கேட்டுக்கொண்டார்கள். 'நீங்கள் இந்தப் பிரிவினையை கைவிட்டு விடுங்கள்' என்று கேட்டுக்கொண்டார்கள். நானும் அதே அளவுக்கு உருக்கத்தோடும், அதே அளவுக்கு உணர்ச்சியோடும், ஊக்கத்தோடும்தான் 'நீங்களும் உங்கள் அகில இந்திய தொடர்பை தயவு செய்து விட்டு விடுங்கள்' என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, இரண்டு பேர்களும் இப்படி கேட்டுக்கொள்ளுகிற நிலைமை இருக்கிறது. இதற்கு காலம் தீர்ப்பளிக்கும். நாட்டு மக்கள் தீர்ப்பளிப்பார்கள். ஆளும்கட்சியினர் எப்படி பணியாற்றுகிறார்களோ, அப்படித்தான் எதிர்க்கட்சியினரும் பணியாற்றுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை அத்தனைபேரும் முழுக்க அப்படியே ஆதரித்துவிடவும் இல்லை. அத்தனை பேரும் முழுக்க அப்படியே எதிர்த்துவிடவும் இல்லை. இதிலே இருக்கிற குறைபாடுகளை கனம் மந்திரி அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதற்கெல்லாம் தக்க பரிகாரம் தேடி இதற்கான வழிவகைகளைக் கண்டு,

> ''வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
> ஆராய்வான் செய்த வினை ''

என்று வள்ளுவர் கூறுவதற்கேற்ப, ஏற்படுகின்ற அல்லல்களை நீக்கி நல்லதொரு நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று கனம் நிதி அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை இந்த அளவோடு நிறுத்தி கொள்ளுகிறேன்.

– தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் 1962–1963ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கையின் போது டாக்டர் நாவலர் கலந்து கொண்டு ஆற்றிய உரை (07.07.1962)

❖ ❖ ❖

நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் படைத்த நூல்கள்

- பத்துப்பாட்டு ஆராய்ச்சி
- மறைந்த திராவிடம்
- மொழிப்போராட்டம்
- களஞ்சியம்
- கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்
- எழுச்சி முரசு
- புதிய பாதை
- வீரத் தமிழகம்
- பண்டைக் கிரேக்கம்
- ஜியோர்ட்டனோ புருனோ
- சார்லஸ் பிராட்லா
- மதமும் மூடநம்பிக்கையும்
- புறநானூற்றுப் புதையல்
- தி.மு.க.
- அண்ணாவோடு வாழ்ந்த அந்த சிறைவாசம்
- இதயம் பெரும் இன்பம்
- சிந்தனை மலர்கள்
- கலித்தொகை தரும் காதற்காட்சிகள்
- நற்றிணைக் காட்சிகள்
- சொல்லும் சுவையும் (குறுந்தொகை காட்சிகள்)
- பண்பாடு போற்றுவோம்
- நாவலர் நாட்டுக்கு அளித்த நல் அறிவிப்புகள்
- வடக்காலத்தூர் இராச கோபாலனார் வாழ்க்கை வரலாறு
- திருக்குறள் நாவலர் தெளிவுரை
- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு
- சமூக நீதிப் போர்
- திராவிட இயக்க வரலாறு
- ஜெயின் கமிசன் அறிக்கை – ஓர் ஆய்வு
- வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்
- திருக்குறள் நாவலர் உரை (கையடக்க பதிப்பு)
- திருக்குறளில் உவமைநயம்